மகாத்மா காந்தியடிகள் பிறந்திருக்கிறார். உங்களுக்கெல்லாம் சுதந்திரம் வாங்கிக் கொடுக்கப் போகிறார்" என்றா சொல்லியிருப்பார்?

### காலமறிதல்

உலகில் மிகவும் அருமையானது என்னவென்றால் அது காலம்தான். மற்றவை எல்லாம் போனால் வரும். காலமும் நேரமும் போனால் வராது. மேசை நாற்காலி போனால் வரும். ஆனால் தேர்வு நேரத்தில் ஒரு பையன் நான்கு நாள்களை வீணடித்து விட்டால் போனது போனதுதான். இன்னொரு மாணவனிடத்திலே கடன் கேட்க முடியாது. "ஒரு நாலு நாள் இருந்தால் கொடுடா! மனப்பாடம் பண்ணிவிட்டுத் திரும்பத் தந்து விடுகிறேன்" என்றெல்லாம் கேட்க முடியாது. இதற்காகத்தான் காலமறிதல், கல்வி என்னும் இரண்டு அதிகாரங்களையும் திருவள்ளுவர் எழுதியுள்ளார்.

### அழியாச்செல்வம்

இந்த உலகத்தில் எல்லாச் செல்வமும் மறைந்துவிடும்; அழிந்துவிடும். நான் வெளியூர் சென்றபோது நண்பரைக் கேட்டேன், "இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே இங்கே ஒரு பெரிய ஆலமரம் இருந்ததே, அஃது எங்கே?" என்று. "அது புயல் காற்றிலே விழுந்து விட்டது" என்று சொன்னார். அஃது அழிகிற செல்வம். "அங்கே ஒரு பெரிய கட்டடம் இருந்ததே, அஃது எங்கே?" என்று கேட்டேன். "அது மழை பெய்து இடிந்து விட்டது" என்று பதில் வந்தது. இதுவும் அழிகிற செல்வம்.

நாம் பேசும் போது, "அதோ போகிறாரே, அவர் பத்து ஆண்டுகளுக்கு முன்னே இரண்டு இலட்ச ரூபாய் வைத்திருந்தார். இப்போது எல்லாம் செலவாகிப்போய் இரண்டு ரூபாய் கடன் கேட்கிறார்" என்று சொல்வோம். இஃது அழிகிற செல்வம். கல்வி அப்படிப்பட்டதன்று. "அதோ போகிறாரே அவர் பத்து ஆண்டுகளுக்கு முன்னே பட்டம் பெற்றிருந்தார். இப்போது எல்லாம் செலவாகிப்போய் வெறும் பத்தாம் வகுப்பு ஆகி விட்டார்" என்று சொல்ல மாட்டோம். ஏனென்றால் கல்வி அழியாதது. அதனால்தான்,

*"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை"*

என்று வள்ளுவர் கூறுகிறார்.

### ஒளிவிளக்கு

கல்வி ஓர் ஒளிவிளக்கு. அதாவது இருக்கும் இடத்தை ஒளிமயமாக ஆக்குவது. அதனுடைய குறிப்பு என்னவென்றால் ஒருவன் கற்றுவிட்டால், அப்படிக் கற்ற கல்வியைப் பலருக்கும் அளிக்க வேண்டும். அப்படிப் பலருக்கும் ஒளி தருவதுதான் கல்வி. கல்வி இல்லாத நாடு விளக்கில்லாத வீடு. விளக்கில்லாத வீட்டில் யார் குடியிருப்பார்கள்? வீடு இருட்டாக இருக்கும். அதுபோல் கல்வி இல்லாத குடும்பத்தை யாரும் மதிக்கமாட்டார்கள்.

### கற்றவரும் கல்லாதவரும்

கல்வியறிவு இல்லாதவர்களைத் திருவள்ளுவர் போல் குறை கூறியவர் வேறு யாரும் இல்லை.

*விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனை யவர்*

என்னும் திருக்குறளில் கல்வியறிவு இல்லாதவனை விலங்கு என்கிறார். ஏன் விலங்கு என்று சொன்னார்? அது சொன்னால் கேட்காது. மாடு ஒன்று தெருவில் வருகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த மாட்டைப் பார்த்து, "நான் வீட்டுக்குப் போகிறேன். என் பின்னாலேயே வா" என்றால் வருமா? நம்கூட அது வருவதற்குக் கையில் பச்சைப்புல் வைத்துக்கொண்டு காட்டவேண்டும். அது மட்டுமில்லாமல் விலங்கு நல்ல செயல்களைத் தானாகச் செய்யாது.

ஒரு பசுமாடு இருக்கிறது. ஒரு பொருளை உருட்ட வேண்டும் என்றால் அது தானாகவே போய் உருட்டிவிடும். ஒருபொருளை உடைக்க வேண்டும் என்றால் தானாகவே போய் உடைத்துவிடும். ஓர் ஆளை முட்ட வேண்டுமென்றால் தானாகவே போய் முட்டிவிடும். இவ்வளவும் கெட்ட செயல்கள். இவ்வளவும் செய்த அந்தப் பசுமாடு பால் கொடுப்பது நல்ல காரியம். ஆனால் அதைத் தானாகக் கொடுக்காது. தானாகவே நம் வீட்டிற்குள் வந்து, 'எங்கே சொம்பைக் காணோமே?' என்று அதுவாகவே எடுத்து வந்து பாலைக் கொடுத்து விட்டுப் போகாது. நல்ல செயலை மனிதன் தானாகச் செய்ய வேண்டும் என்கிறார் வள்ளுவர். இன்னொருவர் வந்து சொல்ல வேண்டும் என்று காத்திருக்கக் கூடாது. நன்றின்பால் உய்ப்பது அறிவு என்று வள்ளுவர் இதற்காகத்தான் சொன்னார். அந்த அறிவைப் பெற உதவுவது கல்வி.

### கல்வியும் பள்ளியும்

கல்வி கற்பதற்காகவே குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறோம். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களால்தான் இளம்பிள்ளைகளை நல்ல குடிமக்களாக உருவாக்க முடியும். மாணவர்களில் எத்தனையோ மருத்துவர்கள் இருப்பார்கள். எத்தனையோ பொறியியலாளர்கள் இருப்பார்கள். எத்தனையோ அறிவியல் அறிஞர்கள் இருப்பார்கள். அதைக் கண்டுபிடித்துச் சொல்பவர்கள் ஆசிரியர்கள். அதை நோக்கிச் செலுத்துவதற்காகத்தான் ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.

நமது எதிர்காலத்தை உருவாக்கும் பள்ளிக்குக் கோயில் என்று பெயர் வைத்தார் பாரதியார். "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்; எங்கள் பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்" என்றார். ஏன் அப்படிச் சொன்னார் பாரதி? ஏனெனில் கல்விக் கூடங்களில்தான் குழந்தைகளின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படுகிறது. மாணவர்கள் எல்லோரும் எதிர்காலத்திலே மேதைகளாக ஆகவேண்டும். இந்த உலகமே போற்றக்கூடிய அறிஞர்களாக ஆகவேண்டும். அதற்காகத்தான் கோயில்களாகிய பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைக் கொண்டு வந்து விடுகிறோம்.

ஓர் ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுத்தார். அவர்களெல்லாம் பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு என்று படித்து வெற்றி பெற்றார்கள். அதற்குப் பிறகு இந்த ஆசிரியர் என்ன செய்வார்? அவர்களுக்கெல்லாம் வாழ்த்துக் கூறி, 'நீங்கள் எல்லாம் மேலே நன்றாகப் படித்துக் கல்லூரியில் கெட்டிக்காரன் என்று பெயர் வாங்குங்கள்' என்று சொல்லித்தான் அனுப்புவார். அப்படியில்லாமல் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்ததை எல்லாம் திருப்பியா கேட்பார்? 'என்னிடம் இருந்த கல்வியை எல்லாம் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்து விட்டேன். எல்லாக் கல்வியையும்

நீங்களே எடுத்துக்கொண்டு போய்விட்டால் அடுத்து வருபவர்களுக்கு நான் எப்படிச் சொல்லிக் கொடுப்பேன்? நான் சொல்லிக்கொடுத்த கல்வியை எல்லாம் திருப்பி கொடுங்க' என்றா கேட்பார்? கேட்கமாட்டார். ஏனென்றால் கல்வியானது கொடுக்கக் கொடுக்க வளரும். பணம் கொடுக்கக் கொடுக்க குறையும்.

### கற்க கசடற

படிக்க வேண்டிய நூல்களையும் நன்கு ஆராய்ந்து தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும். சிலர் பத்துப் புத்தகங்கள் எழுதுகிறார்கள். சிலர் ஐம்பது புத்தகங்கள் எழுதுகிறார்கள். ஆனால் திருவள்ளுவர் வாழ்நாள் முழுக்க ஒரே ஒரு நூல்தான் எழுதி இருக்கிறார். அப்படி என்றால் எவ்வளவு சிந்தித்துச் சிந்தித்து எழுதி இருக்க வேண்டும்!

சில நூல்களைப் பற்றிச் சிந்தனை செய்யவே வேண்டாம். சில நூல்கள் படித்தவுடனேயே விளங்கும். சில நூல்களைப் படித்து விட்டு ஆழமாகச் சிந்திக்க வேண்டும். பூமியிலே விளைகின்ற பொருள்களில் சில பூமிக்கு மேலேயே விளையும். கத்தரிக்காய், வாழைக்காய், கீரை இவையெல்லாம் பூமிக்கு மேலே விளையும். சில மண்ணுக்குள்ளேயே உண்டாகி இருக்கும். அவற்றை நாம்தான் தோண்டி எடுக்க வேண்டும். அதுபோல நாம் படிக்கும் நூல்களில் சிலவற்றை ஒரு முறை படித்தால் போதாது. மீண்டும் மீண்டும் ஆழ்ந்து படித்தால்தான் அதன் பொருள் விளங்கும். அப்படிப்பட்ட நூல்களை ஆழ்ந்து ஆராய்ந்து படிக்க வேண்டும். அதனால்தான் திருவள்ளுவர் 'கற்க - கசடற – கற்பவை' என்று சொன்னார். எதைப் படிக்க வேண்டுமோ அதைத்தான் படிக்க வேண்டும். எனவே, நாம் வாழ்நாள் முழுவதும் கற்போம்; கற்க வேண்டியவற்றைக் கற்போம்; நூலின் உட்பொருளை உணர்ந்து கற்போம்; அதன்படி நடந்து வாழ்வில் உயர்வடைவோம்.



### நூல் வெளி

திருக்குறள் வகுப்புகள் நடத்தியும் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் திருக்குறளைப் பரப்பும் பணி செய்தவர் திருக்குறளார் வீ. முனிசாமி. நகைச்சுவை ததும்பும் தமது பேச்சால் மக்களைக் கவர்ந்தவர் இவர். வள்ளுவர் உள்ளம், வள்ளுவர் காட்டிய வழி, திருக்குறளில் நகைச்சுவை உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். உலகப்பொதுமறை திருக்குறள் உரை விளக்கம் என்னும் இவரது நூல் பெரும் புகழ் பெற்றது. இக்கட்டுரை சிந்தனைக் களஞ்சியம் என்னும் இவரது நூலிலிருந்து தொகுத்துத் தரப்பட்டுள்ளது.





## கற்பவை கற்றபின்

கல்வி தொடர்பான பாடல் வரிகளைத் தொகுத்து எழுதுக.

(எ.கா.) கல்வி கரையில; கற்பவர் நாள் சில.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 108 14-03-2019 11:25:25

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம் ______.

   அ) கல்வி ஆ) காலம் அறிதல் இ) வினையறிதல் ஈ) மடியின்மை

2. கல்வியில்லாத நாடு ________ வீடு.

   அ) விளக்கில்லாத ஆ) பொருளில்லாத

   இ) கதவில்லாத ஈ) வாசலில்லாத

3. 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் ________.

   அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர்

   இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

4. 'உயர்வடைவோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

   அ) உயர் + வடைவோம் ஆ) உயர் + அடைவோம்

   இ) உயர்வு + வடைவோம் ஈ) உயர்வு + அடைவோம்

5. இவை + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______.

   அ) இவைஎல்லாம் ஆ) இவையெல்லாம்

   இ) இதுயெல்லாம் ஈ) இவயெல்லாம்

சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. செல்வம் 2. இளமைப்பருவம் 3. தேர்ந்தெடுத்து

குறுவினா

1. மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?
2. கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
3. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?

சிறுவினா

1. கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.
2. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?

சிந்தனை வினா

நல்ல நூலின் இயல்புகளாக நீங்கள் கருதுவன யாவை?



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 109 14-03-2019 11:25:25

விரிவானம்

இயல் ஐந்து

# பள்ளி மறுதிறப்பு

FWHRFY




ஒவ்வொரு மனிதனுக்கும் சில கடமைகள் உண்டு. அவை மனிதனின் ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ப மாறுபடும். இளமைப்பருவம் கல்விக்கு உரியது. எனவேதான் இளமையில் கல் என்று ஔவையார் கூறினார். இளமையில் கற்கும் கல்வி ஒருவனைச் சான்றோனாக உருவாக்கும். எந்தக் காரணத்திற்காகவும் கல்வி கற்பதைத் தவிர்க்கக் கூடாது என்பதை உணர்த்தும் கதை ஒன்றைப் படிப்போம்.

பள்ளி மறுதிறப்புக்கு இரண்டு நாள்கள் இருந்தன. மதிவாணனுக்குக் கோடை விடுமுறை ஒன்றரை மாதமும் ஓடி விட்டது.

பேருந்து நிறுத்தம் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. "என்ன சிந்தனையடா, மதி?" மதிவாணனின் தோளைத் தொட்டபடி கேட்டான் கவின். சிறுவர்களால் நிரம்பி வழிந்தது பேருந்து நிறுத்தம். "ரெண்டு நாள்லே பள்ளி திறக்கப் போகுது" என்றான் மதிவாணன்.




"பள்ளிக்குப் போகணும்ங்கற கவலையா?"

"கவலையில்லடா, முடிவு பண்ணணும்"

"என்ன முடிவு?"

"பள்ளிக்குப் போறதா, இல்லே பின்னலாடை நிறுவனத்துக்குப் போறதான்னு.."

"நாங்கெளெல்லாம் பின்னலாடை நிறுவனத்துக்குத்தான். நான் முடிவு பண்ணிட்டேன்" என்றான் கவின்.

"எனக்குக் குழப்பம்"

"என்னடா குழப்பம்? வாராவாரம் சம்பளம். திரைப்படம் பாக்கக் காசு கிடைக்குது. சாயங்காலமானா பரோட்டா.. இடையில போண்டா... வீட்ல யாரும் திட்டறதும் இல்லே. மகிழ்ச்சியாத்தானே இருக்கோம். இந்த மகிழ்ச்சி போதும்"



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 110 14-03-2019 11:25:25

கோடை விடுமுறை தொடங்கியபோதும் இந்தக் குழப்பம் மதிவாணனுக்கு இருந்தது. நாலைந்து நாள்கள் அக்காவீடு, அத்தை வீடு போய் வந்தான். தொலைக்காட்சி பார்த்துப் பொழுது போக்கினான்.

நண்பன் கவின் ஒரு நாள் அழைத்தான். "சும்மாதானே இருக்கே. வாடா பின்னலாடை நிறுவனத்துக்குப் போகலாம். புதிய உடைகள், எழுதுகோல்கள், குறிப்பேடுகள், வாங்கப் பணம் சம்பாதிச்சுருவே. இந்த விடுமுறையிலே வீட்லேயும் சுமையா இருக்க வேண்டியதில்லே.. பின்னலாடை நிறுவனத்துக்கு ஆளு வேணும். வாடா.." என்றான்.

சரி என்று சேர்ந்துவிட்டான். ஒன்றரை மாதங்கள் ஓடிவிட்டன. பின்னலாடை நிறுவன வேலை புதுசாக இருந்தது. ஆடைகளை அடுக்கிக் கட்டும் வேலைதான்.

சனிக்கிழமை வாரச் சம்பளம். பத்து மணிக்கும் பிற்பகலிலும் வடை, தேநீர். இரவில் பரோட்டா, தோசை என்று சுவையாகச் சாப்பிட முடிந்தது. அம்மா அவனது சம்பளப் பணத்தைப் பத்திரமாக வைத்திருப்பதாய்ச் சொன்னார். செலவழிந்து போயிருந்தாலும் கொடுத்துவிடுவார். பள்ளி திறக்கும்போது நல்லா செலவு செய்யலாம்.

நல்ல சம்பளம் கிடைக்கிறது. பின்னலாடைக்குத் தேவை மிகுதியாக இருக்கிறது. எனவே வேலைக்குக் குறைவில்லை.

அதிகாரிகள் ஆய்வுக்கு வரும்போது வெளியில் அனுப்பி விடுகிறார்கள். ஒரு வேளை கண்டுபிடித்துவிட்டால், வயது பதினைந்து என்று சொல்லச் சொன்னார்கள். பின்னலாடை நிறுவனத்துக்குப் போய்க்கொண்டே இருந்தால் அவனும் குழந்தைத் தொழிலாளிதான். வாழ்க்கை முழுவதும் தொழிலாளிதான் என்பது நினைவுக்கு வந்தது.

தொழிலாளியாக இருப்பது கேவலம் இல்லை. ஆனால், படிக்கிற வயதில் வேலை தேவையா? மருத்துவர், பொறியாளர், வெளிநாட்டு வேலை என்று அவனுக்குள்ளும் கனவுகள் இருந்தன.

படித்தால் வேறு வேலை பார்க்கலாம். அதிகமான சம்பளம் கிடைக்கும். படித்துவிட்டுச் சொந்தமாகத் தொழிலும் செய்யலாம். அப்படி இல்லாமல் இந்த வயதிலிருந்து தொழிலாளியாகவே வாழ்க்கையைக் கடத்துவதா? சிந்தித்தான்.


கல்வியறிவு முதன்மையானது. ஒரு பட்டமாவது வாங்க வேண்டும். எதிரில் இருந்த விளம்பரப்பலகை கண்ணில் பட்டது. அதில் அம்பேத்கரும் அப்துல் கலாமும் தென்பட்டனர். இவர்களைப் போல் உயரவேண்டுமானால் படிப்பு வேண்டும். படிப்பில்லாமல் உயரமுடியுமா? படிப்பு அடிப்படைத் தேவை.

பள்ளிக்குப் போகவில்லை என்று சொன்னாலும் அப்பா "சரி" என்பார். 'சம்பளம் வருதே' என்பார். இந்தக் குறைந்த சம்பளத்திற்காகப் படிப்பைத் தொலைப்பதா? போண்டாவும் வடையும் பரோட்டாவும் வீட்டில் கிடைக்காது. அவற்றுக்கு அடிமையாவதா? தலையை உலுக்கிக் கொண்டான் மதிவாணன்.

வரும் பேருந்துகள் நிரம்பி வழிந்தன. ஒவ்வொரு நாளும் இப்படித்தான். மிகுதியான கூட்டம். பேருந்தில் நுழைவது ஒரு விளையாட்டுச் சாதனை. பின்னலாடை நிறுவனத்துக்குப்



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 111 14-03-2019 11:25:25




போனால் உடையெல்லாம் கசங்கி அழுக்காகி இருக்கும். இரவும் இதே நிலைதான். பேருந்து ஒன்று வந்தது. கூட்டம் பிதுங்கி வழிந்தது. கவின் மதிவாணனின் கையை இழுத்தான். "கூட்டந்தான். ஆனா போயிடலாம்."

மதிவாணன் தன் அருகில் வந்து நின்ற முதியவரைப் பார்த்தான். முகம் இடுங்கி இருந்தது. மழிக்கப்படாத முகம். சோர்வாக இருந்தார். "இது நல்லூர் போகுமா?" என்று கேட்டார்.

மதிவாணன் வந்து நின்ற பேருந்தைப் பார்த்தான். முதியவரின் பார்வை அக்கம் பக்கமிருந்த சிறுவர்களின்மீது இருந்தது. "என்னப்பா, இது நல்லூர் போகுமா?"

அவர்களுள் ஒரு சிறுவன் பேருந்தின் முகப்பைக் கூர்ந்து கவனித்தான். எதுவும் பேசாமல் புன்முறுவல் வந்தது.

"என்னப்பா போகுமா?" என்று மீண்டும் கேட்டார் அவர்.

"யாருக்குத் தெரியும்? எங்களுக்குப் படிக்கத் தெரியாதே" என்று கூறியபடி ஒரு சிறுவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"சின்னப் பசங்களா இருக்கீங்க. இதுகூட படிச்சுச் சொல்லத் தெரியாதா?"

ஒருவன் வெறுப்புடன் இடைமறித்தான். "பெரியவரே... இதப் படிக்கக்கூட உங்களுக்குத் தெரியாதா...?" 'ஓ...'வென்று கேலியான ஓசை வந்தது. சிரித்தார்கள்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 112 14-03-2019 11:25:26

இதைக் கவனித்துக் கொண்டிருந்தான் மதிவாணன். அவர் அருகே சென்றான். "இந்தப் பேருந்து நல்லூர் போகாதுங்க. நல்லூர் பேருந்து வந்தா சொல்றேன்" என்றான்.

"சரி தம்பி".

முதியவருக்குப் படிப்பு இல்லை. பேருந்தில் எழுதி இருப்பதைப் படிக்க முடியவில்லை. இந்த வயதிலும் அவமானப்படுகிறார். கல்வியறிவு இல்லாமல் போய்விட்டால் நானும் இப்படித்தான் வாழ்க்கை முழுவதும் அவமானப்படவேண்டும். நல்ல கல்வியறிவு தலைநிமிர்ந்து நிற்க வைக்கும். நல்ல படிப்புதான் சிறந்த மனிதனாக்கும் என்ற எண்ணம் வந்தது.

பேருந்துகளின் ஓசை காதை அடைத்தது. விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினான்.

"டேய்" குரல் கவினிடமிருந்து வந்தது.

"எங்கடா போறே?"

"பள்ளிக்கு"

"பள்ளி திறக்கறதுக்கு இன்னும் ரெண்டு நாள் இருக்கே"

"பள்ளிக்குப் போறேண்டா"

சாலையைக் கடந்தபோது மதிவாணனுக்குப் பெருமூச்சு வந்தது. இறக்கைகளைக் கட்டிக்கொண்டு பறப்பது போல் இருந்தது. இப்படியே பறந்துபோய் யாருமில்லாத பள்ளியை வேடிக்கை பார்க்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

**நூல் வெளி**

இக்கதையை எழுதியவர் சுப்ரபாரதிமணியன். இவர் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற கருத்துகளை வலியுறுத்திச் சிறுகதை, புதினம், கட்டுரை முதலியவற்றை எழுதியுள்ளார்; கனவு என்னும் இலக்கிய இதழை நடத்தி வருகிறார். பின்னல், வேட்டை, தண்ணீர் யுத்தம், புத்துமண், கதை சொல்லும் கலை உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

## கற்பவை கற்றபின்

1. 'பள்ளி மறுதிறப்பு' என்னும் கதையை வகுப்பில் நாடகமாக நடித்துக் காட்டுக.
2. எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள்? வகுப்பில் கலந்துரையாடுக.

## மதிப்பீடு

மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 113 14-03-2019 11:25:26

கற்கண்டு

இயல் ஐந்து

# ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம்

GHS2JI

## ஓரெழுத்து ஒருமொழி

ஈ, பூ, கை ஆகிய எழுத்துகளைக் கவனியுங்கள்.

இவை ஒவ்வொன்றிற்கும் பொருள் உண்டு. இவ்வாறு ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.

நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் தமிழில் நாற்பத்திரண்டு ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் நொ, து ஆகிய இரண்டு சொற்களைத்தவிர ஏனைய நாற்பது சொற்களும் நெடில் எழுத்துகளாக அமைந்தவை ஆகும்.

### தெரிந்து தெளிவோம் — ஓரெழுத்து ஒரு மொழிகளும் அவற்றின் பொருளும்

1. ஆ– பசு 2. ஈ– கொடு 3. ஊ– இறைச்சி 4. ஏ– அம்பு 5. ஐ– தலைவன் 6. ஓ – மதகுநீர் தாங்கும் பலகை 7. கா– சோலை 8. கூ– பூமி 9. கை– ஒழுக்கம் 10. கோ–அரசன் 11. சா– இறந்துபோ 12. சீ– இகழ்ச்சி 13. சே– உயர்வு 14. சோ– மதில் 15. தா– கொடு 16. தீ– நெருப்பு 17. தூ– தூய்மை 18. தே– கடவுள் 19. தை– தைத்தல் 20. நா– நாவு 21. நீ– முன்னிலை ஒருமை 22. நே– அன்பு 23. நை– இழிவு 24. நோ– வறுமை 25. பா– பாடல் 26. பூ– மலர் 27. பே – மேகம் 28. பை– இளமை 29. போ– செல் 30. மா– மாமரம் 31. மீ– வான் 32. மூ – மூப்பு 33. மே– அன்பு 34. மை– அஞ்சனம் 35. மோ– முகத்தல் 36. யா– அகலம் 37. வா– அழைத்தல் 38. வீ– மலர் 39. வை– புல் 40. வௌ– கவர் 41. நொ– நோய் 42. து– உண் .

## பகுபதம்

வேலன், படித்தான் ஆகிய சொற்களைக் கவனியுங்கள்.

வேலன் என்னும் சொல்லை வேல் + அன் எனப் பிரிக்கலாம்.

படித்தான் என்னும் சொல்லை படி + த் + த் + ஆன் எனப்பிரிக்கலாம்.

இவ்வாறு சிறுசிறு உறுப்புகளாகப் பிரிக்கும் வகையில் அமையும் சொற்களைப் பகுபதங்கள் என்பர். பிரிக்கப்படும் உறுப்புகளைப் பகுபத உறுப்புகள் எனக் குறிப்பிடுவர்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 114 14-03-2019 11:25:26

### பெயர்ப்பகுபதம்

பகுபதமாக அமையும் பெயர்ச்சொல் பெயர்ப்பகுபதம் ஆகும். இதனை, பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என ஆறு வகைப்படுத்துவர்.

(எ.கா.) 1. பொருள் – பொன்னன் (பொன் + அன்)

2. இடம் – நாடன் (நாடு + அன்)

3. காலம் – சித்திரையான் (சித்திரை + ஆன்)

4. சினை – கண்ணன் (கண் + அன்)

5. பண்பு – இனியன் (இனிமை + அன்)

6. தொழில் – உழவன் (உழவு + அன்)

### வினைப்பகுபதம்

பகுபதமாக அமையும் வினைச்சொல் வினைப்பகுபதம் ஆகும்.

(எ.கா.) உண்கின்றான் – உண் + கின்று + ஆன்

### பகுபத உறுப்புகள்

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் ஆகியவையாகும்.

- பகுபதத்தின் முதலில் அமைந்து முதன்மையான பொருளைத் தருவது பகுதி ஆகும். இது கட்டளையாகவே அமையும்.
- பகுபதத்தின் இறுதியில் அமைந்து திணை, பால் ஆகியவற்றையோ, முற்று, எச்சம் ஆகியவற்றையோ காட்டுவது விகுதி ஆகும்.
- பகுபதத்தின் இடையில் அமைந்து காலம் அல்லது எதிர்மறையைக் காட்டுவது இடைநிலை ஆகும்.
- பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே இடம்பெறும் மெய்யெழுத்து சந்தி எனப்படும்.
- பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே இடம்பெறும் அசைச்சொல் சாரியை எனப்படும்.
- பகுதி, விகுதி, சந்தி, இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்.

  (எ.கா.) வந்தனன் – வா(வ) + த்(ந்) + த் + அன் + அன்

  வா – பகுதி. இது வ எனக் குறுகி இருப்பது விகாரம்

  த் – சந்தி. இது ந் எனத் திரிந்து இருப்பது விகாரம்

  த் – இறந்தகால இடைநிலை

  அன் – சாரியை

  அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 115 14-03-2019 11:25:26

### பகாப்பதம்

மரம், கழனி, உண், எழுது ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இவற்றை மேலும் சிறிய உறுப்புகளாகப் பிரிக்க முடியாதல்லவா? இவ்வாறு பகுபத உறுப்புகளாகப் பிரிக்கமுடியாத சொல் பகாப்பதம் எனப்படும். இவை அடிச்சொல் அல்லது வேர்ச்சொல்லாக இருக்கும்.

பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகைச் சொற்களிலும் பகாப்பதங்கள் உண்டு.

(எ.கா.) பெயர்ப் பகாப்பதம் – நிலம், நீர், நெருப்பு, காற்று.

வினைப் பகாப்பதம் – நட, வா, படி, வாழ்.

இடைப் பகாப்பதம் – மன், கொல், தில், போல்.

உரிப் பகாப்பதம் – உறு, தவ, நனி, கழி.

## கற்பவை கற்றபின்

1. பாடப்பகுதியில் இடம்பெற்ற சொற்களில் பகுபதம், பகாப்பதம் ஆகியவற்றைக் கண்டறிந்து தனித்தனியே தொகுக்க.
2. உங்கள் வகுப்பு மாணவ-மாணவிகளின் பெயர்களைப் பகுபதம், பகாப்பதம் என வகைப்படுத்துக.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை _______.

   அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46

2. 'எழுதினான்' என்பது _______.

   அ) பெயர்ப் பகுபதம் ஆ) வினைப் பகுபதம்

   இ) பெயர்ப் பகாப்பதம் ஈ) வினைப் பகாப்பதம்

3. பெயர்ப்பகுபதம் _______ வகைப்படும்.

   அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு

4. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு _______.

   அ) பகுதி ஆ) விகுதி இ) இடைநிலை ஈ) சந்தி



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 116 14-03-2019 11:25:26

## பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. பெயர்ப் பகுபதம் | – | வாழ்ந்தான் |
| 2. வினைப் பகுபதம் | – | மன் |
| 3. இடைப் பகாப்பதம் | – | நனி |
| 4. உரிப் பகாப்பதம் | – | பெரியார் |

## சரியான பகுபத உறுப்பை எழுதுக.

போவாள் – போ + வ் + ஆள்

போ – _____________

வ் – _____________

ஆள் – _____________

நடக்கின்றான் – நட + க் + கின்று + ஆன்

நட – _____________

க் – _____________

கின்று – _____________

ஆன் – _____________

## பின்வரும் சொற்களைப் பிரித்துப் பகுபத உறுப்புகளை எழுதுக.

1. பார்த்தான் 2. பாடுவார்

## குறுவினா

1. ஓரெழுத்து ஒருமொழி என்றால் என்ன?
2. பதத்தின் இருவகைகள் யாவை?
3. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## சிறுவினா

1. விகுதி எவற்றைக் காட்டும்?
2. விகாரம் என்பது யாது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## மொழியை ஆள்வோம்!

GXAWKU

## கேட்க.

சிறந்த கல்வியாளர்களின் சொற்பொழிவுகளை இணையத்தில் கேட்டு மகிழ்க.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 117 14-03-2019 11:25:26

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

1. கல்வியின் சிறப்பு.
2. குழந்தைத்தொழிலாளர் முறை ஒழிப்பு.

**சொல்லக் கேட்டு எழுதுக.**

1. இளமைப் பருவத்திலேயே கல்வி கற்க வேண்டும்.
2. கல்வியே அழியாத செல்வம்.
3. கல்வி இல்லாத நாடு விளக்கு இல்லாத வீடு.
4. பள்ளித் தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்.
5. நூல்களை ஆராய்ந்து ஆழ்ந்து படிக்க வேண்டும்.

**கீழ்க்காணும் சொற்களை அறுவகைப் பெயர்களாக வகைப்படுத்துக.**

நல்லூர், வடை, கேட்டல், முகம், அன்னம், செம்மை, காலை, வருதல், தோகை, பாரதிதாசன், பள்ளி, இறக்கை, பெரியது, சோலை, ஐந்து மணி, விளையாட்டு, புதன்

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**அறிந்து பயன்படுத்துவோம்.**

**மூவிடம்**

இடம் மூன்று வகைப்படும். அவை 1. தன்மை 2. முன்னிலை 3. படர்க்கை.

தன்னைக் குறிப்பது தன்மை.

(எ.கா.) நான், நாம், நாங்கள், என், எம், எங்கள்.

முன்னால் இருப்பவரைக் குறிப்பது முன்னிலை.

(எ.கா.) நீ, நீங்கள், நீர், நீவிர், உன், உங்கள்.

தன்னையும், முன்னால் இருப்பவரையும் அல்லாமல் மூன்றாமவரைக் குறிப்பது படர்க்கை.

(எ.கா.) அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை, இவன், இவள், இவை.

**சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக.**

(அது, நீ, அவர்கள், அவைகள், அவை, நாம், என், உன்)

1. ________________ பெயர் என்ன?
2. ________________ ஏழாம் வகுப்பு மாணவர்கள்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 118 14-03-2019 11:25:26

3. ________________ எப்படி ஓடும்?

4. ________________ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

5. ________________ வந்து கொண்டு இருக்கிறார்கள்.

**பின்வரும் தொடர்களில் மூவிடப் பெயர்களை அடிக்கோடிடுக. அவற்றை வகைப்படுத்துக.**

1. எங்கள் வீட்டு நாய்க்குட்டி ஓடியது.
2. இவர்தான் உங்கள் ஆசிரியர்.
3. நீர் கூறுவது எனக்குப் புரியவில்லை.
4. எனக்கு, அது வந்ததா என்று தெரியவில்லை. நீயே கூறு.
5. உங்களோடு நானும் உணவு உண்ணலாமா?

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| | | |


**கடிதம் எழுதுக**

உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

## மொழியோடு விளையாடு

**கீழே உள்ள குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டத்தில் எழுத்துகளை நிரப்புக.**

1. காலையில் பள்ளி மணி ________.
2. திரைப்படங்களில் விலங்குகள் ______ காட்சி குழந்தைகளுக்குப் பிடிக்கும்.
3. கதிரவன் காலையில் கிழக்கே ________.
4. நாள்தோறும் செய்தித்தாள் _______ வழக்கம் இருக்க வேண்டும்.






7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 119
14-03-2019 11:25:26

**ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.**

1. _________ புல்லை மேயும்.
2. _________ சுடும்.
3. _________ பேசும்.
4. _________ பறக்கும் .
5. _________ மணம் வீசும்.

**பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக.**

(எ.கா.) தா – கொடு

தீ ________________________

பா ________________________

தை ________________________

வை ________________________

மை ________________________

**பின்வரும் சொற்களை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.**

ஆறு, விளக்கு, படி, சொல், கல், மாலை, இடி

(எ.கா.) ஆறு – ஈ ஆறு கால்களை உடையது.

தஞ்சாவூரில் காவிரி ஆறு பாய்கிறது.

## நிற்க அதற்குத் தக...

**என் பொறுப்புகள்...**

1. பாடப்புத்தகங்கள் மட்டுமன்றிப் பிற புத்தகங்களையும் படிப்பேன்.
2. பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை எப்போதும் மதித்து நடப்பேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

| | | | |
|---|---|---|---|
| கோடை விடுமுறை | – *Summer Vacation* | நீதி | – *Moral* |
| குழந்தைத்தொழிலாளர் | – *Child Labour* | சீருடை | – *Uniform* |
| பட்டம் | – *Degree* | வழிகாட்டுதல் | – *Guidance* |
| கல்வியறிவு | – *Literacy* | ஒழுக்கம் | – *Discipline* |

## இணையத்தில் காண்க

அறநூல்களின் பெயர்களை இணையத்தில் தேடி எழுதுக.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 120 14-03-2019 11:25:27

இயல்
ஆறு

# கலை வண்ணம்



## கற்றல் நோக்கங்கள்

- கலைகளின் இன்றியமையாமையைக் கவிதை வாயிலாக அறிதல்
- இருபொருள் தரும் வகையில் அமைந்த பாடலின் சொல் நயங்களை உணர்தல்
- ஓவியக்கலையின் மேன்மையையும் அது மனித வாழ்வோடு இணைந்துள்ள நுட்பத்தையும் உணர்ந்து போற்றுதல்
- தமிழகச் சுற்றுலா இடங்களையும் அவை வெளிப்படுத்தும் கலை, பண்பாட்டுக் கூறுகளையும் படித்தறிதல்
- தொழிற்பெயரின் வகைகளை அறிந்து பயன்படுத்துதல்




7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 121 14-03-2019 11:25:27

கவிதைப்பேழை

இயல் ஆறு

# ஒரு வேண்டுகோள்

H6TFIA




கலைகள் மனிதர்களின் வாழ்வோடு இணைந்தே வளர்ந்திருக்கின்றன. ஒரு கலைஞன் தான் படைக்கும் ஒவ்வொன்றையும் அழகியலோடு படைப்பான். கலைப்படைப்பு அழகியலை மட்டும் வெளிப்படுத்தினால் போதாது. அது மானுடத்தைப் பேச வேண்டும். இதனைக் கலைஞர்களிடம் ஒரு வேண்டுகோளாக வைக்கிறார் இப்பாடலின் ஆசிரியர். அதனை அறிவோம்.

கலையுலகப் பிரும்மாக்களே
மண்ணின் வனப்புக்குப்
புதிய அழகுகள் சேர்ப்பவர்களே
ஒரு மானுடத்தின் வேண்டுகோள்

நீங்கள் சிற்பிகளாகப்
பாறை உடைப்பவனின்
சிலை வடித்தால்
வியர்வை நெடி வீசட்டும் அதில்

வயல்வெளி உழவனின்
உருவ வார்ப்பெனில்
ஈரமண் வாசம்
இருக்க வேண்டும் அதில்

ஓவியர்களாகத்
தாய்மையின் பூரிப்பைச் சித்திரமாக்கினால்
அவள் முகப்பொலிவில்
வழித்தெடுக்குமாறு இருக்கட்டும்
கரிசன பாச உணர்வுகள்

ஒரு சின்ன மழலைச் சித்திரமா
பால் மணம் கமழ வேண்டும்
அதன் பளிங்கு மேனியில்

ஆல்ப்ஸ் மலைச் சிகரங்களா
அட்லாண்டிக் சமுத்திர அலைகளா
அமேசான் காடுகளா
பனிபடர் பள்ளத்தாக்குகளா
தொங்கும் அதிசயத் தோட்டங்களா
இயற்கையின் பிரமிப்பு எதுவும்
கலைவடிவு கொள்ளலாம்



ஏதாயினும் இதை நினைவில் கொள்ளுங்கள்
மானுட அடையாளம் ஒன்று
இருக்கவேண்டும் அதில் கட்டாயம்
மனிதன் இல்லாத – இணையாத
எந்த வனப்பும் வனப்பில்லை
அவன் கலவாத எதிலும்ஜீவ உயிர்ப்பில்லை...

–தேனரசன்



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 122 14-03-2019 11:25:27

**சொல்லும் பொருளும்**

| | | | |
|---|---|---|---|
| பிரும்மாக்கள் | – படைப்பாளர்கள் | வனப்பு | – அழகு |
| நெடி | – நாற்றம் | பூரிப்பு | – மகிழ்ச்சி |
| மழலை | – குழந்தை | மேனி | – உடல் |

**பாடலின் பொருள்**

கலையுலகப் படைப்பாளர்களே! மண்ணின் அழகுக்கு அழகு சேர்ப்பவர்களே! உங்களுக்கு ஒரு மனித சமுதாயத்தின் வேண்டுகோள்!

நீங்கள் பாறை உடைப்பவரின் சிலையைச் செதுக்கினால், அதில் வியர்வை நாற்றம் வீசவேண்டும். உழவரின் உருவ வார்ப்பாக இருந்தால், அதில் ஈரமண்ணின் மணம் வீச வேண்டும்.

தாயின் மகிழ்ச்சியான உருவத்தை ஓவியமாக வரைந்தால், அவரின் முகத்தில் அன்பும் பாசமும் நிறைந்திருக்க வேண்டும். சிறு குழந்தையின் சித்திரத்தைத் தீட்டினால் அதன் உடலில் பால் மணம் கமழ வேண்டும்.

ஆல்ப்ஸ் மலைச் சிகரங்கள், அட்லாண்டிக் பெருங்கடல் அலைகள், அமேசான் காடுகள், பனிபடர் பள்ளத்தாக்குகள், தொங்கும் தோட்டங்கள் என இயற்கையின் விந்தைத் தோற்றங்கள் எவையும் கலைவடிவம் பெறலாம். ஆனால் அதில் மானுடப் பண்பு கட்டாயமாக இருக்க வேண்டும். மானுடம் இல்லாத எந்த அழகும் அழகன்று. மனிதன் கலக்காத எதிலும் உயிர்ப்பில்லை.



**நூல் வெளி**

தேனரசன் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். இவர் வானம்பாடி, குயில், தென்றல் போன்ற இதழ்களில் கவிதைகள் எழுதியுள்ளார். இவரது கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள் எள்ளல் சுவையோடு வெளிப்படும். மண்வாசல், வெள்ளை ரோஜா, பெய்து பழகிய மேகம் ஆகிய கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

பாடப்பகுதியிலுள்ள கவிதை பெய்து பழகிய மேகம் என்னும் நூலிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

1. உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒரு கலை பற்றிய தகவல்களைத் திரட்டுக.
2. உழைப்பாளர்களின் பெருமையைக் கூறும் கவிதைகளைத் தொகுத்து வந்து வகுப்பறையில் பகிர்க.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மயிலும் மானும் வனத்திற்கு _________ தருகின்றன.

   அ) களைப்பு ஆ) வனப்பு இ) மலைப்பு ஈ) உழைப்பு

2. மிளகாய் வற்றலின் _________ தும்மலை வரவழைக்கும்.

   அ) நெடி ஆ) காட்சி இ) மணம் ஈ) ஓசை

3. அன்னை தான் பெற்ற ______ சிரிப்பில் மகிழ்ச்சி அடைகிறார்.

   அ) தங்கையின் ஆ) தம்பியின் இ) மழலையின் ஈ) கணவனின்

4. 'வனப்பில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.

   அ) வனம் + இல்லை ஆ) வனப்பு + இல்லை

   இ) வனப்பு + யில்லை ஈ) வனப் + பில்லை

5. 'வார்ப்பு + எனில்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______.

   அ) வார்ப்எனில் ஆ) வார்ப்பினில்

   இ) வார்ப்பெனில் ஈ) வார்ப்பு எனில்

**நயம் அறிக.**

ஒரே எழுத்திலோ ஓசையிலோ முடியும் இயைபுச் சொற்களைப் பாடலில் இருந்து எடுத்து எழுதுக.

**குறுவினா**

1. தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை யாவை?
2. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?

**சிறுவினா**

சிற்பங்களும் ஓவியங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

**சிந்தனை வினா**

நீங்கள் ஒரு கலைஞராக இருந்தால் எத்தகைய படைப்புகளை உருவாக்குவீர்கள்?



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 124 14-03-2019 11:25:27

கவிதைப்பேழை

இயல் ஆறு

# கீரைப்பாத்தியும் குதிரையும்

## (இரட்டுற மொழிதல்)




தமிழில் சொல்நயமும் பொருள்நயமும் மிகுந்த பலவகையான பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. ஒரே பாடலில் இரண்டு பொருள் தோன்றும்படி பாடப்படும் இரட்டுறமொழிதலும் அவற்றுள் ஒன்று. இதனைச் 'சிலேடை' என்றும் கூறுவர். அவ்வகையில் அமைந்த சுவையான பாடல் ஒன்றை அறிவோம்.



*கட்டி அடிக்கையால் கால்மாறிப் பாய்கையால்*
*வெட்டி மறிக்கின்ற மேன்மையால் – முட்டப்போய்*
*மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்*
*ஏறப் பரியாகு மே**

*– காளமேகப்புலவர்*



### சொல்லும் பொருளும்

வண்கீரை – வளமான கீரை

பரி – குதிரை

முட்டப்போய் – முழுதாகச் சென்று

கால் – வாய்க்கால், குதிரையின் கால்

மறித்தல் – தடுத்தல் (மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்தி கட்டுதல்), எதிரிகளைத் தடுத்துத் தாக்குதல்

I7LKN6

### பாடலின் பொருள்

#### கீரைப்பாத்தியில்

மண் கட்டிகளை அடித்துத் தூளாக்குவர். மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்திகளாக்கி வைத்திருப்பர். வாய்க்காலில் மாறி மாறி நீர் பாய்ச்சுவர். நீர் கடைமடையின் இறுதி வரை சென்று மாற்றி விடத் திரும்பும்.

#### குதிரை

வண்டிகளில் கட்டி, அடித்து ஓட்டப்படும். கால் மாறிமாறிப் பாய்ந்து செல்லும்; எதிரிகளை மறித்துத் தாக்கும்; போக வேண்டிய இடம் முழுவதும் சென்று மீண்டும் திரும்பி வரும்.

இக்காரணங்களால் கீரைப் பாத்தியும், ஏறிப்பயணம் செய்யும் குதிரையும் ஒன்றாகக் கருதப்படும்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 125 14-03-2019 11:25:28

### நூல் வெளி

காளமேகப்புலவரின் இயற்பெயர் வரதன். மேகம் மழை பொழிவது போலக் கவிதைகளை விரைந்து பாடியதால் இவர் காளமேகப்புலவர் என்று அழைக்கப்பட்டார். திருவானைக்கா உலா, சரசுவதி மாலை, பரபிரம்ம விளக்கம். சித்திர மடல் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவரது தனிப்பாடல்கள் தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளன. அந்நூலிலிருந்து ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

இருபொருள் தரும் சொற்கள் சிலவற்றை எழுதி, அவற்றின் இரு பொருள்களையும் எழுதுக.

(எ.கா.) மாலை – மலர் மாலை, அந்திப் பொழுது

## மதிப்பீடு

*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

1. 'ஏறப் பரியாகுமே' என்னும் தொடரில் ' பரி' என்பதன் பொருள் __________.

   அ) யானை ஆ) குதிரை இ) மான் ஈ) மாடு

2. பொருந்தாத ஓசை உடைய சொல் __________.

   அ) பாய்கையால் ஆ) மேன்மையால்
   இ) திரும்புகையில் ஈ) அடிக்கையால்

3. 'வண்கீரை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.

   அ) வண் + கீரை ஆ) வண்ணம் + கீரை
   இ) வளம் + கீரை ஈ) வண்மை + கீரை

4. கட்டி + அடித்தல் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _________.

   அ) கட்டியிடித்தல் ஆ) கட்டியடித்தல்
   இ) கட்டிஅடித்தல் ஈ) கட்டுஅடித்தல்

*சிறுவினா*

கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

*சிந்தனை வினா*

நீங்கள் எவற்றைக் குதிரையோடு ஒப்பிடுவீர்கள்?




7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 126 14-03-2019 11:25:28

இயல் ஆறு

# பேசும் ஓவியங்கள்

IVMYLX




ஆயகலைகள் அறுபத்து நான்கனுள் ஒன்று ஓவியக்கலை. காண்போரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் ஓவியத்திற்கு உண்டு. ஒரு கருத்தைப் பேச்சாலும் எழுத்தாலும் வெளிப்படுத்துவதைக் காட்டிலும் ஓர் ஓவியத்தால் மிக நுட்பமாகப் புரிய வைத்துவிட முடியும். அதனால்தான் ஓவியத்தை நுண்கலைகளுள் முதன்மையான ஒன்றாகக் கருதுகின்றனர். இத்தகைய சிறப்பு மிக்க ஓவியக்கலையைப் பற்றி அறிவோம்.



ஒரு விடுமுறை நாளன்று கண்ணனும் மணியும் அரசுப் பொருள்காட்சிக் கூடத்திற்குச் செல்கின்றனர். ஒவ்வோர் அரங்காகக் கண்டுகளித்தவாறே சென்று இறுதியில் ஓவியக்கூடத்தை அடைகின்றனர்.

மணி : கண்ணா அந்த அறிவிப்புப் பலகையைப் பார்.

**அறிவிப்புப் பலகை**

ஓவியங்களைத் தொடாமல் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ஓவியங்களுக்குக் கீழே உள்ள பொத்தானை அழுத்தினால் ஓவியங்கள் உங்களுடன் பேசும்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 127 14-03-2019 11:25:28

கண்ணன் : மணி! இங்குக் குகை போன்று வடிவமைக்கப்பட்ட பாறையில் அழகான ஓவியங்கள் வரையப்பட்டு உள்ளன. அந்தப் பொத்தானை அழுத்து. குகை ஓவியம் பேசுவதைக் கேட்போம்.

*(மணி பொத்தானை அழுத்துகிறான்)*



குகை ஓவியம் : நான்தான் குகை ஓவியம் பேசுகிறேன். பழங்கால மனிதர்கள் குகைகளில்தான் வாழ்ந்து வந்தனர். அங்குதான் அவர்கள் முதலில் ஓவியங்களை வரையத் தொடங்கினார்கள். செய்திகளை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்காக எங்களை வரைந்தனர். வேட்டைக்குச் செல்லுதல், நடனம் ஆடுதல், போர் செய்தல் போன்ற காட்சிகள் வரையப்பட்டன. நாங்கள் பெரும்பாலும் கோட்டோவியமாக இருப்போம். மண் மற்றும் கல் துகள்களைக் கொண்டு எங்களுக்கு வண்ணம் தீட்டினர். எங்களை உற்று நோக்கினால் பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளலாம்.

மணி : கண்ணா! இதோ இங்குள்ள சுவர் ஓவியத்தின் பொத்தானை அழுத்து.

*(கண்ணன் பொத்தானை அழுத்துகிறான்.)*



சுவர் ஓவியம் : மனிதர்கள் வீடுகட்டி வாழத் தொடங்கிய காலம் முதல் சுவர் ஓவியங்களாகிய எங்களை வரைந்து வருகின்றனர். அரண்மனைகள், மண்டபங்கள், கோவில்கள் போன்றவற்றின் சுவர்களிலும் மேற்கூரைகளிலும் எங்களைக் காணமுடியும். சித்தன்னவாசல் என்னும் ஊரில் எங்களைப் பார்த்திருப்பீர்கள். எங்களை எவ்வாறு வரைந்தனர் தெரியுமா? முதலில் ஆற்று மணலுடன் சுண்ணாம்பைச் சேர்த்துச் சுவரைச் சமப்படுத்துவர். சுவர் ஈரப்பதமாக இருக்கும்போது எங்களை வரைவர். சுவர் உலர்ந்தபிறகு எங்களை வரைவதும் உண்டு. தஞ்சைப் பெரியகோயிலில் சுவர் ஓவியங்களான எங்களை ஏராளமாகக் காணமுடியும். கருவறைச் சுற்றுச்சுவரிலும் மண்டபங்களின் சுவர்களிலும் நாங்கள் அழகாகக் காட்சியளிக்கிறோம். நாயன்மார்களில் ஒருவரான சுந்தரரின் வாழ்க்கை நிகழ்வுகளாக நாங்கள் வரையப்பட்டிருக்கிறோம்.

மணி : கண்ணா வா. அதோ! அங்குள்ள துணி ஓவியங்களைப் பார்ப்போம்.

*(கண்ணன் துணி ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்.)*

துணி ஓவியம் : துணிகளில் ஓவியங்கள் வரையும் முறை பழங்காலம் முதலே வழக்கத்தில் இருந்துள்ளது. ஓவியம் வரையப் பயன்படும் துணியை எழினி, திரைச்சீலை, கிழி,



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 128 14-03-2019 11:25:28

படாம் எனப் பல பெயர்களில் அழைப்பர். சீவகசிந்தாமணிக் காப்பியத்தில் குணமாலை என்னும் தலைவி யானையைக் கண்டு அஞ்சிய காட்சியைச் சீவகன் துணியில் வரைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. தற்காலத்தில் எங்களைக் கலம்காரி ஓவியங்கள் என்னும் பெயரில் தமிழகத்திலும் ஆந்திராவிலும் ஓவியர்கள் வரைந்து வருகின்றனர்.

கண்ணன் : மணி, வா! அந்த ஓலைச்சுவடி ஓவியத்தைப் பார்ப்போம்.

**தெரிந்து தெளிவோம்**

புனையா ஓவியங்கள் பற்றி நம் இலக்கியங்கள் கூறும் செய்திகள்

புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்
– நெடுநல்வாடை

புனையா ஓவியம் புறம் போந்தன்ன
–மணிமேகலை

*(கண்ணன் ஓலைச்சுவடி ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)*



ஓலைச்சுவடி ஓவியம் : ஓலைச்சுவடிகள் மீது எழுத்தாணிகளைக் கொண்டு கோட்டோவியமாகவும் வண்ணப்பூச்சு ஓவியமாகவும் எங்களை வரைவார்கள். நாங்கள் பெரும்பாலும் இதிகாசம் மற்றும் புராணக் காட்சிகளாகவே இருக்கிறோம். தற்காலத்தில் எங்களைக் காண்பது அரிதாகிவிட்டது. தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்திற்குச் சென்றால் எங்களைக் காணலாம்.

மணி: தாள்களில் ஓவியம் வரையும்போதே நாம் அழிப்பான்களைக் கொண்டு பலமுறை அழித்து அழித்து வரைகிறோம். ஒருமுறை எழுத்தாணியால் கீறிவிட்டால் திருத்தமுடியாத ஓலைச்சுவடிகளில் நம் முன்னோர் ஓவியம் வரைந்துள்ளனர். அவர்களின் திறமையை எண்ணிப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது.

கண்ணன் : சரி, வா. செப்பேட்டுஓவியம் என்ன சொல்கிறது என்று கேட்போம்.

*(கண்ணன் செப்பேட்டு ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)*

செப்பேட்டு ஓவியம் : முற்காலத்தில் மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் செப்பேடுகளில் பொறிப்பது வழக்கம். அதைப்போல உளிகொண்டு வரைகோடுகளாக எங்களையும் வரைந்தனர். பொதுவாக நீர்நிலைகள், செடிகொடிகள், பறவைகள், விலங்குகள், குறியீடுகள் போன்றவையாக எங்களைக் காணலாம்.

கண்ணன் : அங்கே சில புதுமையான ஓவியங்கள் காணப்படுகின்றனவே. வா! சென்று பார்க்கலாம்.

மணி : தந்த ஓவியங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதே! இவை யார் தந்த ஓவியங்களாக இருக்கும்?

**தெரிந்து தெளிவோம்**

ஓவிய மண்டபத்தில் பல வகை ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. ஓவியங்கள் குறித்து அறிந்தோர் அறியாதவர்களுக்கு விளக்கிக் கூறினர் என்ற செய்தி பரிபாடலில் இடம் பெற்றுள்ளது.

இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்
துன்னுநர் சுட்டவும் சுட்டு அறிவுறுத்தவும்
– பரிபாடல் (19:54–55)



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 129 14-03-2019 11:25:29

*(கண்ணன் தந்த ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)*



தந்த ஓவியம் : நாங்கள் யானைத் தந்தங்களின் மீது வரையப்பட்ட ஓவியங்கள். வயது முதிர்ந்து இறந்த யானையின் தந்தங்களின்மீது பலவகை நீர்வண்ணங்களைப் பயன்படுத்தி அழகான ஓவியங்களாக எங்களை வரைவார்கள். எங்களைக் கேரள மாநிலத்தில் அதிகமாகக் காணமுடியும்.

கண்ணன் : வா! அங்கே உள்ள கண்ணாடி ஓவியங்களைப் பார்ப்போம்.

*(கண்ணன் கண்ணாடி ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்.)*

கண்ணாடி ஓவியம் : கண்ணாடிகள் முகம் பார்க்க மட்டும்தான் பயன்படும் என நினைத்திருப்பீர்கள். ஆனால் அழகிய வண்ண ஓவியங்களாகிய எங்களை வரையவும் கண்ணாடிகளைப் பயன்படுத்துகின்றனர். பலவகையான உருவங்கள், இயற்கைக் காட்சிகள் போன்றவைகளாக நாங்கள் வரையப்படுகிறோம். எங்களை உருவாக்கும் ஓவியர்கள் தஞ்சாவூரில் மிகுதியாக உள்ளனர்.

மணி : அடடா, ஓவியங்களில்தான் எத்தனை வகைகள்! இதோ! இருபதாம் நூற்றாண்டு ஓவியங்கள் என்னும் இறுதிப் பகுதிக்கு வந்துவிட்டோம். அதோ! அங்கே நாம் இப்போது வரைவது போலத் தாள்களில் வரையப்பட்ட ஓவியங்கள் உள்ளன. வா, சென்று பார்க்கலாம்.

*(கண்ணன் தாள் ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)*

தாள் ஓவியம் : தற்காலத்தில் பரவலான பயன்பாட்டில் இருப்பவர்கள் நாங்களே. கோட்டோவியங்கள், வண்ண ஓவியங்கள், நவீன ஓவியங்கள் எனப் பலவகையான வடிவங்களில் நாங்கள் காணப்படுகின்றோம். கரிக்கோல், நீர்வண்ணம், எண்ணெய் வண்ணம் ஆகியவற்றைப் பயன்படுத்தி எங்களை வரைகின்றனர்.

*(கண்ணன் அருகிலிருந்த கருத்துப்பட ஓவியத்தின் பொத்தானை அழுத்துகிறான்.)*

கருத்துப்பட ஓவியம் : அரசியல் கருத்துகளை எளிமையாக விளக்குவதற்கு நாங்கள் பயன்படுகிறோம். இந்தியா இதழில் பாரதியார்தான் எங்களை முதன்முதலில்

**தெரிந்து தெளிவோம்** — **வேறுபெயர்களை அறிவோம்**

| | |
|---|---|
| ஓவியம் | ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம், படம், படாம், வட்டிகைச்செய்தி |
| ஓவியம் வரைபவர் | கண்ணுள் வினைஞர், ஓவியப் புலவர், ஓவமாக்கள், கிளவி வல்லோன், சித்திரக்காரர், வித்தகர் |
| ஓவியக் கூடம் | எழுதெழில் அம்பலம், எழுத்துநிலை மண்டபம், சித்திர அம்பலம், சித்திரக்கூடம், சித்திரமாடம், சித்திரமண்டபம், சித்திர சபை |



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 130 14-03-2019 11:25:29

தமிழில் அறிமுகப்படுத்தினார். இப்போது பெரும்பாலான இதழ்களில் நீங்கள் எங்களைப் பார்க்க முடியும். எங்களுடைய மற்றொரு வடிவமே கேலிச்சித்திரம் ஆகும். மனித உருவங்களை விந்தையான தோற்றங்களில் நகைச்சுவை தோன்றும்படி வரைவதையே கேலிச்சித்திரம் என்பர்.

*(கண்ணன் நவீன ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)*



பாரதியார் வெளியிட்ட கேலிச்சித்திரம்

### தெரிந்து தெளிவோம்

ஐரோப்பியக் கலை நுணுக்கத்துடன் இந்தியக் கதை மரபுகளை இணைத்து ஓவியங்களில் புதுமைகளைப் புகுத்தியவர் இராஜா இரவிவர்மா. இவரது பாணி ஓவியங்கள் பிற்காலத்தில் நாட்காட்டிகளில் அதிகம் பயன்படுத்தப்பட்டன. நாட்காட்டி ஓவியம் வரையும் முறையின் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர் கொண்டையராஜு. நாட்காட்டி ஓவியங்களைப் பசார் பெயிண்டிங் என்றும் அழைப்பர்

நவீன ஓவியம் : ஓவியக்கலையின் மிகப் புதுமையான வடிவமாக நாங்கள் விளங்குகிறோம். புதுமையான பார்வையில் புதிய கருத்துகள் வெளிப்படுமாறு எங்களை வரைகின்றனர். பார்வையாளர்களின் மனப்பான்மைக்கு ஏற்பப் பொருள்கொள்ளும் வகையில் கோடுகளாகவும் கிறுக்கல்களாகவும் நாங்கள் வரையப்படுகிறோம். பல வண்ணக் கலவைகளைக் கொண்டும் எங்களை வரைகின்றனர்.

மணி : இந்தக் கண்காட்சியின் மூலம் பலவகையான ஓவியங்களைப் பற்றி அறிந்து கொண்டோம்.

கண்ணன் : அதிலும் ஓவியங்களே நம்மோடு பேசியது மிகமிகச் சிறப்பாக இருந்தது. இந்த நாளை நம்மால் மறக்கவே முடியாது! நாமும் சிறந்த ஓவியங்களை வரைந்து பழகுவோம்!

## கற்பவை கற்றபின்

1. உமக்குப் பிடித்த காட்சியை வரைந்து வண்ணம் தீட்டுக.
2. பருவ இதழ்களில் வெளிவந்த பலவகை ஓவியங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.

## மதிப்பீடு

*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

1. குகை ஓவியங்களில் வண்ணம் தீட்டப் பயன்பட்ட பொருள்களில் ஒன்று _______.

அ) மண்துகள் ஆ) நீர் வண்ணம் இ) எண்ணெய் வண்ணம் ஈ) கரிக்கோல்



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 131 14-03-2019 11:25:29

2. நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம் ________.

அ) குகை ஓவியம் ஆ) சுவர் ஓவியம்

இ) கண்ணாடி ஓவியம் ஈ) கேலிச்சித்திரம்

3. 'கோட்டோவியம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) கோடு + ஓவியம் ஆ) கோட்டு + ஓவியம்

இ) கோட் + டோவியம் ஈ) கோடி + ஓவியம்

4. 'செப்பேடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) செப்பு + ஈடு ஆ) செப்பு + ஓடு

இ) செப்பு + ஏடு ஈ) செப்பு + யேடு

5. எழுத்து + ஆணி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) எழுத்துஆணி ஆ) எழுத்தாணி

இ) எழுத்துதாணி ஈ) எழுதாணி

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் _______.
2. கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது _______.
3. மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் _____ மீது பொறித்துப் பாதுகாத்தனர்.

## குறுவினா

1. ஓவியங்களின் வகைகள் யாவை?
2. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?
3. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?
4. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக.
5. செப்பேட்டு ஓவியங்களில் காணப்படும் காட்சிகள் யாவை?

## சிறுவினா

1. கேலிச்சித்திரம் என்றால் என்ன?
2. ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.

## சிந்தனை வினா

தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுவது ஏன்?

விரிவானம்

இயல் ஆறு

# தமிழ் ஒளிர் இடங்கள்


JGX9QH

**நுழையும்முன்**

மனிதர்கள் புதிய புதிய இடங்களைக் காண்பதில் விருப்பம் உடையவர்கள். பழமையான நினைவுச் சின்னங்கள், இயற்கை அழகு நிறைந்த பகுதிகள், வழிபாட்டு இடங்கள், கடற்கரைப் பகுதிகள், தேசியப் பூங்காக்கள் போன்ற இடங்களைக் காண்பது உள்ளத்துக்கு மகிழ்ச்சியைத் தரும். அவற்றுள் தமிழின் பெருமையை விளக்கும் இடங்கள் சிலவற்றை அறிவோம்.

அன்பு மாணவர்களே! புத்தகங்களில் பல வகை உண்டு. கதைப் புத்தகங்கள், கட்டுரைப் புத்தகங்கள், கவிதைப் புத்தகங்கள் ஆகியவை நீங்கள் அறிந்தவையே. இது தமிழுடன் தொடர்புடைய இடங்கள் குறித்த கையேடு. இக்கையேடு அத்தகைய இடங்களை நேரில் காண வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## தஞ்சை சரசுவதி மகால் நூலகம்




இந்தியாவில் உள்ள தொன்மையான நூலகங்களுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகமும் ஒன்று. இந்நூலகம் கி.பி. (பொ.ஆ.) 1122 முதல் இயங்கி வருவதாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. இங்குத் தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச் சுவடிகளும் கையெழுத்துப் படிகளும் உள்ளன. தலைசிறந்த ஓவியங்களும் தொன்மையான இசைக் கருவிகளும் சிற்பங்களும் இங்கு இடம்பெற்றுள்ளன.

## தமிழ்ப் பல்கலைக்கழகம் – தஞ்சாவூர்



செம்மொழியாகிய தமிழுக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தமிழக அரசால் கி.பி. (பொ.ஆ.) 1981 இல் தோற்றுவிக்கப்பட்டது தமிழ்ப்பல்கலைக்கழகம். இது தஞ்சாவூரில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. வானத்தில் இருந்து பார்க்கும் பொழுது "தமிழ்நாடு" எனத் தெரியும் வகையில் இதன் கட்டட அமைப்பு உள்ளது. இந்திய நாகரிகத்தின் பண்பாட்டுக் கூறுகள் அனைத்தையும் விரிவாகவும் ஆழமாகவும் ஆராய வேண்டும் என்பதே இப்பல்கலைக்கழகத்தின் நோக்கம்.

இங்குக் கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம், அறிவியல்புலம் ஆகிய ஐந்து புலங்களும் இருபத்தைந்து துறைகளும் உள்ளன. இப்பல்கலைக்கழகம் தமிழ்மொழி ஆய்வுகள் செய்வது மட்டுமன்றி, சித்த மருத்துவத்துறை மூலம் பொதுமக்களுக்குப் பயனுள்ள வகையில் மருத்துவத் தொண்டு செய்து வருகிறது. இந்திய ஆட்சிப்பணி பயிற்சியாளர்களுக்குத் தமிழ்மொழிப்பயிற்சியை இப்பல்கலைக்கழகமே வழங்குகிறது. இங்கு மிகப்பெரிய நூலகம் ஒன்று அமைந்துள்ளது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் இங்குக் கல்வி கற்று வருகின்றனர்.

## உ.வே.சா நூலகம் – சென்னை

கி.பி. (பொ.ஆ.) 1942 இல் தொடங்கப்பட்ட இந்நூலகத்தில் தமிழ், தெலுங்கு, வடமொழி உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் உள்ளன. இங்கு 2128 ஓலைச்சுவடிகளும் 2941 தமிழ் நூல்களும் உள்ளன.

## கீழ்த்திசை நூலகம் – சென்னை

இந்நூலகம் கி.பி. (பொ.ஆ.) 1869ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச்சுவடிகள் உள்ளன. கணிதம், வானியல், மருத்துவம், வரலாறு உள்ளிட்ட பல்வேறு துறை நூல்களும் இடம்பெற்றுள்ளன. இது தற்போது அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஏழாம் தளத்தில் இயங்கி வருகின்றது.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 134 14-03-2019 11:25:30

## கன்னிமாரா நூலகம் – சென்னை



கி.பி. (பொ.ஆ.) 1896 இல் தொடங்கப்பட்ட கன்னிமாரா நூலகம் தமிழ்நாட்டின் மைய நூலகம் ஆகும். இஃது இந்திய நாட்டின் களஞ்சிய நூலகங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. இந்நூலகத்தில் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. இந்தியாவில் வெளியிடப்படும் புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றின் ஒரு பிரதி இங்குப் பாதுகாக்கப்படுகிறது. இந்நூலகத்தின் மூன்றாம் தளத்தில் மறைமலை அடிகள் நூலகமும் செயல்பட்டு வருகின்றது.

## வள்ளுவர் கோட்டம் – சென்னை

திருவள்ளுவரின் புகழை உலகறியச் செய்யும் வகையில் சென்னைக் கோடம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டம் என்னும் கலைக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணிகள் கி.பி.(பொ.ஆ.) 1973 இல் தொடங்கி 1976 இல் முடிக்கப்பட்டன. இது திருவாரூர்த் தேர் போன்ற வடிவில் அமைக்கப்பட்டு அதனை இரண்டு யானைகள் இழுத்துச் செல்வது போன்று கருங்கற்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்பகுதி இருபத்தைந்து அடி நீளமும் இருபத்தைந்து அடி அகலமும் உடையது. தேரின் மொத்த உயரம் 128 அடி. இரண்டு பக்கங்களிலும் பக்கத்திற்கு நான்கு சக்கரங்கள் தனிக்கற்களால் அமைக்கப்பட்டுள்ளன. கடைக்கோடி இரண்டு சக்கரங்கள் பெரியனவாகவும் நடுவில் இரண்டு சக்கரங்கள் சிறியனவாகவும் உள்ளன. தேரின் மையத்தில் உள்ள எண்கோண வடிவக் கருவறையில் திருவள்ளுவரின் சிலை கவினுற அமைக்கப்பட்டுள்ளது.



வள்ளுவர் கோட்டத்தில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான அரங்கம் ஒன்றும் உள்ளது. வள்ளுவர் கோட்டத்தில் 1330 குறட்பாக்களும் செதுக்கப்பட்டுள்ளன. அறத்துப்பால் கருநிறப் பளிங்குக் கல்லிலும் பொருட்பால் வெண்ணிறப் பளிங்குக் கல்லிலும் இன்பத்துப்பால் செந்நிறப் பளிங்குக் கல்லிலும் அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் திருக்குறளின் கருத்துகளை விளக்கும் ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 135 14-03-2019 11:25:30

## திருவள்ளுவர் சிலை – கன்னியாகுமரி



இந்தியாவின் தெற்கு எல்லையாகிய கன்னியாகுமரியில் திருவள்ளுவரின் சிலை தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ளது. விவேகானந்தர் பாறைக்கு அருகில், கடல் நடுவே நீர் மட்டத்திலிருந்து முப்பது அடி உயரப் பாறை மீது இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. கி.பி.(பொ.ஆ.) 1990ஆம் ஆண்டு இப்பணி தொடங்கியது. பொதுமக்கள் பார்வைக்காக 2000ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் அன்று திறந்துவைக்கப்பட்டது. பாறையிலிருந்து சிலையின் உயரம் மொத்தம் 133 அடி. இது திருக்குறளின் மொத்த அதிகாரங்களைக் குறிக்கிறது. அறத்துப்பாலின் அதிகாரங்களை உணர்த்துவதுபோல் பீடம் முப்பத்தெட்டு அடி உயரம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. பொருட்பால், இன்பத்துப்பால் ஆகியவற்றின் மொத்த அதிகாரங்களைக் குறிக்கும் வகையில் சிலை தொண்ணூற்றைந்து அடி உயரம் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது.

பீடத்தின் உட்புறத்தில் மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. மண்டபத்தின் உட்சுவரில் அதிகாரத்திற்கு ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் செதுக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு மூன்று டன் முதல் எட்டு டன் வரை எடை உள்ள 3,681 கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சிலை மொத்தம் ஏழாயிரம் டன் எடை கொண்டது. திருவள்ளுவர் சிலைக்குச் செல்வதற்குப் படகு வசதி செய்யப்பட்டுள்ளது. உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இங்கு நாள்தோறும் வந்து செல்கின்றனர். தமிழின் பெருமைமிகு அடையாளமாக இச்சிலை உயர்ந்து நிற்கிறது.

## உலகத் தமிழ்ச் சங்கம் – மதுரை

மதுரை மாநகரின் தல்லாகுளம் பகுதியில் காந்தி அருங்காட்சியகம் அருகில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. இது சுமார் எண்பத்தேழு ஆயிரம் சதுரஅடி பரப்பளவில் மனத்தைக் கவரும் வகையில் கட்டப்பட்டுள்ளது. கி.பி. (பொ.ஆ.) 1981–ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி இக்கட்டடம் கட்டப்பட்டு



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 136 14-03-2019 11:25:30




கி.பி. (பொ.ஆ.) 2016 ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. இதனுள் பன்னாட்டு அளவிலான கருத்தரங்கக் கூடங்கள், ஆய்வரங்கங்கள், நூலகம், பார்வையாளர் அரங்கம் ஆகியன கவினுற அமைக்கப்பட்டுள்ளன. வெளிப்புறச் சுற்றுச்சுவர்களில் 1330 குறட்பாக்களும் இடம்பெற்றுள்ளன.

உலகத் தமிழ்ச் சங்கத்தின் மற்றோர் அமைப்பான சங்கத்தமிழ்க் காட்சிக்கூடம் தனிக்கட்டடத்தில் இயங்கி வருகிறது. தருமிக்குப் பாண்டிய மன்னன் பொற்கிழி வழங்கிய திருவிளையாடல் புராணக் காட்சி இதன் நுழைவாயிலில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள காட்சிக்கூடத்தில் வள்ளல்கள், புலவர்கள் ஆகியோரின் வாழ்க்கை நிகழ்வுகள் ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் உள்ளன. தொல்காப்பியர், ஔவையார், கபிலர் ஆகியோரின் முழுஉருவ வெண்கலச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இதன் சுற்றுச் சுவர்களில் சங்க இலக்கியக் காட்சிகள் வண்ண ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைந்த மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடமும் சங்கத்தமிழ்க் காட்சிக்கூடமும் தமிழின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றன.

## சிற்பக் கலைக்கூடம் – பூம்புகார்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழர்களின் தலைநகரமாகவும் துறைமுக நகரமாகவும் விளங்கியது பூம்புகார். இந்நகரைப் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்திலும் பட்டினப்பாலையிலும் இடம்பெற்றுள்ளன. இங்கு மருவூர்ப்பாக்கம் என்னும் கடல் பகுதியும் பட்டினப்பாக்கம் என்னும் நகரப் பகுதியும் அமைந்திருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. பின்னர் ஏற்பட்ட கடல்கோளினால் பூம்புகார் நகரம் அழிந்துவிட்டது. இந்நகரத்தின் பெருமையை உலகறியச் செய்ய கி.பி.(பொ.ஆ.) 1973 ஆம் ஆண்டு பூம்புகார் கடற்கரையில் சிற்பக் கலைக்கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இக்கூடம் ஏழுநிலை மாடங்களைக் கொண்டது. கண்ணகியின் வரலாற்றை விளக்கும் நாற்பத்தொன்பது சிற்பத் தொகுதிகள் இதில் இடம்பெற்றுள்ளன. மாதவிக்கும் ஒரு நெடிய சிலை இங்கு நிறுவப்பட்டுள்ளது.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 137 14-03-2019 11:25:30



கலைக்கூடத்திற்கு அருகில் இலஞ்சிமன்றம், பாவைமன்றம், நெடுங்கல்மன்றம் ஆகியன அமைந்துள்ளன. இலஞ்சிமன்றத்திலும் பாவைமன்றத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ள பெண்களின் உருவங்கள் நம் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. நெடுங்கல் மன்றத்தில் நெடிய கற்றூண் ஒன்றும் அதைச் சுற்றி எட்டுச் சிறிய கற்றூண்களும் எட்டு மனித உருவங்களும் தற்காலச் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டுகளாய் நிற்கின்றன.

இக்கையேட்டில் நாம் கண்ட பகுதிகள் அனைத்தும் தமிழின் பெருமையை உலகறியச் செய்ய நிறுவப்பட்டவை ஆகும். இவற்றைக் காணும் பொழுது தமிழரின் வாழ்வையும் தமிழ்மொழியின் சிறப்பையும் அறிய முடிகிறது. இத்தகைய சிறப்புமிக்க இடங்களுக்குச் சென்று பார்வையிடுவதும் அவற்றைப் பாதுகாப்பதும் தமிழராகிய நம்முடைய கடமை ஆகும்.

## கற்பவை கற்றபின்

1. உங்கள் மாவட்டத்திலுள்ள சுற்றுலா இடங்களின் சிறப்புகளை எழுதி வருக.
2. நீங்கள் கண்டுகளித்த இடங்களின் தனித்தன்மைகளை எழுதுக.

## மதிப்பீடு

நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால், சுற்றுலாக் கையேடு என்னும் பகுதியில் உள்ள இடங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 138 14-03-2019 11:25:31

கற்கண்டு

இயல் ஆறு

# தொழிற்பெயர்

உழவர் செய்யும் தொழில் உழுதல். தையல்காரர் செய்யும் தொழில் தைத்தல். இத்தொடர்களில் உழுதல், தைத்தல் என்பன செயல்களின் பெயர்களாக அமைகின்றன. இவ்வாறு ஒரு செயலின் அல்லது வினையின் பெயராக அமைவது தொழிற்பெயர் எனப்படும். தொழிற்பெயர் எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் காட்டாது. படர்க்கை இடத்தில் மட்டும் வரும்.

(எ.கா.) படித்தல், ஆடல், நடிப்பு, எழுதுதல் , பொறுத்தல்

தொழிற்பெயரை விகுதி பெற்ற தொழிற்பெயர், முதனிலைத் தொழிற்பெயர், முதனிலை திரிந்த தொழிற்பெயர் என வகைப்படுத்துவர்.

## விகுதி பெற்ற தொழிற்பெயர்

நடத்தல், உண்ணல், வாழ்வு, வாழ்க்கை ஆகிய பெயர்களைக் கவனியுங்கள். இவற்றில் நட, உண், வாழ் ஆகிய வினைப்பகுதிகள் தல், அல், வு, கை ஆகிய விகுதிகளோடு சேர்ந்து தொழிற்பெயர்களாக அமைகின்றன.

இவ்வாறு வினைப்பகுதியுடன் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து வருவது விகுதி பெற்ற தொழிற்பெயராகும்.

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, வு, தி, சி, வி, மை போன்றவை தொழிற்பெயர் விகுதிகளாக வரும்.

(எ.கா.)

| | |
|---|---|
| தருதல் – தல் | நட்பு– பு |
| கூறல் – அல் | மறைவு – வு |
| ஆட்டம் – அம் | மறதி– தி |
| விலை – ஐ | உணர்ச்சி– சி |
| வருகை – கை | கல்வி– வி |
| பார்வை– வை | செய்யாமை – மை |
| போக்கு – கு | |

## முதனிலைத் தொழிற்பெயர்

வானில் இடி இடித்தது

சோறு கொதி வந்தது

இடி, கொதி என்னும் சொற்கள் இடித்தல், கொதித்தல் என்னும் சொற்களின் பகுதிகளாகும். இவ்வாறு ஏவல் ஒருமை வினையாக அமையும் வினைச்சொற்களின் பகுதியை முதனிலை என்பர். முதனிலை எவ்வகை மாற்றமும் பெறாமல் தொழிற்பெயராக அமைவது முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா.) செல்லமாக ஓர் அடி அடித்தான்

அறிஞர் அண்ணா தம் பேச்சால் புகழ் பெற்றார்

இவற்றில் அடிக்கோடிட்ட சொற்கள் விகுதி பெறாமல் தம்பொருளை உணர்த்துகின்றன.

**முதனிலை திரிந்த தொழிற்பெயர்**

தமிழ் படிக்கும் பேறு பெற்றேன்.

உணவின் சூடு குறையவில்லை.

இத்தொடர்களில் பேறு, சூடு ஆகிய சொற்களைக் கவனியுங்கள். பெறு, சுடு என்னும் பகுதிகளின் முதலெழுத்து நீண்டு, பேறு, சூடு எனத் திரிந்து தொழிற்பெயர்களாக மாறி உள்ளன. இவ்வாறு முதனிலை திரிவதால் உருவாகும் தொழிற்பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா.) விடு- வீடு, மின்- மீன், கொள்- கோள், உடன்படு- உடன்பாடு

## கற்பவை கற்றபின்

1. பேசும் ஓவியங்கள் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள தொழில் பெயர்களைக் கண்டறிந்து தொகுக்க.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர் எது?

அ) எழுது ஆ) பாடு இ) படித்தல் ஈ) நடி

2. பின்வருவனவற்றுள் முதனிலை திரிந்த தொழிற்பெயர் எது?

அ) ஊறு ஆ) நடு இ) விழு ஈ) எழுதல்

**பொருத்துக.**

1. ஒட்டம் - முதனிலைத் தொழிற்பெயர்
2. பிடி - முதனிலை திரிந்த தொழிற்பெயர்
3. சூடு - விகுதி பெற்ற தொழிற்பெயர்

**சிறுவினா**

1. வளர்தல், பேசுதல் – இவை எவ்வகைப் பெயர்கள்? விளக்கம் தருக.
2. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 140 14-03-2019 11:25:31

## மொழியை ஆள்வோம்!

### கேட்க.

கோட்டோவியம் பற்றிய செய்திகளை உங்கள் பள்ளி ஓவிய ஆசிரியரிடம் கேட்டு அறிக.

### பேசுக.

நீங்கள் கண்டு வியந்த ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் பற்றி வகுப்பறையில் பேசுக.

### கவிதையை நிறைவு செய்க.

K5YMP9

வானும் நிலவும் அழகு

வயலும் _______ __________

________ _______ ________

________ _______ ____அழகு

### படம் உணர்த்தும் கருத்தை ஐந்து வரிகளில் எழுதுக.



______________________

______________________

______________________

______________________

______________________

### கொடுக்கப்பட்டுள்ள சொற்களை ஒரு தொடரில் முதல் மற்றும் இறுதிச்சொல்லாகக் கொண்டு சொற்றொடர் உருவாக்குக.

(ஓவியக்கலை, இசை, கட்டடக்கலை, வண்ணங்கள்)

(எ.கா.) ஓவியக்கலை கண்ணையும் கருத்தையும் கவர்கிறது.

நுண்கலைகளுள் ஒன்று ஓவியக்கலை.

### சொல்லக் கேட்டு எழுதுக.

1. கலைப்படைப்பு மானுடத்தைப் பேச வேண்டும்.
2. இருபொருள் தருமாறு பாடப்படுவது இரட்டுற மொழிதல் ஆகும்.
3. வண்ணங்கள் பயன்படுத்தாமல் வரைவது புனையா ஓவியம்.
4. ஆற்று மணலுடன் சுண்ணாம்பைச் சேர்த்துச் சுவரைச் சமப்படுத்துவர்.
5. வள்ளுவர் கோட்டத்தின் அமைப்பு திருவாரூர்த் தேர் போன்றது.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 141 14-03-2019 11:25:31

**இடைச்சொல் 'ஐ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக.**

(எ.கா) வீடு கட்டினான் – வீடு + ஐ + கட்டினான் = வீட்டைக் கட்டினான்

1. கடல் பார்த்தாள்    2. புல் தின்றது    3. கதவு தட்டும் ஓசை

4. பாடல் பாடினாள்    5. அறம் கூறினார்

**கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

எங்கள் ஊர்

(முன்னுரை – அமைவிடம் – பெயர்க்காரணம் - தொழில்கள் – சிறப்பு மிகு இடங்கள்– திருவிழாக்கள் – மக்கள் ஒற்றுமை - முடிவுரை )

## மொழியோடு விளையாடு

**கீழ்க்காணும் புதிரைப் படித்து விடையைக் கண்டறிக.**

1. நான் இனிமை தரும் இசைக் கருவி.

   எனது பெயர் ஆறு எழுத்துகளை உடையது.

   அதில் இறுதி நான்கு எழுத்துகள் விலை உயர்ந்த ஒரு உலோகத்தைக் குறிக்கும்.

   முதல் இரண்டு மற்றும் கடைசி இரண்டு எழுத்துகளைச் சேர்த்தால் விலங்கின் வேறு பெயர் கிடைக்கும்.    நான் யார்? _______________.

2. நான் ஒரு காற்றுக் கருவி.

   நான் புல் வகையைச் சேர்ந்த தாவரத்திலிருந்து உருவாக்கப்படுகிறேன்.

   எனது பெயர் ஏழு எழுத்துகளைக் கொண்டது.

   முதல் இரண்டு எழுத்துகள் ஒரு தாவர வகையைக் குறிக்கும்.

   இறுதி மூன்று எழுத்துகள் எனது வடிவத்தைக் குறிக்கும்.  நான் யார்? _______.

**பின்வரும் பத்திகளைப் படித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க**

சாலை விபத்துகளைத் தவிர்க்கச் சாலைவிதிகளை அறிந்து ஒவ்வொருவரும் வாகனங்களை ஓட்ட வேண்டும்.

சாலையில் வாகனங்களை இடப்புறமாகவே செலுத்த வேண்டும். இருவழிச் சாலையின் மையத்தில் விட்டுவிட்டுப் போடப்பட்டுள்ள வெள்ளைக்கோடு இரு போக்குவரத்துக்காகச் சாலை சரி சமமாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் குறிக்கும். வாகனங்களை முந்துவதற்குக் கோட்டுக்கு வலது பக்கம் உள்ள சாலையைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி உண்டு. இருவழிச் சாலையின் மையத்தில் தொடர்ச்சியாக வெள்ளை அல்லது மஞ்சள் கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக்கூடாது. இரட்டை மஞ்சள்கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு எக்காரணம் கொண்டும் வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக் கூடாது.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 142    14-03-2019 11:25:31

ஒருவழிப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள திசையில் மட்டுமே வாகனங்களைச் செலுத்த வேண்டும். தடக்கோடுகள் இடப்பட்டுள்ள சாலையில் தடத்தின் உள்ளேயே வாகனங்களைச் செலுத்த வேண்டும். வாகனத்தைப் பின்தொடரும்போது மிகவும் நெருக்கமாகப் பின்தொடரக் கூடாது. திரும்பும் போது சைகை காட்ட அடையாள விளக்கை ஒளிரச் செய்ய வேண்டும்.

### வினாக்கள்

1. சாலையின் எந்தப் பக்கமாக வாகனங்களைச் செலுத்த வேண்டும்?
2. விட்டுவிட்டுப் போடப்படும் வெள்ளைக்கோடு எதனைக் குறிக்கும்?
3. எந்தக் கோட்டைத் தாண்டி வாகனங்களை முந்திச் செல்ல அனுமதி இல்லை?
4. ஒருவழிப் பாதை எனப்படுவது யாது?
5. வாகனங்களைப் பின் தொடர்வதற்கான முறையைக் கூறு.

## நிற்க அதற்குத் தக...

### என் பொறுப்புகள்....

1. நம் நாட்டுத் தொன்மைக் கலைகளை மதிப்பேன்.
2. கலைகளில் ஒன்றையேனும் கற்றுக் கொள்வேன்.
3. கலைச் சின்னங்களைப் பாதுகாப்பேன்.
4. தமிழகச் சுற்றுலாச் சிறப்பு வாய்ந்த இடங்களுக்குச் சென்று தமிழர்தம் கலைத்திறனை அறிந்து போற்றுவேன்.

### கலைச்சொல் அறிவோம்.

| | | | |
|---|---|---|---|
| படைப்பாளர் | – Creator | அழகியல் | – Aesthetics |
| சிற்பம் | – Sculpture | தூரிகை | – Brush |
| கலைஞர் | – Artist | கருத்துப்படம் | – Cartoon |
| கல்வெட்டு | – Inscriptions | குகை ஓவியங்கள் | – Cave paintings |
| கையெழுத்துப்படி | – Manuscripts | நவீன ஓவியம் | - Modern Art |

## இணையத்தில் காண்க

ஓவியம், சிற்பம், இசை, நடனம் உள்ளிட்ட கலைகளில் புகழ்பெற்றோரின் பெயர்களை இணையத்தில் தேடி எழுதுக.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 143 14-03-2019 11:25:31

வாழ்வியல்

இயல் ஆறு

# திருக்குறள்

L6RSU5

## கல்வி

1. *கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.*

பொருள் : கற்க வேண்டியவற்றைப் பிழை இல்லாமல் கற்க வேண்டும். கற்றபின் கற்ற வழியில் நடக்க வேண்டும்.

2. *எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு.*

பொருள் : எண்ணும் எழுத்தும் வாழும் மக்களுக்குக் கண்கள் போன்றவை.

3. *தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத்து ஊறும் அறிவு.**

பொருள் : தோண்டும் அளவிற்கு ஏற்ப மணற்கேணியில் நீர் ஊறும். அதுபோல் கற்கும் அளவிற்கு ஏற்ப மக்களுக்கு அறிவு வளரும்.

4. *கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை.*

பொருள் : அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. ஒருவருக்கு அதனைவிடச் சிறந்த செல்வம் வேறு இல்லை.

## தெரிந்து செயல்வகை

5. *செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க*
*செய்யாமை யானும் கெடும்.*

பொருள் : செய்யத்தகாத செயல்களைச் செய்வதாலும் செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதாலும் தீமை உண்டாகும்.

6. *எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு.**

பொருள் : எந்தச் செயலையும் நன்கு சிந்தித்த பின் தொடங்க வேண்டும். தொடங்கிய பின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.

7. *நன்றாற்றல் உள்ளும் தவறுண்டு அவரவர்*
*பண்பறிந்து ஆற்றாக் கடை.*

பொருள் : நாம் ஒருவருடைய பண்பை அறிந்து அவருக்கு நன்மை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நன்மை செய்தாலும் தீமை வந்து சேரும்.

**சுற்றந்தழால்**

8. *காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
*அன்ன நீரார்க்கே உள.*

பொருள் : காகம் தனக்குக் கிடைத்ததை மறைக்காமல் தன் சுற்றத்தாரைக் கூவி அழைத்து உண்ணும். அத்தகைய பண்பு உடையவர்களிடமே செல்வமும் சேரும்.

**மடியின்மை**

9. *மடியை மடியா ஒழுகல் குடியைக்*
*குடியாக வேண்டு பவர்.*

பொருள் : தம் குடியைச் சிறப்புடைய குடியாகச் செய்ய விரும்புபவர், சோம்பலைத் துன்பமாகக் கருதி முயற்சியோடு வாழ்தல் வேண்டும்.

**இடுக்கண் அழியாமை**

10. *இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு*
*இடும்பை படாஅ தவர்.**

பொருள் : துன்பம் வந்த போது வருந்திக் கலங்காதவர், அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதனை வென்று விடுவர்.



## மதிப்பீடு

*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

1. _____________ தீமை உண்டாகும்.
   அ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்வதால்
   ஆ) செய்யத்தகாத செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
   இ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
   ஈ) எதுவும் செய்யாமல் இருப்பதால்
2. தன்குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புபவரிடம் ______ இருக்கக் கூடாது.
   அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு இ) ஏழ்மை ஈ) செல்வம்



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 145 14-03-2019 11:25:32

3. 'எழுத்தென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

அ) எழுத்து + தென்ப ஆ) எழுத்து + என்ப

இ) எழுத்து + இன்ப ஈ) எழுத் + தென்ப

4. 'கரைந்துண்ணும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

அ) கரைந்து + இன்னும் ஆ) கரை + துண்ணும்

இ) கரைந்து + உண்ணும் ஈ) கரை + உண்ணும்

5. கற்றனைத்து+ ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______.

அ) கற்றனைத்தூறும் ஆ) கற்றனைதூறும்

இ) கற்றனைத்தீறும் ஈ) கற்றனைத்தோறும்

பொருத்துக.

1. கற்கும் முறை - செயல்
2. உயிர்க்குக் கண்கள் - காகம்
3. விழுச்செல்வம் - பிழையில்லாமல் கற்றல்
4. எண்ணித் துணிக - எண்ணும் எழுத்தும்
5. கரவா கரைந்துண்ணும் - கல்வி

குறுவினா

1. 'நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும்' எப்போது?
2. தீமை உண்டாக்கும் இரண்டு செயல்களை எழுதுக.
3. துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?

பாடப்பகுதியிலிருந்து படங்களுக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.




___________ _________ _________ ___________

___________ _________ _________.

1 0 2 3 8

அ ஆ க ச ட த



___________ _________ _________ ___________

___________ _________ _________.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 146 14-03-2019 11:25:33

இயல்
ஏழு

# நயத்தகு நாகரிகம்



## கற்றல் நோக்கங்கள்

- பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் சமூக வாழ்வியலைப் புரிந்து கொள்ளுதல்
- எளிய நாட்டுப்புறப்பாடல்களின் ஓசை நயத்தினையும் அதில் பொதிந்துள்ள சமூகச் செய்திகளையும் புரிந்து கொள்ளுதல்
- திருநெல்வேலி மாவட்டத்தின் வரலாற்றையும் சிறப்புகளையும் அறிதல்
- கருத்துகளைத் தொகுத்துக் கடிதம் எழுதும் திறன் பெறுதல்
- அணியால் சுவை பெறும் பாடல்களைப் படித்துச் சுவைத்தல்




7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 147 14-03-2019 11:25:34

கவிதைப்பேழை

இயல் ஏழு

# விருந்தோம்பல்

LUT6SW




தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில் 'விருந்தோம்பல்' முதன்மையானதாகும். தமக்கு இல்லாவிட்டாலும் இருப்பதை விருந்தினருக்குத் தந்து மகிழ்ந்த நிகழ்வுகளைத் தமிழ் இலக்கியங்கள் பேசுகின்றன. கடையெழு வள்ளல்களுள் ஒருவர் பாரி. அப்பாரியின் புதல்வியர் பாணர்களுக்குப் புதுமையாக உணவு அளித்த செய்தியைக் கூறும் பாடலை அறிவோம்.

*மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்*
*பாரி மடமகள் பாண்மகற்கு – நீர்உலையுள்*
*பொன்திறந்து கொண்டு புகாவா நல்கினாள்*
*ஒன்றாகு முன்றிலோ இல்**

*– முன்றுறை அரையனார்*

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| மாரி | – மழை | மடமகள் | – இளமகள் |
| வறந்திருந்த | – வறண்டிருந்த | நல்கினாள் | – கொடுத்தாள் |
| புகவா | – உணவாக | முன்றில் | – வீட்டின் முன் இடம் (திண்ணை) இங்கு வீட்டைக் குறிக்கிறது |

## பாடலின் பொருள்

மழையின்றி வறட்சி நிலவிய காலத்தில், பாரி மகளிரான அங்கவை, சங்கவை ஆகியோரிடம் பாணர்கள் இரந்து நின்றனர். பாரிமகளிர் உலைநீரில் பொன் இட்டு அவர்களுக்குத் தந்தனர். அதனால் பொருள் ஏதும் இல்லாத வீடு எதுவும் இல்லை என்பதை அறியலாம்.

இப்பாடலில் இடம் பெற்றுள்ள பழமொழி ஒன்றாகு முன்றிலோ இல் என்பதாகும். ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை என்பது இதன் பொருள்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 148 14-03-2019 11:25:35

### நூல் வெளி

பழமொழி நானூறு நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார் ஆவார். இவர் கி.பி. (பொ.ஆ.) நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர். பழமொழி நானூறு நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் மூலம் இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என அறியமுடிகிறது.

பழமொழி நானூறு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது நானூறு பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம் பெற்றிருப்பதால் இது பழமொழி நானூறு என்னும் பெயர்பெற்றது. இந்நூலின் ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

1. வள்ளல்கள் எழுவரின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.
2. விருந்தோம்பல் பண்பை விளக்கும் கதை ஒன்றை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.

## மதிப்பீடு

*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

1. மரம் வளர்த்தால் _________ பெறலாம்.

   அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி

2. 'நீருலையில்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.

   அ) நீரு + உலையில் ஆ) நீர் + இலையில்

   இ) நீர் + உலையில் ஈ) நீரு + இலையில்

3. மாரி + ஒன்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______.

   அ) மாரியொன்று ஆ) மாரிஒன்று

   இ) மாரியின்று ஈ) மாரியன்று

*குறுவினா*

1. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.
2. 'பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை' – எவ்வாறு?

*சிந்தனை வினா*

தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகளை எழுதுக.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 149 14-03-2019 11:25:37

கவிதைப்பேழை

இயல்
ஏழு

# வயலும் வாழ்வும்

MG3GWG

நுழையும்முன்

உலகில் பலவகையான தொழில்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் பசிதீர்க்கும் தொழிலாகிய உழவுத்தொழில் முதன்மையானதாகும். நிலத்தைத் தெரிவு செய்தல், நாற்றுப் பறித்தல், நாற்று நடுதல், நீர் பாய்ச்சுதல், அறுவடை செய்தல், போரடித்தல், நெல்பெறுதல் ஆகியன உழவுத்தொழிலின் செயல்பாடுகள் ஆகும். இவற்றைப் பற்றிய நாட்டுப்புறப்பாடல் ஒன்றை அறிவோம்.

*ஓடை எல்லாம் தாண்டிப்போயி – ஏலேலங்கிடி ஏலேலோ*
*ஒண்ணரைக்குழி நிலமும் பார்த்து – ஏலேலங்கிடி ஏலேலோ*
*சீலையெல்லாம் வரிஞ்சுக்கட்டி – ஏலேலங்கிடி ஏலேலோ*
*சேத்துக்குள்ளே இறங்குறாங்க – ஏலேலங்கிடி ஏலேலோ*

*நாத்தெல்லாம் பிடுங்கையிலே – ஏலேலங்கிடி ஏலேலோ*
*நண்டும் சேர்த்துப் பிடிக்கிறாங்க – ஏலேலங்கிடி ஏலேலோ*
*ஒருசாணுக்கு ஒரு நாற்றுத்தான் – ஏலேலங்கிடி ஏலேலோ*
*ஓடியோடி நட்டோமையா – ஏலேலங்கிடி ஏலேலோ*


*மடமடன்னு மடைவழியே – ஏலேலங்கிடி ஏலேலோ*
*மண்குளிரத் தண்ணீர்பாய – ஏலேலங்கிடி ஏலேலோ*
*சாலுசாலாத் தாளுவிட்டு – ஏலேலங்கிடி ஏலேலோ*
*நாலுநாலா வளருதம்மா – ஏலேலங்கிடி ஏலேலோ*

*மணிபோலப் பால்பிடித்து – ஏலேலங்கிடி ஏலேலோ*
*மனதையெல்லாம் மயக்குதம்மா – ஏலேலங்கிடி ஏலேலோ*
*அறுப்பறுக்க ஆளுக்கெல்லாம் – ஏலேலங்கிடி ஏலேலோ*
*ஆளுபணம் கொடுத்துவாரான் – ஏலேலங்கிடி ஏலேலோ*

*சும்மாடும் தேர்ந்தெடுத்து – ஏலேலங்கிடி ஏலேலோ*
*சுறுசுறுப்பாய்க் கொண்டு போனார் – ஏலேலங்கிடி ஏலேலோ*
*கிழக்கத்தி மாடெல்லாம் – ஏலேலங்கிடி ஏலேலோ*
*கீழே பார்த்து மிதிக்குதையா – ஏலேலங்கிடி ஏலேலோ*

*கால்படவும் கதிரூபூரா – ஏலேலங்கிடி ஏலேலோ*
*கழலுதையா மணிமணியா – ஏலேலங்கிடி ஏலேலோ*

*தொகுப்பாசிரியர் – கி.வா. ஜகந்நாதன்*







7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 150 14-03-2019 11:25:48

### சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| குழி | – நில அளவைப்பெயர் | சீலை | – புடவை |
| சாண் | – நீட்டல் அளவைப்பெயர் | மடை | – வயலுக்கு நீர் வரும் வழி |
| மணி | – முற்றிய நெல் | கழலுதல் | – உதிர்தல் |
| சும்மாடு | – பாரம் சுமப்பவர்கள் தலையில் வைத்துக் கொள்ளும் துணிச்சுருள் | | |

### பாடலின் பொருள்

உழவு செய்யும் மக்கள் ஓடையைக் கடந்து சென்று ஒன்றரைக் குழி நிலத்தைத் தேர்ந்தெடுத்தனர். பெண்கள் புடவையை இறுகக்கட்டி நடவு செய்ய வயலில் இறங்கினர். நாற்றுப் பறிக்கும்போது ஆண்களும் பெண்களும் வயல் வரப்பில் உள்ள நண்டுகளையும் பிடித்தனர்.

ஒரு சாணுக்கு ஒரு நாற்று வீதம் சுறுசுறுப்பாக நட்டனர். நடவு நட்ட வயலின் மண்குளிருமாறு மடைவழியே நீர்பாய்ச்சினர். நட்ட நெற்பயிர்கள் வரிசையாக வளர்ந்து செழித்தன. பால் பிடித்து முற்றிய நெல்மணிகள் மனம் மயங்குமாறு விளைந்தன. அறுவடை செய்யும் ஆட்களுக்குப் பணம் கொடுத்தனர். அறுவடை செய்த நெல்தாள்களைக் கட்டுகளாகக் கட்டித் தலைக்குச் சும்மாடு வைத்துத் தூக்கிச் சென்று களத்தில் சேர்த்தனர். கதிரடித்த நெல்தாள்களைக் கிழக்கத்தி மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்தனர். மாடுகள் மிதித்த நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகள் மணிமணியாய் உதிர்ந்தன.

### தெரிந்து தெளிவோம்

அறுவடை செய்த நெற்கதிர்களைக் களத்தில் அடித்து நெல்லைப் பிரிப்பர். நெல்தாளில் எஞ்சியிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்வர். இதற்குப் போரடித்தல் என்று பெயர்.

*மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று*
*ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை*

*(நாட்டுப்புறப்பாடல்)*

### நூல் வெளி



நாட்டுப்புறங்களில் உழைக்கும் மக்கள் தங்கள் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் பாடும் பாடலே நாட்டுப்புறப்பாடல் எனப்படுகிறது. இதனை வாய்மொழி இலக்கியம் என்றும் வழங்குவர். பல்வேறு தொழில்கள் குறித்த நாட்டுப்புறப்பாடல்களை மலை அருவி என்னும் நூலில் கி.வா. ஜகந்நாதன் தொகுத்துள்ளார். அந்நூலில் உள்ள உழவுத்தொழில் பற்றிய பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

வேளாண்மை சார்ந்த கருவிகளின் பெயர்களை எழுதி வருக.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 151 14-03-2019 11:26:08

# மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உழவர் சேற்று வயலில் __________ நடுவர்.

   அ) செடி  ஆ) பயிர்  இ) மரம்  ஈ) நாற்று

2. வயலில் விளைந்து முற்றிய நெற்பயிர்களை __________ செய்வர்.

   அ) அறுவடை  ஆ) உழவு  இ) நடவு  ஈ) விற்பனை

3. 'தேர்ந்தெடுத்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) தேர் + எடுத்து  ஆ) தேர்ந்து + தெடுத்து

   இ) தேர்ந்தது + அடுத்து  ஈ) தேர்ந்து + எடுத்து

4. 'ஓடை + எல்லாம்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______.

   அ) ஓடைஎல்லாம்  ஆ) ஓடையெல்லாம்

   இ) ஓட்டையெல்லாம்  ஈ) ஓடெல்லாம்

பொருத்துக.

1. நாற்று - பறித்தல்
2. நீர் - அறுத்தல்
3. கதிர் - நடுதல்
4. களை - பாய்ச்சுதல்

வயலும் வாழ்வும் பாடலில் உள்ள மோனை, எதுகைச் சொற்களை எழுதுக.

| மோனைச் சொற்கள் | எதுகைச் சொற்கள் |
|---|---|
| | |

பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக.

போயி, பிடிக்கிறாங்க, வளருது, இறங்குறாங்க, வாராான்: (எ.கா.) போயி – போய்

குறுவினா

1. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?
2. நெற்கதிரிலிருந்து நெல்மணியை எவ்வாறு பிரிப்பர்?

சிறுவினா

உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.

சிந்தனை வினா

உழவுத்தொழிலில் காலந்தோறும் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றி எழுதுக.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 152 14-03-2019 11:26:09

## இயல் ஏழு

# திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி

**நுழையும்முன்**

தொடக்கத்தில் காடுகளில் வாழ்ந்து வந்த மனிதன் பின்னர் ஊர்களை உருவாக்கிக் கொண்டு வாழத் தொடங்கினான். சிறிய ஊர்கள் வளர்ச்சி அடைந்து நகரங்களாக மாறின. நகரங்களில் பெரும்பாலானவை ஆற்றங்கரைகளில் அமைந்திருந்தன. ஆற்றங்கரைகளில் சிறந்து விளங்கும் நகரங்கள் தமிழ்நாட்டில் பல உள்ளன. அவற்றுள் ஒரு நகரத்தைப் பற்றி அறிவோம்.




அன்பு நண்பன் எழிலனுக்கு,

வணக்கம். நான் நலம். நீயும் உன் குடும்பத்தினரும் நலமா? சென்ற ஆண்டுவரை நாம் ஒரே பள்ளியில் ஒன்றாகப் படித்து வந்தோம். இந்த ஆண்டு என் தந்தையின் பணி மாறுதல் காரணமாக எங்கள் சொந்த ஊருக்கு வந்து விட்டோம். வரும் கோடை விடுமுறையில் எங்கள் ஊராகிய திருநெல்வேலிக்கு நீ வர வேண்டும் என்று உன்னை அன்புடன் அழைக்கிறேன்.

திருநெல்வேலி தமிழகத்தின் பழமையான நகரங்களுள் ஒன்று. பழந்தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆண்டு வந்தனர் என்பது நமக்குத் தெரியும். அவர்களுள் பாண்டியர்களின் தலைநகரமாக மதுரை விளங்கியது. அவர்களது இரண்டாவது தலைநகரமாகத் திருநெல்வேலி விளங்கியது.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 153 14-03-2019 11:26:21

இந்நகரைச் சுற்றி நெல் வயல்கள் வேலி போல் அமைந்திருந்ததால் திருநெல்வேலி எனப் பெயர் பெற்றது. தற்போது நெல்லை என்று மருவி வழங்கப்படுகிறது. திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி என்று திருஞானசம்பந்தரும், தண்பொருநைப் புனல் நாடு என்று சேக்கிழாரும் திருநெல்வேலியின் சிறப்பைப் போற்றியுள்ளனர்.

### தெரிந்து தெளிவோம்

முற்காலத்தில் திருநெல்வேலிக்கு வேணுவனம் என்னும் பெயரும் இருந்துள்ளது. மூங்கில் காடு என்பது அதன் பொருளாகும். மூங்கில் நெல் மிகுதியாக விளைந்தமையால் அப்பகுதிக்கு நெல்வேலி என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கருதுவர்.

திருநெல்வேலி மாவட்டம் மலை வளம் மிகுந்த பகுதியாகும். இப்பகுதியின் சிறப்புமிக்க மலையாகிய பொதிகை மலை இலக்கியங்களில் பாராட்டப்பட்டு உள்ளது.

*பொதியி லாயினும் இமய மாயினும்*
*பதியெழு அறியாப் பழங்குடி*

என்று இளங்கோவடிகள் பொதிகை மலைக்கு முதலிடம் கொடுத்துப் பாடுகிறார். இலக்கியங்களில் திரிகூடமலை என வழங்கப்படும் குற்றாலமலை புகழ் பெற்ற சுற்றுலா இடமாகத் திகழ்கின்றது.

*வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்*
*மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்*

என்று குற்றால மலைவளத்தைத் திரிகூட இராசப்பக் கவிராயர் தம் குற்றாலக் குறவஞ்சி நூலில் பாடியுள்ளார்.

திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு தாமிரபரணி ஆகும். இதனைத் தண்பொருநை நதி என்று முன்னர் அழைத்தனர். இது பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனாநதி என்று பல கிளை ஆறுகளாகப் பிரிந்து திருநெல்வேலியை நீர்வளம் மிக்க மாவட்டமாகச் செய்கிறது.



திருநெல்வேலி மாவட்டப் பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு வகிப்பது உழவுத்தொழில். தாமிரபரணி ஆற்றின் மூலம் இங்கு உழவுத்தொழில் நடைபெறுகின்றது. இங்குக் குளத்துப் பாசனமும் கிணற்றுப் பாசனமும்கூடப் பயன்பாட்டில் உள்ளன. இருபருவங்களில் நெல் பயிரிடப்படுகின்றது. மானாவாரிப் பயிர்களாகச்



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 154 14-03-2019 11:26:21

சிறுதானியங்கள், எண்ணெய்வித்துகள், காய்கனிகள், பருத்தி, பயறுவகைகள் போன்றன பயிரிடப்படுகின்றன. இராதாபுரம், நாங்குநேரி, அம்பாசமுத்திரம், தென்காசி போன்ற பகுதிகளில் பெருமளவில் வாழை பயிரிடப்படுகின்றது. இங்கு விளையும் வாழைத்தார்கள் தமிழ்நாடு மட்டுமன்றிக் கர்நாடகம், கேரளம் போன்ற பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. நெல்லிக்காய் உற்பத்தியில் தமிழகத்தில் நெல்லை மாவட்டமே முதலிடம் வகிக்கின்றது. கடலோர மற்றும் உள்நாட்டு மீன்பிடித் தொழிலும் இம்மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறுகிறது.

**தெரிந்து தெளிவோம்**

திருநெல்வேலிக்கு அருகிலுள்ள ஆதிச்சநல்லூர் என்னும் இடத்தில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வில் இறந்தவர்களின் உடல்களைப் புதைக்கப் பழந்தமிழர்கள் பயன்படுத்திய முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழரின் தொன்மைக்கும் நாகரிகச் சிறப்புக்கும் சான்றாக விளங்கும் தொல்பொருள்கள் இங்குக் கிடைத்துள்ளன. இவ்வூர் தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது.

தாமிரபரணி கடலோடு கலக்கும் இடத்தில் கொற்கை என்னும் துறைமுகம் இருந்தது. இங்கு முத்துக்குளித்தல் சிறப்பாக நடைபெற்றதாகத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. கொற்கையில் விளைந்த பாண்டி நாட்டு முத்து உலகப் புகழ் பெற்றதாக விளங்கியது.

*முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை* (நற்றிணை 23:6)

*கொற்கையில் பெருந்துறை முத்து* (அகம் 27:9)

என்று சங்க இலக்கியங்கள் கொற்கையின் முத்துகளைக் கூறுகின்றன. கிரேக்க, உரோமாபுரி நாடுகளைச் சேர்ந்தவர்களான யவனர்கள் இந்த முத்துகளை விரும்பி வாங்கிச் சென்றனர்.

பொருநை எனப்படும் தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ள நெல்லை மாநகரின் அமைப்பு சிறப்பானது. நகரின் நடுவே நெல்லையப்பர் திருக்கோவில் அமைந்துள்ளது. கோவிலைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் மாட வீதிகள் அமைந்துள்ளன. அவற்றைச் சுற்றித் தேரோடும் வீதிகள் அழகுற அமைந்துள்ளன. இங்குத் திங்கள்தோறும் திருவிழா நடைபெறும் என்பதை,

*திங்கள் நாள்விழா மல்கு திருநெல்*
*வேலியுறை செல்வர் தாமே*

என்னும் திருஞானசம்பந்தர் பாடல் அடிகளால் அறியலாம்.

நெல்லை மாநகரில் உள்ள தெருக்கள் பல அதன் பழமைக்குச் சான்றாக உள்ளன. காவற்புரைத் தெரு என்று ஒரு தெரு உள்ளது. காவற்புரை என்றால் சிறைச்சாலை. அரசரால் தண்டிக்கப்பட்டவர்கள் இங்குச் சிறை வைக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது.

மேல வீதியை அடுத்துக் கூழைக்கடைத் தெரு உள்ளது. கூலம் என்பது தானியத்தைக் குறிக்கும். கூலக்கடைத்தெரு என்பதே மருவிக் கூழைக்கடைத் தெரு என வழங்கப்படுகிறது.

அக்கசாலை என்பது அணிகலன்களும் பொற்காசுகளும் உருவாக்கும் இடம். முற்காலத்தில் பொன் நாணயங்கள் உருவாக்கும் பணியாளர்கள் வாழ்ந்த பகுதி அக்கசாலைத் தெரு என்னும் பெயரில் அமைந்துள்ளது.


### தெரிந்து தெளிவோம்

தாமிரபரணி ஆற்றின் மேற்குக் கரையில் திருநெல்வேலியும் கிழக்குக் கரையில் பாளையங்கோட்டையும் அமைந்துள்ளன. இவ்விரு நகரங்களும் இரட்டை நகரங்கள் என அழைக்கப்படுகின்றன. பாளையங்கோட்டையில் அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருப்பதால் அந்நகரைத் தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்பர்.

நெல்லை நகரின் மேற்கே பேட்டை என்னும் ஊர் உள்ளது. வணிகம் நடைபெறும் பகுதியைப் பேட்டை என வழங்குதல் பண்டைய மரபு. இப்பகுதி முன்பு பெருவணிகம் நடைபெற்ற இடமாக இருந்திருக்க வேண்டும். பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனை நெல்லை நகர மக்கள் எதிர்கொண்டு வரவேற்ற இடம் பாண்டியபுரம் எனவும் அவன் தேவியாகிய மங்கையர்க்கரசியை மகளிர் எதிர்கொண்டு வரவேற்ற இடம் திருமங்கை நகர் என்றும் வழங்கப்படுகின்றன.

நாயக்க மன்னரின் தளவாயாக விளங்கிய அரியநாயகரின் வழித் தோன்றல் வீரராகவர். அவரது பெயரில் அமைந்த ஊர் வீரராகவபுரம் எனவும், அவரது துணைவியார் மீனாட்சி அம்மையார் பெயரில் உள்ள ஊர் மீனாட்சிபுரம் எனவும் வழங்கப்பட்டு வருகின்றன.

சேரன்மாதேவி, கங்கைகொண்டான், திருமலையப்பபுரம், வீரபாண்டியப்பட்டினம், குலசேகரன்பட்டினம் போன்ற ஊர்கள் பண்டைய வரலாற்றை நினைவூட்டுவனவாக உள்ளன. பாளையங்கோட்டை, உக்கிரன்கோட்டை, செங்கோட்டை என்னும் பெயர்கள் இம்மாவட்டத்தில் கோட்டைகள் பல இருந்தமைக்குச் சான்றாக விளங்குகின்றன.



அகத்தியர் பொதிகை மலையில் வாழ்ந்தார் என்பர். சங்கப் புலவரான மாறோக்கத்து நப்பசலையார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர், கவிராசப் பண்டிதர் ஆகியோர் திருநெல்வேலிச் சீமையில் பிறந்து தமிழுக்குச் செழுமை சேர்த்துள்ளனர். அயல்நாட்டு அறிஞர்களான ஜி.யு. போப், கால்டுவெல், வீரமாமுனிவர் போன்றோரையும் தமிழின்பால் ஈர்த்த பெருமைக்கு உரியது திருநெல்வேலி.

இத்தகைய சிறப்பு மிக்க திருநெல்வேலிக்கு உன்னை அன்போடு அழைக்கின்றேன்.

இப்படிக்கு,

உன் அன்பு நண்பன்,

அறிவழகன்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 156 14-03-2019 11:26:21

## கற்பவை கற்றபின்

1. உங்களுடைய மாவட்டத்தில் உள்ள சுற்றுலா இடங்கள் பற்றிய செய்திகளைத் தேடித் தொகுக்க.
2. தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் பற்றிய செய்திகளைத் தொகுக்க.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. திருநெல்வேலி_________ மன்னர்களோடு தொடர்பு உடையது.

   அ) சேர ஆ) சோழ இ) பாண்டிய ஈ) பல்லவ

2. இளங்கோவடிகள் _________ மலைக்கு முதன்மை கொடுத்துப் பாடினார்.

   அ) இமய ஆ) கொல்லி இ) பொதிகை ஈ) விந்திய

3. திருநெல்வேலி _________ ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

   அ) காவிரி ஆ) வைகை இ) தென்பெண்ணை ஈ) தாமிரபரணி

பொருத்துக.

1. தண்பொருநை - பொன்நாணயங்கள் உருவாக்கும் இடம்
2. அக்கசாலை - குற்றாலம்
3. கொற்கை - தாமிரபரணி
4. திரிகூடமலை - முத்துக் குளித்தல்

குறுவினா

1. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?
2. கொற்கை முத்து பற்றிக் கூறுக.

சிறு வினா

1. திருநெல்வேலிப் பகுதியில் நடைபெறும் உழவுத் தொழில் குறித்து எழுதுக.
2. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.
3. திருநெல்வேலி நகர அமைப்புப் பற்றிக் கூறுக.

சிந்தனை வினா

மக்கள் மகிழ்ச்சியாக வாழ ஒரு நகரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 157 14-03-2019 11:26:21

விரிவானம்

இயல் ஏழு

# திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்

**நுழையும்முன்**

*நல்ல பாடல்களைப் படித்துச் சுவைப்பது உள்ளத்திற்கு மகிழ்ச்சி அளிக்கும். அதுபோலவே சிறந்த புலவர்களைப் பற்றி அறிந்து கொள்வதும் நமக்கு மகிழ்ச்சி தரும். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறந்த புலவர்கள் பலர் உருவாகியுள்ளனர். அவர்களுள் திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த புலவர்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.*

N54UV8



ஒரு நாட்டில் காவியம் உண்டாகிக் கொண்டே இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது அவ்வளவு சரியல்ல. பொதுவாக, ஆயிரம் வருஷத்துக்கு ஒரு தடவை கவிஞன் பிறக்கிறான் என்று சொல்லுவார்கள். ஒருவகையாக அஃது உண்மைதான். கவி அவ்வளவு அருமை. ஆனால், கவியை அனுபவிக்கிற திறமை அவ்வளவு அபூர்வமான விஷயம் அல்ல; ஆண், பெண் எல்லோருமே அனுபவிக்கிற விஷயந்தான் அது.

வானத்தில் விளைந்த சுடர்கள்போல இயற்கையில் விளைந்த கவிகளைத்தான் கவிகள் என்று சொல்ல வேண்டும். மின்மினிப் பூச்சியையும் 'காக்காப்' பொன்னையும் பார்த்து ஏமாந்து போகக் கூடாது. திருநெல்வேலி ஜில்லா நெடுகிலும் உண்மையான கவிஞர்கள் பிறந்திருக்கிறார்கள். அவர்களுடைய பாடல்களையும் மக்கள் அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

பாரதியார் பிறந்து வளர்ந்த இடம் எட்டையபுரம். எட்டையபுர சமஸ்தானம் நெடுகிலும் ஊர் ஊராய்ப் புலவர்களும் கவிராயர்களும் வாழ்ந்தனர். தேசிகவிநாயகனார் கன்னியாகுமரிப் பக்கம் – அதாவது நாஞ்சில் நாட்டில் பிறந்து வளர்ந்தவராய் இருந்தாலும் அவர் தமிழை அழுத்தமாக ஆர்வத்தோடு கற்ற இடம் திருநெல்வேலி நகர்தான்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 158 14-03-2019 11:26:21

பாரதியாரும் தேசிகவிநாயகனாரும் நம்மோடு ஒட்டியவர்கள். அவர்களை விட்டுவிட்டு, கொஞ்சம் முந்தியுள்ள கவிஞர்களைப் பார்க்கலாம். கோயில்பட்டியிலிருந்து கிழக்கே எட்டு மைல் தூரத்தில்தான் பாரதியாரின் பிறப்பிடமாகிய எட்டையபுரம் இருக்கிறது. அங்கே சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன் இருந்தவர் கடிகைமுத்துப் புலவர். அவர் வெங்கடேசுர எட்டப்ப ராஜாவைப் பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார்.

மணியாச்சியிலிருந்து ஏழெட்டு மைல் தூரத்தில் தாமிரபரணி நதியும் சிற்றாறும் கலக்கிற இடம்தான் சீவலப்பேரி என்கிற முக்கூடல். முக்கூடல் பள்ளு என்னும் பிரபந்தம் முக்கூடலைப் பற்றியதுதான். சாதாரணமாக மழை பெய்யாத இடத்தில் மழை பெய்கிறது என்றால் குடியானவர்களுக்கு ஒரே கும்மாளி அல்லவா? அந்தக் கும்மாளி,

*ஆற்று வெள்ளம் நாளை வரத் தோற்று தேகுறி – மலை*
*யாள மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே!*

என்ற அடியிலே இருக்கிறது. குடியானவர்களுக்கு இடிமுழக்கம்தான் சங்கீதம்; மின்னல் வீச்சுத்தான் நடனம்.

இனி, திருநெல்வேலிக்குப் போகலாம். சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் மதுரைப் பக்கத்திலிருந்து பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் நெல்லைக்கு வந்தார். நெல்லையப்பர் கோவிலில் எழுந்தருளியுள்ள காந்திமதித் தாயைத் தரிசித்தார். ரொம்ப ரொம்ப உரிமை பாராட்டி, சுவாமியிடம் சிபாரிசு செய்யவேண்டும் என்று முரண்டுகிறார்.

திருநெல்வெலியிலிருந்து திருச்செந்தூருக்குப் போகிற மார்க்கத்திலே பதினெட்டாவது மைலில் ஆற்றுக்கு வடகரையில் சீவைகுண்டம் இருக்கிறது. பிள்ளைப்பெருமாள் சீவைகுண்டத்துப் பெருமாளைப் பற்றிப் பாடியுள்ளார். ஆற்றுக்குத் தென்கரையில் நம்மாழ்வார் அவதார ஸ்தலமான ஆழ்வார்திருநகரி இருக்கிறது. பூர்வத்தில் இதற்குத் திருக்குருகூர் என்று பெயர். நம்மாழ்வார் தமது ஈடுபாட்டை ஆயிரம் தமிழ்ப்பாட்டில் (திருவாய்மொழியில்) வெளியிட்டார். இது தமிழுக்குக் கிடைத்த யோகம்.

இனி மோட்டார் வண்டியை ஒரு முக்கியமான ஊருக்கு விட வேண்டும். கொற்கை என்கிற சிறு ஊர்தான் அது. அதன் புகழோ அபாரம். சுமார் இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னிருந்த ஒரு பெருங்கவிஞர் முத்தொள்ளாயிர ஆசிரியர். பல தேசங்களிலுமிருந்து வர்த்தகர்கள் வந்து முத்து வியாபாரம் செய்கிறதை அவர் பார்த்தார். மேற்கே ரோமாபுரி, கிரேக்கதேசம் முதல் கிழக்கே சைனா வரையும் கொற்கையிலிருந்தே முத்து போய்க் கொண்டிருந்தது. புலவர் முத்து வளத்தை நன்றாய் அனுபவித்தார்; பாடினார்.

திருச்செந்தூருக்குச் சுவாமி தெரிசனம் செய்யப் போக வேண்டியதுதான் இனி. வழியிலே, காயல்பட்டணத்தில் கொஞ்சம் இறங்கி விட்டுப் போகலாம். காயல்பட்டணத்தில் இருநூற்றைம்பது வருஷத்துக்கு முன் சீதக்காதி என்ற பெரிய வாணிகர் இருந்தார். அவருடைய கப்பல்கள் பல தேசங்களுக்கும் சென்று வர்த்தகத்தின் மூலமாக மிகுந்த திரவியத்தைச் சம்பாதித்து வந்தன. அவர் தமிழ்ப் புலவர்களுக்குப் பெருங்கொடை கொடுத்து வந்தார். அவர் இறந்தபோது, புலவர்கள் இதயத்தில் இடிதான் விழுந்தது. நமசிவாயப் புலவர் என்பவர் என்ன ஆற்றாமையோடு அலறுகின்றார் பாருங்கள்:



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 159 14-03-2019 11:26:21

*பூமாது இருந்தென் புவிமாது இருந்தென் இப்பூதலத்தில்*
*நாமாது இருந்தென்ன நாமும் இருந்தென்ன நாவலர்க்குக்*
*கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைக்கரத்துச்*
*சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே!*

உண்மையான உணர்ச்சி .

இனிப் போக வேண்டியது திருச்செந்தூருக்குத்தான். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் வந்து, நந்தவனங்களைப் பார்த்து அனுபவித்தார். ஏரிநீர் நந்தவனங்களில் கட்டிக் கிடப்பதால் சேல்மீன்கள் துள்ளிக் குதிக்கவும் பூஞ்செடி கொடிகளையே அழிக்கவும் தலைப்பட்டன என்று பாடியுள்ளார்.

சமுத்திரத்தை முட்டியாகிவிட்டது. மோட்டார் வண்டியைத் திருப்பி, நேரே கழுகுமலைக்குப் போவோம். இக்காலத்தில் பாடுகிற காவடிப்பாட்டெல்லாம் கழுகுமலை முருகன் மேல்தான். இக்காவடிச்சிந்தைப் பாடியவர் அண்ணாமலையார். காவடிப்பாட்டைக் கேட்க வேண்டுமானால், பம்பை, மேளம், ஆட்டம் எல்லாவற்றோடும் கேட்டால்தான் ரஸமும், சக்தியும் தெரியும்.

இங்கிருந்து சங்கரன்கோயில் பன்னிரண்டு மைல். பெரிய சிவஸ்தலம். அம்பாள் கோமதித் தாய். கோமதித் தாயைப் பற்றி உண்மையான பக்தியும் தமிழ்ப் பண்பும் வாய்ந்த ஒரு பாடல். அதைப் பாடியவர் திருநெல்வேலி அழகிய சொக்கநாதர்

*'வாடா' என அழைத்து வாழ்வித்தால் அம்ம உனைக்*
*கூடாதென் றார் தடுப்பார் கோமதித்தாய் ஈஸ்வரியே!*

பக்தியானது தமிழுக்குள்ளே வளைந்து வளைந்து ஓடுவது அழகாய் இருக்கிறது!

சங்கரன்கோயிலுக்கு வடக்கே எட்டு மைலில் முக்கியமான ஸ்தலம் கருவைநல்லூர். இதற்குக் கரிவலம் வந்த நல்லூர் என்றும் பெயர். கோயிலும் சுற்று வீதிகளும் அழகாய் அமைந்திருக்கின்றன. இத்திருத்தலத்தின் சிறப்பில் தோய்ந்த புலவர் ஒருவர் திருக்கருவை வெண்பா அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறை அந்தாதி என்ற மூன்று நூல்களைப் பாடியிருக்கிறார். அவற்றில் அநேக பாடல்கள் பக்தியும் செய்யுள் நயமும் நிறைந்து, பாடப் பாட நாவுக்கு இனிமை தந்து கொண்டிருக்கின்றன.

இனி, குற்றாலத்துக்கு நேராகப் போக வேண்டும். கவி இல்லாமலே மனசைக் கவரக்கூடிய இடம் குற்றாலம். கோயில், அருவி, சோலை பொதிந்த மலை, தென்றல் எல்லாம் சேர்ந்து அமைந்திருப்பதைப் பார்த்தால், உலகத்திலேயே இந்த மாதிரி இடம் இல்லை என்றே சொல்லலாம். சுமார் ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன் திருஞான சம்பந்தர் இங்கு வந்தார். நுண் துளி தூங்கும் குற்றாலம் என்று பாடினார்.

மாணிக்கவாசகரும் ஒரு பாடல் பாடியிருக்கிறார் :

*உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்*
*கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்*
*குற்றாலத் துறைகின்ற கூத்தாஉன் குரைகழற்கே*
*கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே!*



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 160 14-03-2019 11:26:21

பிற்காலத்திலே எழுந்த தமிழ் இலக்கியங்களில் முக்கியமானது குற்றாலக் குறவஞ்சி. அஃது உண்மையான தமிழ்ப் பண்பும் கவிப்பண்பும் வாய்ந்தது. இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன் குற்றாலத்துக்குக் கிழக்கே இரண்டு மைலில் உள்ள மேலகரத்தில் வாழ்ந்துவந்த திரிகூடராசப்பக் கவிராயர் பாடிய நூல். தமிழ்க் கவியின் உல்லாச விளையாட்டு இன்னது என்று தெரிவதற்கு இதிலே ஒரு சிறு பாடலைப் பார்க்கலாம். குறி சொல்லுகிற பெண் குற்றாலமலையின் பெருமையைக் கொழிக்கிறாள்:

*கயிலை எனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே!*
*கனகமகா மேருவென நிற்கும்மலை அம்மே!*
*துயிலும் அவர் விழிப்பாகி அகிலம் எங்கும் தேடும்*
*துங்கர்திரி கூடமலை எங்கள்மலை அம்மே!*

இப்பாட்டு, மலையிலுள்ள அருவிகளைப் போல் கும்மாளி போடுகிறது.

இத்தகைய சிறப்புமிக்க திருநெல்வேலிக் கவிகளின் கவிதைகளைப் படித்துச் சுவைப்போம்!

குறிப்பு: இக்கட்டுரை ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்டது. எனவே அக்கால நடையில் எழுதப்பட்டுள்ளது.

திருநெல்வேலிச் சீமை என்று குறிப்பிடப்படுவது இன்றைய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் இணைந்த பகுதியாகும்.

### நூல் வெளி



டி.கே.சி என அழைக்கப்படும் டி.கே. சிதம்பரநாதர் வழக்கறிஞர் தொழில் செய்தவர்; தமிழ் எழுத்தாளராகவும் திறனாய்வாளராகவும் புகழ் பெற்றவர்; இரசிகமணி என்று சிறப்பிக்கப்பட்டவர். இவர் தமது வீட்டில் 'வட்டத்தொட்டி' என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வந்தார். இவர் கடித இலக்கியத்தின் முன்னோடி, தமிழிசைக் காவலர், வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர் எனப் பலவாறாகப் புகழப்படுகிறார். பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கட்டுரை இவரது இதய ஒலி என்னும் நூலில் இருந்து தரப்பட்டுள்ளது.



## கற்பவை கற்றபின்

உங்களுக்குப் பிடித்த கவிதை ஒன்றைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.

## மதிப்பீடு

டி.கே.சி குறிப்பிடும் திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 161 14-03-2019 11:26:22

கற்கண்டு

இயல் ஏழு

# அணி இலக்கணம்

NQE5YS

## அணி

அணி என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள். ஒரு செய்யுளைச் சொல்லாலும், பொருளாலும் அழகு பெறச் செய்தலை அணி என்பர்.

## உவமை அணி



மயில் போல ஆடினாள்.

மீன் போன்ற கண்.

இத்தொடர்களைப் படியுங்கள். இத்தொடர்களில் நடனம் ஆடும் பெண்ணோடு மயிலையும், கண்ணுடன் மீனையும் ஒப்பிட்டுள்ளனர். இவ்வாறு ஒப்பிட்டுக் கூறப்படும் பொருளை (மயில், கண்) உவமை அல்லது உவமானம் என்பர். உவமையால் விளக்கப்படும் பொருளை உவமேயம் என்பர். இத்தொடர்களில் வந்துள்ள 'போல', 'போன்ற' என்பவை உவம உருபுகளாகும்.

*அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை* (பொறையுடைமை)

பூமி தன்னைத் தோண்டுபவரைப் பொறுத்துக் கொள்வது போல நாம் நம்மை இகழ்ந்து பேசுபவரைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பது இக்குறளின் பொருள்.

இதில் பூமி தன்னைத் தோண்டுபவரைப் பொறுத்துக் கொள்ளுதல் என்பது உவமை. நாம் நம்மை இகழ்ந்து பேசுபவரைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பது ஒப்பிடப்படும் பொருள் (உவமேயம்). 'போல' என்பது உவம உருபு.

ஒரு பாடலில் உவமையும், உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வந்தால் அது உவமை அணி எனப்படும். போல, புரைய, அன்ன, இன்ன, அற்று, இற்று, மான, கடுப்ப, ஒப்ப, உறழ போன்றவை உவம உருபுகளாக வரும்.

## எடுத்துக்காட்டு உவமை அணி

*தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத்து ஊறும் அறிவு* (கல்வி)

மணற்கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும். மனிதர்கள் கற்கும் அளவிற்கு ஏற்ப அறிவு பெருகும் என்பதே இக்குறளின் கருத்தாகும். இதில் தொட்டனைத்து ஊறும்



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 162 14-03-2019 11:26:22

மணற்கேணி என்பது உவமை. மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு என்பது உவமேயம். இடையில் 'அதுபோல்' என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

இவ்வாறு உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் வந்து உவம உருபு மறைந்து வந்தால் அஃது எடுத்துக்காட்டு உவமை அணி எனப்படும்.

### இல்பொருள் உவமையணி

மாலை வெயிலில் மழைத்தூறல் பொன்மழை பொழிந்ததுபோல் தோன்றியது.

காளை கொம்பு முளைத்த குதிரை போலப் பாய்ந்து வந்தது.

இத்தொடர்களில் 'பொன்மழை பொழிந்தது போல்', 'கொம்பு முளைத்த குதிரை போல' என்னும் உவமைகள் வந்துள்ளன. உலகில் பொன் மழையாகப் பொழிவதும் இல்லை. கொம்பு முளைத்த குதிரையும் இல்லை. இவ்வாறு உலகில் இல்லாத ஒன்றை உவமையாகக் கூறுவதை இல்பொருள் உவமை அணி என்பர்.

## கற்பவை கற்றபின்

பின்வரும் தொடர்களில் உள்ள உவமை, உவமேயம், உவம உருபு ஆகியவற்றைக் கண்டறிந்து எழுதுக.

| தொடர்கள் | உவமை | உவமேயம் | உவம உருபு |
|---|---|---|---|
| மலரன்ன பாதம் | மலர் | பாதம் | அன்ன |
| தேன் போன்ற தமிழ் | | | |
| புலி போலப் பாய்ந்தான் சோழன் | | | |
| மயிலொப்ப ஆடினாள் மாதவி | | | |

## மதிப்பீடு

குறுவினா

1. உவமை, உவமேயம், உவம உருபு விளக்குக.
2. உவமை அணிக்கும் எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 163 14-03-2019 11:26:22

## மொழியை ஆள்வோம்!

### கேட்க.

புகழ் பெற்ற கவிஞர் ஒருவரது உரையின் ஒலிப்பதிவைக் கேட்டு மகிழ்க.

### கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று பற்றி இரண்டு நிமிடம் பேசுக.

1. நான் விரும்பும் கவிஞர்.
2. எனக்குப் பிடித்த பாடல்.

P5X114

### சொல்லக் கேட்டு எழுதுக.

1. மாடுகள் கொண்டு நிலத்தை உழுதனர்.
2. நீர்வளம் மிக்க ஊர் திருநெல்வேலி.
3. நெல்லையில் தமிழ்க் கவிஞர் பலர் வாழ்ந்தனர்.
4. அகத்தியர் வாழ்ந்த மலை பொதிகை மலை.
5. இல்லாத பொருளை உவமையாக்குவது இல்பொருள் உவமை அணி.

### பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

*பனை மரமே பனை மரமே*
*ஏன் வளந்தே இத் தூரம்?*

*குடிக்கப் பதனியானேன்!*
*கொண்டு விற்க நுங்கானேன்!*
*தூரத்து மக்களுக்குத்*
*தூதோலை நானானேன்!*
*அழுகிற பிள்ளைகட்குக்*
*கிலுகிலுப்பை நானானேன்!*
*கைதிரிக்கும் கயிறுமானேன்!*
*கன்றுகட்டத் தும்புமானேன்!*

*– நாட்டுப்புறப்பாடல்*

### வினாக்கள்

1. பனை மரம் தரும் உணவுப் பொருள்கள் யாவை?
2. பனை மரம் யாருக்குக் கிலுகிலுப்பையைத் தரும்?
3. 'தூதோலை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.
4. பனைமரம் மூலம் நமக்குக் கிடைக்கும் பொருள்களைப் பட்டியலிடுக.
5. பாடலுக்கு ஏற்ற தலைப்பை எழுதுக.

### பின்வரும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

என்னைக் கவர்ந்த நூல்.

## மொழியோடு விளையாடு

### குறுக்கெழுத்துப் புதிர்.

தமிழ்நாட்டில் உள்ள ஊர்ப் பெயர்களையும் அவற்றின் சிறப்பையும் அறிவோம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | | |
| | | | | | 3 | | 4 | |
| | | | 5 | | | 6 | | |
| | | | | | | | | |
| | | | | | | | | 7 |
| | | | | 8 | | | | |
| | | | | | | | | |
| | 9 | | 10 | | | | | |
| | | 11 | | 12 | | | | |
| 13 | | | | | | 14 | | |

**இடமிருந்து வலம்**

1. பின்னலாடை நகரம்
2. மலைகளின் அரசி
6. தமிழகத்தின் தலைநகரம்
13. நெற்களஞ்சியம்

**வலமிருந்து இடம்**

3. மலைக்கோட்டை நகரம்
5. ஏழைகளின் ஊட்டி
8. மாங்கனித் திருவிழா
11. மஞ்சள் மாநகரம்

**மேலிருந்து கீழ்**

1. பூட்டு நகரம்
3. தேர் அழகு நகரம்
4. தெற்கு எல்லை
7. புலிகள் காப்பகம்

**கீழிருந்து மேல்**

9. பட்டாசு நகரம்
10. தூங்கா நகரம்
12. மலைகளின் இளவரசி
14. கர்மவீரர் நகரம்

### தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.

1. என் தாயார் என்னை ___________________ காத்து வளர்த்தார்.

(கண்ணை இமை காப்பது போல / தாயைக் கண்ட சேயைப் போல)



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 165 14-03-2019 11:26:23

2. நானும் என் தோழியும் ____________________ இணைந்து இருப்போம்.
(இஞ்சி தின்ற குரங்கு போல / நகமும் சதையும் போல)

3. திருவள்ளுவரின் புகழை ____________________ உலகமே அறிந்துள்ளது.
(எலியும் பூனையும் போல / உள்ளங்கை நெல்லிக்கனி போல)

4. அப்துல் கலாமின் புகழ் _______________ உலகெங்கும் பரவியது.
(குன்றின்மேலிட்ட விளக்கு போல / குடத்துள் இட்ட விளக்கு போல)

5. சிறுவயதில் நான் பார்த்த நிகழ்ச்சிகள் _______________ என் மனத்தில் பதிந்தன.
(கிணற்றுத்தவளை போல / பசுமரத்தாணி போல)

**கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.**

(எ.கா) திருநெல்வேலி – திரு, நெல், வேலி, வேல்

1. நாகப்பட்டினம் – ______________________________
2. கன்னியாகுமரி – ______________________________
3. செங்கல்பட்டு – ______________________________
4. உதகமண்டலம் – ______________________________
5. பட்டுக்கோட்டை – ______________________________

## நிற்க அதற்குத் தக...

**என் பொறுப்புகள்....**

1. நகரங்களின் சிறப்புத் தன்மையை அறிந்து போற்றுவேன்.
2. ஒவ்வொரு ஊரிலும் நடைபெறும் தொழில்களின் சிறப்பை அறிந்து தொழில் செய்வோரை மதிப்பேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

| | | | |
|---|---|---|---|
| நாகரிகம் | – *Civilization* | வேளாண்மை | – *Agriculture* |
| நாட்டுப்புறவியல் | – *Folklore* | கவிஞர் | – *Poet* |
| அறுவடை | – *Harvest* | நெற்பயிர் | – *Paddy* |
| நீர்ப்பாசனம் | – *Irrigation* | பயிரிடுதல் | – *Cultivation* |
| அயல்நாட்டினர் | – *Foreigner* | உழவியல் | – *Agronomy* |

## இணையத்தில் காண்க


திருநெல்வேலிப் பகுதியில் வழங்கி வரும் நாட்டுப்புறப் பாடல்களில் – தொழில், வணிகம் சார்ந்த பாடல்களை இணையத்தில் தேடி எழுதி வருக.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 166 14-03-2019 11:26:23

இயல்
எட்டு

# ஒப்புரவு ஒழுகு



## கற்றல் நோக்கங்கள்

- பாடலின் பொருள் அறிய அகராதியைப் பயன்படுத்தும் திறன் பெறுதல்
- அறநெறிச்சாரப் பாடலில் உள்ள உருவகத்தையும் அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் பாங்கினையும் படித்தறிதல்
- ஒரு கருத்தை மையப்படுத்திய கட்டுரைகளின் கருத்து வெளிப்பாட்டுத் தன்மையினை உணர்ந்து பயன்படுத்துதல்
- படக்காட்சிகள் வழி கருத்துகளைப் புரிந்து கொள்ளுதல்
- பாடல்களில் இடம்பெறும் அணிகளை அடையாளம் காணும் திறன் பெறுதல்

கவிதைப்பேழை

இயல் எட்டு

# புதுமை விளக்கு

ST4L5U




உள்ளத்தூய்மையோடு நன்னெறியில் நடப்பதே சான்றோரின் இயல்பு. இறைவழிபாட்டில் சடங்குகளை விட உள்ளத் தூய்மையே முதன்மையானது. இயற்கையையும் தம் உள்ளத்து அன்பையும் விளக்காக ஏற்றி வழிபட்ட சான்றோர்களின் பாடல்களைக் கற்று மகிழ்வோம்.

*வையம் தகளியா வார்கடலே நெய்யாக*
*வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய*
*சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை*
*இடர்ஆழி நீங்குகவே என்று**

*– பொய்கை ஆழ்வார்*

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| வையம் | – உலகம் | | |
| வெய்ய | – வெப்பக்கதிர் வீசும் | இடர்ஆழி | – துன்பக்கடல் |
| சுடர்ஆழியான் | – ஒளிவிடும் சக்கரத்தை உடைய திருமால் | சொல் மாலை | – பாமாலை |

## பாடலின் பொருள்

பூமியை அகல்விளக்காகவும், ஒலிக்கின்ற கடலை நெய்யாகவும், வெப்பக்கதிர் வீசும் கதிரவனைச் சுடராகவும் கொண்டவன் திருமால். சிவந்த ஒளிவீசும் சக்கரத்தை உடைய அவனது திருவடிகளுக்கு என் துன்பக்கடல் நீங்க வேண்டிப் பாடலால் மாலை சூட்டினேன்.



### நூல் வெளி

பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருவெஃகா என்னும் ஊரில் பிறந்தவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள முதல் திருவந்தாதி இவர் பாடியதாகும். அதன் முதல் பாடல் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 168 14-03-2019 11:26:24

*அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக*
*இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புஉருகி*
*ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு*
*ஞானத்தமிழ் புரிந்த நான்*

*– பூதத்தாழ்வார்*

**சொல்லும் பொருளும்**

| | | | |
|---|---|---|---|
| தகளி | – அகல்விளக்கு | நாரணன் | – திருமால் |
| ஞானம் | – அறிவு | | |

**பாடலின் பொருள்**

ஞானத்தமிழ் பயின்ற நான் அன்பையே அகல்விளக்காகவும், ஆர்வத்தையே நெய்யாகவும், இனிமையால் உருகும் மனத்தையே இடுகின்ற திரியாகவும் கொண்டு, ஞான ஒளியாகிய சுடர் விளக்கை மனம் உருக திருமாலுக்கு ஏற்றினேன்.

**நூல் வெளி**

பூதத்தாழ்வார் சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் பிறந்தவர். இவர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இரண்டாம் திருவந்தாதியை இயற்றியுள்ளார். நம் பாடப்பகுதி இரண்டாம் திருவந்தாதியில் உள்ள முதல்பாடலாகும்.

**தெரிந்து தெளிவோம்**

ஒரு பாடலின் இறுதி எழுத்தோ அசையோ, சொல்லோ அடுத்து வரும் பாடலுக்கு முதலாக அமைவதை அந்தாதி என்பர். (அந்தம் – முடிவு, ஆதி – முதல்).

இவ்வாறு அந்தாதியாக அமையும் பாடல்களைக் கொண்டு அமைவது அந்தாதி என்னும் சிற்றிலக்கிய வகையாகும்.

**தெரிந்து தெளிவோம்**

திருமாலைப் போற்றிப் பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். அவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நாலாயிரத் திவ்விய பிரபந்தம் ஆகும். இதனைத் தொகுத்தவர் நாதமுனி ஆவார்.

பன்னிரு ஆழ்வார்களுள் பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும் முதலாழ்வார்கள் என்பர்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 169 14-03-2019 11:26:24

## கற்பவை கற்றபின்

பன்னிரு ஆழ்வார்களின் பெயர்களைத் திரட்டுக

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. "இடர் ஆழி நீங்குகவே" – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்_____.

   அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) இன்பம்

2. 'ஞானச்சுடர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.

   அ) ஞான + சுடர் ஆ) ஞானச் + சுடர் இ) ஞானம் + சுடர் ஈ) ஞானி + சுடர்

3. இன்பு + உருகு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _________.

   அ) இன்பு உருகு ஆ) இன்பும் உருகு இ) இன்புருகு ஈ) இன்பருகு

**பொருத்துக.**

1. அன்பு – நெய்
2. ஆர்வம் – தகளி
3. சிந்தை – விளக்கு
4. ஞானம் – இடுதிரி

**குறுவினா**

1. பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் அகல்விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றனர்?
2. பொய்கை ஆழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டுகிறார்?

**சிறுவினா**

பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.

**சிந்தனை வினா**

பொய்கையாழ்வார் ஞானத்தை விளக்காக உருவகப்படுத்துகிறார். நீங்கள் எவற்றை எல்லாம் விளக்காக உருவகப்படுத்துவீர்கள்?




7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 170 14-03-2019 11:26:24

கவிதைப்பேழை

**இயல் எட்டு**

# அறம் என்னும் கதிர்

TEDW9E




இளமைப்பருவம் எதனையும் எளிதில் கற்றுக்கொள்ளும் பருவமாகும். இப்பருவத்தில் கல்வியை மட்டுமல்லாது நற்பண்புகளையும் கற்றுக்கொள்ள வேண்டும். அது வாழ்வு முழுமைக்கும் பயனளிக்கும். அறநெறிகளை இளமைப்பருவத்தில் கற்றுக்கொள்வதை உழவுத்தொழிலோடு ஒப்பிட்டுக் கூறும் பாடல் ஒன்றனை அறிவோம்.

*இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக*
*வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி*
*அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்*
*பைங்கூழ் சிறுகாலைச் செய்**

*– முனைப்பாடியார்*

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| வித்து | – விதை | களை | – வேண்டாத செடி |
| ஈன | – பெற | பைங்கூழ் | – பசுமையான பயிர் |
| நிலன் | – நிலம் | வன்சொல் | – கடுஞ்சொல் |

## பாடலின் பொருள்

இனிய சொல்லையே விளைநிலமாகக் கொள்ளவேண்டும். அதில் ஈகை என்னும் பண்பை விதையாக விதைக்க வேண்டும். வன்சொல் என்னும் களையை நீக்க வேண்டும். உண்மை பேசுதல் என்னும் எருவினை இடவேண்டும். அன்பாகிய நீரைப் பாய்ச்ச வேண்டும். அப்போதுதான் அறமாகிய கதிரைப் பயனாகப் பெற முடியும். இளம் வயதிலேயே இச்செயல்களைச் செய்ய வேண்டும்.



### நூல் வெளி

முனைப்பாடியார் திருமுனைப்பாடி என்னும் ஊரைச் சேர்ந்த சமணப்புலவர். இவரது காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு.

இவர் இயற்றிய அறநெறிச்சாரம் 225 பாடல்களைக் கொண்டது. அறநெறிகளைத் தொகுத்துக் கூறுவதால் இந்நூல் அறநெறிச்சாரம் எனப் பெயர்பெற்றது. இந்நூலின் பதினைந்தாம் பாடல் நமக்குப் பாடமாகத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

1. பிறருடன் பேசும்போது நீங்கள் பயன்படுத்தும் இன்சொற்களைத் தொகுத்துக் கூறுக.
2. உன் அன்னை பயன்படுத்திய இன்சொல்லால் நீ மகிழ்ந்த நிகழ்வு ஒன்றைக் கூறுக.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காந்தியடிகள் எப்போதும் -----------ப் பேசினார்

   அ) வன்சொற்களை ஆ) அரசியலை இ) கதைகளை ஈ) வாய்மையை

2. 'இன்சொல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.

   அ) இனிய + சொல் ஆ) இன்மை + சொல் இ) இனிமை + சொல் ஈ) இன் + சொல்

3. அறம் + கதிர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.

   அ) அற கதிர் ஆ) அறுகதிர் இ) அறக்கதிர் ஈ) அறம்கதிர்

4. 'இளமை' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் _________.

   அ) முதுமை ஆ) புதுமை இ) தனிமை ஈ) இனிமை

### பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | விளைநிலம் | - | உண்மை |
| 2. | விதை | - | இன்சொல் |
| 3. | களை | - | ஈகை |
| 4. | உரம் | - | வன்சொல் |

### குறுவினா

1. அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?
2. நீக்கவேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது?

### சிறுவினா

இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?

### சிந்தனை வினா

இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் எவை எனக் கருதுகிறீர்கள்?




7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 172 14-03-2019 11:26:25

உரைநடை உலகம்

இயல் எட்டு

# ஒப்புரவு நெறி

TTWRAQ




மனிதர்கள் தனித்து வாழப் பிறந்தவர்கள் அல்லர். சமுதாயமாகக் கூடி வாழ்ந்து ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழப்பிறந்தவர்கள். பிறருக்கு உதவி செய்யும் பொழுது அவர்களுக்குத் தாழ்வு ஏற்படாவண்ணம் உதவுவதே சிறந்த பண்பாகும். அறநெறியில் பொருளீட்டித் தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பதே ஒப்புரவு நெறியாகும். அதனைப் பற்றிய சிந்தனைகளை அறிவோம்.





இந்த மானுடப் பிறவி தற்செயலாகவோ விபத்தின் காரணமாகவோ அமைந்தது அன்று. இஃது ஓர் அரிய வாய்ப்பு. ஒரே ஒரு தடவை மட்டுமே வழங்கப் பெறும் வாய்ப்பு. இந்தப் பிறவியை மதித்துப் போற்றிப் பயன் கொள்ளுதல் கடமை. அதனால் எவ்வளவு நாள் வாழ்ந்தோம் என்பது அல்ல, எப்படி வாழ்ந்தோம் என்பதே கேள்வி. வாழ்ந்த காலம் எந்தமுத்திரையைப் பெற்றது? வாழ்ந்த காலம் ஏதாவது அடையாளங்களைப் பெற்றதா? நம் பெயர் காலந்தோறும் பேசப்படுமா என்றெல்லாம் சிந்திப்பவர்கள் வாழும்நெறி பற்றிக் கவலைப்படுவார்கள்; குறிக்கோளுடன் வாழத்தலைப்படுவார்கள்.

## வாழ்வின் குறிக்கோள்

வாழ்க்கை குறிக்கோள் உடையது. அக்குறிக்கோள் எது? தாம் வாழ்வதா? தாம் வாழ்தல் என்பது சாதனம் ஆதலால், தாம் வாழ்தல் என்பது எளிய ஒன்று. இயற்கையே கூட வாழ்வித்துவிடும். நல்ல சமூக அமைப்பும் அரசும் தோன்றிவிட்டால் தாம் வாழ்தல் என்பது



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 173 14-03-2019 11:26:25

எளிது. வாழ்க்கை, தொண்டினையே குறிக்கோளாக உடையது. இந்தக் குறிக்கோளுடன்தான் ஒப்புரவு நெறியைத் திருக்குறள் அறிமுகப்படுத்துகிறது. திருக்குறள் நெறியில் மக்கள் ஒருவருக்கொருவர் கடமைகளைச் செய்வதற்கு உரியவர்கள். உரிமைகளைப் பெறுவதற்கும் உரியவர்கள். ஒருவர் எல்லாருக்காகவும், எல்லாரும் ஒருவருக்காகவும் என்னும் பொதுவுடைமை நெறியே திருவள்ளுவரின் வாழும் நெறி.

### வாழ்வும் ஒப்புரவும்

ஒருவர் செய்யும் செயலானது அது தரும் பயனைவிட, செய்பவரின் மனப்பாங்கு, உணர்வு ஆகியவற்றின் அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகிறது. தரத்தைக் காட்டுகிறது. ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல் மட்டும் போதாது. உதவி செய்தல் எதற்காக? தற்காப்புக்காகவும் இலாபத்திற்காகவும்கூட உதவி செய்யலாமே! சொல்லப்போனால் இத்தகைய உதவிகள் ஒருவகையில் வாணிகம் போலத்தான். அதே உதவியைக் கட்டுப்பாட்டு உணர்வுடன், உதவி பெறுபவரை உறவுப்பாங்கில் எண்ணி, உரிமை உடையவராக நினைந்து, உதவிசெய்வதற்குப் பதில் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல் ஒப்புரவு ஆகும்.

### ஒப்புரவின் இயல்பு

ஒப்புரவில் பெறுபவர் அந்நியர் அல்லர்; உறவினர். கடமையும் உரிமையும் உடையவர். ஒப்புரவுநெறி சார்ந்த வாழ்க்கையில் வள்ளல்கள் இல்லை. வாங்குபவரும் இல்லை. ஒப்புரவுநெறி சார்ந்த வாழ்க்கையில் உடைமைச்சார்பு இறுக்கமான தனியுடைமையாக இல்லாமல் அறநெறி சார்ந்த குறிக்கோளுடைய உடைமையாக அமையும். ஒப்புரவில் ஈதல்– ஏற்றல் என்பதன் வழியாக அமையும் புரவலர்– இரவலர் உறவு இல்லை. ஒப்புரவுநெறி சார்ந்த வாழ்க்கை உரிமையும் கடமையும் உடைய வாழ்வு முறையாக அமைவதால் கடமைகள் உரிமைகளை வழங்குகின்றன.

### பொருள்ஈட்டலும் ஒப்புரவும்

பொருள் ஈட்டலிலும் அந்தப் பொருளை நுகர்தலிலும் அறிவியல் பாங்கு தேவை. அயலவர் உண்ணாது இருக்கும்போது நாம் மட்டும் உண்பது நெறியும் அன்று; முறையும் அன்று. அதுமட்டுமல்ல, பாதுகாப்பும் அன்று. அயலவன் விழித்து எழுந்தால் நமது நிலை பாதிக்கும். ஆதலால் வாழ்வு அறநிலையைப் பாதுகாவல் வாழ்வாக அமைய வேண்டும். இம்முறையை அப்பரடிகள் எடுத்துக் கூறினார். அண்ணல் காந்தியடிகள் வழிமொழிந்தார். பாவேந்தர் பாரதிதாசனும் உலகம் உண்ண உண். உடுத்த உடுப்பாய் என்றார். செல்வத்துப் பயன் ஒப்புரவு வாழ்க்கை.

பொருளீட்டல் தான்மட்டும் வாழ்வதற்காக என்பது அறிவியல் கருத்து அன்று. பொருளீட்டும் வாழ்க்கையேகூடச் சமூக வாழ்க்கைதான். மற்றவர்களுக்கு வழங்கி, மகிழ்வித்து மகிழ, வாழ்வித்து வாழப் பொருள் தேவை என்பதே பொருளீட்டலுக்கு உரிய கரு. இரப்பார்க்கு இல்லென்று இயைவது கரத்தல் அறிவியல் அன்று; அறமும் அன்று. செய்வது செய்து பொருள் ஈட்டி இரப்பார் துன்பத்தை மாற்றுவதே சமூகத்தின் பொது நிலை. பொருள் ஈட்டல், சேர்த்தல், பாதுகாத்தல் மனித வாழ்க்கையில் நடைபெறும் ஒரு பணி – இல்லை – ஒரு போராட்டம். பொருள் தேடுவது ஒரு பெரிய காரியம். அதைவிடப் பெரிய காரியம் அதை முறையாக அனுபவிப்பதும் கொடுத்து மகிழ்வதும் ஆகும்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 174 14-03-2019 11:26:25

வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை மருந்து என்றும் கூறுவது தமிழ் மரபு. பொருள் தேடல் வாழ்க்கையின் லட்சியம் அன்று. பொருள் வாழ்க்கையின் கருவியே. நல்ல அறிவும் பண்பும் உடையவர்களுக்குப் பணம் பணியாள். ஆனால், இவை இல்லாதவர்க்கோ மோசமான எசமானன். வாழ்க்கையை உணர்ந்து கொள்ளச் செல்வம் மட்டுமன்றி வறுமையும்கூடத் துணை செய்யும். பொருளும் தேவை; அதைத் துய்க்கத் திறனும் தேவை. பொருளை மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்ச்சி பெறலாம். செல்வத்தைத் தனியே அனுபவித்தல் இழத்தலுக்குச் சமம்.

செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே

என்கிறது புறநானூறு.

### ஒப்புரவின் பயன்

ஊருணி, தேவைப்படுவோர் அனைவரும் தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு உரிமை உடையது. அதைத் தடுப்பார் யாருமில்லை. ஊருணித்தண்ணீர் எடுத்து அனுபவிக்கப்படுவது. பழுத்த பயன்மரத்தின் கனிகளை அனைவரும் எடுத்து அனுபவிக்கலாம். பயன்மரம் பழங்களைத் தருவது உரிமை எல்லைகளைக் கவனத்தில் கொண்டல்ல. மருந்துமரம் உதவி செய்தலில் தன்னை மறந்த நிலையிலான பயன்பாட்டு நிலை ஒன்றே காணப்பெறுகிறது. நோயுடையார் எல்லாரும் பயன்படுத்தலாம். ஒப்புரவை விளக்கப் பயன்படுத்தியுள்ள இந்த உவமைகள் இன்றும் பயன்படுத்தத் தக்கவையாகவே அமைந்துள்ளன. ஆயினும் ஊருணி, பயன்மரம், மருந்துமரம் ஆகியன மனிதர்கள் தம் படைப்பாற்றலைக் கொண்டு படைத்தவை என்பதை நினைவில் கொள்க!

### ஒப்புரவும் கடமையும்

ஊருணியை அகழ்ந்தவன் மனிதன். அந்த ஊருணியில் தண்ணீரைக் கொணர்ந்து தேக்கியது யார்? மனிதர்தாம். ஊருணியை அமைத்துத் தண்ணீரைத் தேக்கும் கடமை பொறுப்புணர்வுடன் -கூட்டுப் பொறுப்புடன் செய்யப் பெற்றால்தான் ஊருணியில் தண்ணீர் நிறையும். பலரும் எடுத்துக் குடிக்கலாம். பயன்தரும் மரங்களை வளர்த்தால்தான் கனிகள் கிடைக்கும். தின்று அனுபவிக்கலாம்.

இங்கும் மனிதனின் படைப்பைத் தொடர்ந்துதான் நுகர்வு வருகிறது. ஒப்புரவு வருகிறது. அதேபோல மருந்துமரங்களையும் நட்டு வளர்த்தால்தான் பயன்படுத்த முடியும். ஆதலால் ஒப்புரவாண்மையுடன் வாழ முதலில் தேவைப்படுவது உழைப்பு. கூட்டு உழைப்பு. பொருள்களைப் படைக்கும் கடமைகள் நிகழாத வரையில் ஒப்புரவு வாழ்வு மலராது. கடமைகள் இயற்றப் பெறாமல் ஒப்புரவு தோன்றாது. ஒரோவழி தோன்றினாலும் நிலைத்து

#### தெரிந்து தெளிவோம்

ஊருணி நீர்நிறைந்து அற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. (குறள். 215)

உலகினர் விரும்புமாறு உதவி செய்து வாழ்பவரது செல்வமானது ஊருணியில் நிரம்பிய நீர்போலப் பலருக்கும் பயன்படும்.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்துஅற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின். (குறள். 216)

நற்பண்பு உடையவரிடம் செல்வம் சேர்வது ஊருக்குள் பழமரத்தில் பழங்கள் பழுத்திருப்பதைப் போன்றது.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 175 14-03-2019 11:26:25

நில்லாது. கடமைகளில், பொருள் செய்தலில் ஒவ்வொருவரும் கூட்டு உழைப்பில் ஈடுபட்டால்தான் ஒப்புரவுநெறி தோன்றும்; வளரும்; நிலைத்து நிற்கும்.

### நிறைவாக

நாம் இன்று வாழ்வது உண்மை. நமக்கு வாய்த்திருக்கும் வாய்ப்புகளும் அருமையானவை. ஏன் காலம் கடத்த வேண்டும்? இன்று நன்று, நாளை நன்று என்று எண்ணிக் காலத்தைப் பாழடிப்பானேன்? இன்றே வாழத் தொடங்குவோம். வாழத் தொடங்கியதன் முதற்படியாகக் குறிக்கோளைத் தெளிவாகச் சிந்தித்து முடிவு செய்வோம். இந்தப் புவியை நடத்தும் பொறுப்பை ஏற்போம். பொதுமையில் இந்தப் புவியை நடத்துவோம். பொதுவில் நடத்துவோம். உலகம் உண்ண உண்போம். உலகம் உடுத்த உடுத்துவோம். எங்கு உலகம் தங்கியிருக்கிறதோ அங்கேயே நாமும் தங்குவோம். மண்ணகத்தில் விண்ணகம் காண்போம்.

### நூல் வெளி



மக்கள் பணியையே இறைப் பணியாக எண்ணித்தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். குன்றக்குடி திருமடத்தின் தலைவராக விளங்கிய இவர் தமது பேச்சாலும் எழுத்தாலும் இறைத்தொண்டும் சமூகத் தொண்டும் இலக்கியத் தொண்டும் ஆற்றியவர். திருக்குறள் நெறியைப் பரப்புவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டவர். நாயன்மார் அடிச்சுவட்டில், குறட்செல்வம், ஆலயங்கள் சமுதாய மையங்கள் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். அருளோசை, அறிக அறிவியல் உள்ளிட்ட சில இதழ்களையும் நடத்தியுள்ளார்.

ஒப்புரவு நெறி என்னும் தலைப்பில் அடிகளார் கூறியுள்ள கருத்துகள் நம் பாடப் பகுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்

பிறருக்காக உழைத்துப் புகழ்பெற்ற சான்றோர்கள் பற்றிய செய்திகளைத் திரட்டி வந்து வகுப்பறையில் பகிர்க.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஒருவர் எல்லாருக்காகவும் எல்லாரும் ஒருவருக்காக என்பது ________ நெறி.

அ) தனியுடைமை	ஆ) பொதுவுடைமை

இ) பொருளுடைமை	ஈ) ஒழுக்கமுடைமை

2. செல்வத்தின் பயன் ________ வாழ்வு.

அ) ஆடம்பர ஆ) நீண்ட இ) ஒப்புரவு ஈ) நோயற்ற

3. வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை ________ என்றும் கூறுவர்.

அ) மருந்து ஆ) மருத்துவர்

இ) மருத்துவமனை ஈ) மாத்திரை

4. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்று கூறியவர் ________.

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) முடியரசன் ஈ) கண்ணதாசன்

## எதிர்ச்சொற்களைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. எளிது | - | புரவலர் |
| 2. ஈதல் | - | அரிது |
| 3. அந்நியர் | - | ஏற்றல் |
| 4. இரவலர் | - | உறவினர் |

## தொடர்களில் அமைத்து எழுதுக.

குறிக்கோள் ________________________________________

கடமைகள் ________________________________________

வாழ்நாள் ________________________________________

சிந்தித்து ________________________________________

## குறுவினா

1. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?
2. பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?

## சிறுவினா

1. ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் யாது?
2. ஊருணியையும் மரத்தையும் எடுத்துக்காட்டிக் குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?

## சிந்தனை வினா

ஒப்புரவுக்கும் உதவிசெய்தலுக்கும் வேறுபாடு யாது?



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 177 14-03-2019 11:26:25

விரிவானம்

இயல் எட்டு

# உண்மை ஒளி

U3FA86

நுழையும்முன்


உலக மக்கள் அனைவரையும் உடன்பிறந்தவராகக் கருதுவதே உயர்ந்த மனிதப்பண்பு ஆகும். அப்பண்பைப் பெறுவதே சிறந்த அறிவாகும். அத்தகைய அறிவுடைய சான்றோர்கள் துன்பப்படும் மக்களுக்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்வார்கள். அவ்வாறு உதவும்போது தமக்கு இழப்பு ஏற்படினும் அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். இக்கருத்துகளை விளக்கும் ஜென் கதை ஒன்றைப் படக்கதையாகக் காண்போம்!

ஜென் குரு ஒருவர் மாணவர்களுக்குப் பாடம் கற்பித்துக் கொண்டிருக்கிறார்.






7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 178
14-03-2019 11:26:26






7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 179 14-03-2019 11:26:26


இல்லை. வேறு யாருக்காவது தெரியுமா?
எங்களுக்குத் தெரியவில்லை ஐயா. தாங்களே கூறி விடுங்கள்.
ஒரு மனிதரைக் காணும்போது இவர் என் உடன்பிறந்தவர் என்று எப்போது நீங்கள் உணர்கிறீர்களோ, அப்போதுதான் உண்மையான ஒளி உங்களுக்குள் ஏற்படுகிறது என்பது பொருள்.
இரவும் பகலும் வெறும் காலவேறுபாடுகள்தான். உண்மையான ஒளி உள்ளத்தின் உள்ளே ஏற்பட வேண்டியது என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம் ஐயா.
உள்ளுக்குள் ஒளி இல்லையென்றால் உச்சி வெயில்கூடக் காரிருளே என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். மீண்டும் நாளை சந்திப்போம்.
வகுப்பு முடிந்து மாணவர்கள் கலைந்து செல்கின்றனர்.
குரு அருகில் உள்ள சிற்றூருக்குப் புறப்படுகிறார்.
இருட்டுவதற்குள் ஊரை அடைய வேண்டும்.
வழியில்...
ஆ! யாரது சாலையோரம் படுத்துக்கிடப்பது!



குதிரையை நிறுத்தி, கீழே இறங்கிய குரு அந்த மனிதனை எழுப்புகிறார்.
குழந்தாய்! எழுந்திரு. நீ யார்? ஏன் இங்கே படுத்திருக்கிறாய்?
இவன் மயக்கம் அடைந்திருக்கிறான்.
படுத்திருப்பவருக்கு நீரைப் பருகத் தருகிறார்.
குழந்தாய்! எழுந்திரு. இந்த நீரைக் கொஞ்சம் குடி.
மயக்கமடைந்தவர் எழுந்து உட்காருகிறார்.
பசியால் மயங்கி விழுந்து விட்டேன் ஐயா. நான் பக்கத்து ஊருக்குச் செல்ல வேண்டும்.
அப்படியா! சரி என்னிடம் குதிரையிருக்கிறது. நான் உன்னை அழைத்துச் செல்கிறேன்.
குரு, அவனைத் தன் குதிரையின்மீது உட்காரவைக்கிறார்.
மெதுவாக ஏறுப்பா! பார்த்து உட்கார்.
குதிரையில் ஏறிய அவன் குதிரையை அடித்து விரட்டத் தொடங்குகிறான்.
ஆ! என்ன இது? ஓ! இவன் திருடன் போல இருக்கிறது. என் குதிரையைத் திருடவே இப்படி நடித்திருக்கிறான்.






7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 182
14-03-2019 11:26:28




### நூல் வெளி

ஜென் என்னும் ஜப்பானிய மொழிச் சொல்லுக்கு தியானம் செய் என்பது பொருள். புத்த மதத்தைச் சார்ந்த துறவியரில் ஒரு பிரிவினரே ஜென் சிந்தனையாளர்கள். இவர்கள் பெரும்பாலும் சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தமது சிந்தனைகளைச் சிறு நிகழ்ச்சிகள், எளிய கதைகள் ஆகியவற்றின் மூலம் விளக்கினர்.

ஜென் கதைகளுள் ஒன்று இங்குப் படக்கதையாகத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

1. ஜென் கதைகளில் வேறு சிலவற்றை அறிந்து வந்து வகுப்பறையில் பகிர்க.
2. 'உண்மை ஒளி' படக்கதையை வகுப்பறையில் நாடகமாக நடித்துக் காட்டுக.

## மதிப்பீடு

'உண்மை ஒளி' படக்கதையைக் கதையாகச் சுருக்கி எழுதுக.

கற்கண்டு

இயல் எட்டு

# அணி இலக்கணம்

UNPKBQ

## உருவக அணி

ஒரு பொருளை விளக்க மற்றொரு பொருளை உவமையாகக் கூறுவது உவமை அணி என முன்னர்க் கற்றோம். உவமை வேறு உவமிக்கப்படும் பொருள் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும். இதில் உவமிக்கப்படும் பொருள் முன்னும் உவமை பின்னுமாக அமையும்.

'தேன் போன்ற தமிழ்' என்று கூறுவது உவமை ஆகும். தமிழாகிய தேன் என்னும் பொருளில் 'தமிழ்த்தேன்' என்று கூறுவது உருவகம் ஆகும். வெள்ளம் போன்ற இன்பத்தை 'இன்ப வெள்ளம்' என்று கூறுவதும் கடல் போன்ற துன்பத்தைத் 'துன்பக்கடல்' என்று கூறுவதும் உருவகம் ஆகும்.

*வையம் தகளியா வார்கடலே நெய்யாக*
*வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய*
*சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை*
*இடர்ஆழி நீங்குகவே என்று*

இப்பாடலில் பூமி அகல்விளக்காகவும், கடல் நெய்யாகவும், கதிரவன் சுடராகவும் உருவகப்படுத்தப்பட்டு உள்ளன. எனவே, இப்பாடல் உருவக அணி அமைந்ததாகும்.

## ஏகதேச உருவக அணி

அறிவு என்னும் விளக்கைக் கொண்டு அறியாமையை நீக்க வேண்டும்.

இத்தொடரில் அறிவு விளக்காக உருவகப்படுத்தப்பட்டு உள்ளது. அறியாமை இருளாக உருவகப்படுத்தப்படவில்லை. இவ்வாறு கூறப்படும் இரு பொருள்களில் ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும். (ஏகதேசம் – ஒரு பகுதி)

*பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்.* (திருக்குறள்)

## விளக்கம்

வள்ளுவர் மக்களின் செயல்களைப் பொன்னின் தரத்தை அறிய உதவும் உரைகல்லாக உருவகம் செய்துவிட்டு, மக்களது உயர்வையும் தாழ்வையும் பொன்னாக உருவகம் செய்யவில்லை. எனவே இக்குறளில் இடம்பெற்றிருப்பது ஏகதேச உருவக அணியாகும்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 184 14-03-2019 11:26:29

## கற்பவை கற்றபின்

உவமைத் தொடர்களை எழுதி அவற்றை உருவகங்களாக மாற்றுக.

(எ.கா.) மலர் போன்ற முகம் – முகமலர்

## மதிப்பீடு

குறுவினா

1. உருவக அணியை விளக்குக.
2. உருவக அணிக்கும் ஏகதேச உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?

### மொழியை ஆள்வோம்!

V48FD2

**கேட்க.**

நீதிக்கதைகளைக் கேட்டு மகிழ்க.

**பேசுக.**

நீதிக்கதை ஒன்றை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.

**சொல்லக் கேட்டு எழுதுக.**

1. பொய்கையாழ்வார் திருவெஃகா என்னும் ஊரில் பிறந்தார்.
2. இனிய சொல்லையே விளைநிலமாகக் கொள்ளவேண்டும்.
3. வாழ்க்கை குறிக்கோள் உடையது.
4. செல்வத்துப் பயன் ஒப்புரவு வாழ்க்கை.
5. உவமையும் உவமேயமும் ஒன்றாக அமைவது உருவக அணி.

**அறிந்து பயன்படுத்துவோம்.**

ஏதேனும் ஒன்றை அறிந்துகொள்வதற்காக வினவப்படுவது வினாவாகும். வினா கேட்கப் பயன்படுத்தும் சொற்கள் வினாச்சொற்கள் எனப்படும்.

'எது, என்ன, எங்கு, எப்படி, எத்தனை, எப்பொழுது, எவற்றை, எதற்கு, ஏன், யார், யாது, யாவை' போன்றன வினாச்சொற்கள் ஆகும்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 185 14-03-2019 11:26:29

### சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.

1. நெல்லையப்பர் கோவில் ___________ உள்ளது ?
2. முதல் ஆழ்வார்கள் ___________ பேர் ?
3. ___________ சொற்களைப் பேச வேண்டும் ?
4. அறநெறிச்சாரம் பாடலை எழுதியவர் ___________?
5. அறநெறிச்சாரம் என்பதன் பொருள் ___________?

### பின்வரும் தொடரைப் படித்து வினாக்கள் எழுதுக.

பூங்கொடி தன் தோழியுடன் திங்கட்கிழமை காலையில் பேருந்தில் ஏறிப் பள்ளிக்குச் சென்றாள்.

(எ.கா.) பூங்கொடி பள்ளிக்கு எப்படிச் சென்றாள்?

1. ____________________________________
2. ____________________________________
3. ____________________________________

### தலைப்புச் செய்திகளை முழு சொற்றொடர்களாக எழுதுக.

(எ.கா.) தலைப்புச் செய்தி: தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடக்கம் – வானிலை மையம் அறிவிப்பு.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கி உள்ளது என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

1. சாலையில் கிடந்த பணத்தை உரியவரிடம் ஒப்படைத்த மாணவன் - மாவட்ட ஆட்சியர் பாராட்டு
2. தமுக்கம் மைதானத்தில் புத்தகக் கண்காட்சி தொடக்கம் - மக்கள் ஆர்வத்துடன் வருகை
3. தேசிய அளவிலான கைப்பந்துப் போட்டி – தமிழக அணி வெற்றி
4. மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி – ஏழாம் வகுப்பு மாணவி முதலிடம்
5. மாநில அளவிலான பேச்சுப்போட்டி– சென்னையில் இன்று தொடக்கம்

### கட்டுரை எழுதுக.

ஒற்றுமையே உயர்வு



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 186 14-03-2019 11:26:29

## மொழியோடு விளையாடு

**கீழ்க்காணும் படங்கள் சார்ந்த சொற்களை எழுதுக.**



(எ.கா.) கரும்பலகை, வகுப்பறை, _______________

________________________________________

________________________________________



(எ.கா.) மரம், நடைபாதை, _____________________

________________________________________

________________________________________

**கீழ்க்காணும் சொற்களைப் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் பயன்படுத்தித் தொடர்கள் உருவாக்குக.** **(விதை, கட்டு, படி, நிலவு, நாடு, ஆடு)**

(எ.கா.) விதை → விதைநெல் வாங்கினான்.
→ சோளம் விதைத்தான்.

## நிற்க அதற்குத் தக...

**என் பொறுப்புகள்...**

1. எந்தச் சூழ்நிலையிலும் இனிய சொற்களையே பேசுவேன்.
2. அனைவரிடமும் மரியாதையுடன் நடந்து கொள்வேன்.
3. என் வாழ்வில் எளிமையைக் கடைப்பிடிப்பேன்.
4. திருக்குறள் கூறும் ஒப்புரவு நெறியைப் பின்பற்றி நடப்பேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

| | | |
|---|---|---|
| குறிக்கோள் - Objective | பொதுவுடைமை - Communism | வறுமை - Poverty |
| செல்வம் - Wealth | கடமை - Responsiblity | ஒப்புரவுநெறி - Reciprocity |
| லட்சியம் - Ambition | அயலவர் - Neighbour | நற்பண்பு - Courtesy |

## இணையத்தில் காண்க

அறக்கருத்துகளைக் கூறும் நூல்களின் பெயர்களை இணையத்தில் தேடித் தொகுக்க.

வாழ்வியல்

இயல் எட்டு

# திருக்குறள்

VCQYAH

## வினைசெயல் வகை

1. *பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்.*

பொருள் : வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தகுந்த காலம், மேற்கொள்ளும் செயலின் தன்மை , உரிய இடம் ஆகிய ஐந்தையும் ஐயம்தீர ஆராய்ந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும்.

2. *வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்*
*யானையால் யானையாத் தற்று.**

பொருள் : ஒரு யானையைக்கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பர். அது போல ஒரு செயலைச் செய்யும்போதே அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொள்ளல் வேண்டும்.

அணி : உவமை அணி

## அவை அஞ்சாமை

3. *கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்*
*கற்ற செலச்சொல்லு வார்.*

பொருள் : தாம் கற்றவற்றைக் கற்றவர்முன் தெளிவாகச் சொல்ல வல்லவர், கற்றவருள் மிகவும் கற்றவராக மதிக்கப்படுவார்.

4. *கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற*
*மிக்காருள் மிக்க கொளல்.*

பொருள் : கற்றவர் முன் தான் கற்றவற்றை மனத்தில் பதியும்படி சொல்லி, அவர்கள் கற்றவற்றையும் கேட்டு, அறிந்து கொள்ள வேண்டும்.

## நாடு

5. *உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேராது இயல்வது நாடு.**

பொருள்: மிக்க பசியும், ஓயாத நோயும், அழிவு செய்யும் பகையும் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடாகும்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 188 14-03-2019 11:26:30

6. *நாடென்ப நாடா வளத்தன நாடல்ல*

*நாட வளம்தரு நாடு.*

பொருள் : பெரிய அளவில் முயற்சி இல்லாமல் வளம்தரும் நாடே சிறந்த நாடாகும். முயற்சி செய்து சேரும் வளத்தை உடைய நாடு சிறந்த நாடு ஆகாது.

### அரண்

7. *மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்*

*காடும் உடையது அரண்.*

பொருள் : தெளிந்த நீரும், நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய நான்கும் உள்ளதே அரண் ஆகும்.

8. *எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி*

*இல்லார்கண் இல்லது அரண்.*

பொருள் : அரண் எவ்வளவு பெருமையுடையதாக இருந்தாலும், செயல் சிறப்பு இல்லாதவரிடத்தில் அது பயனில்லாதது ஆகும்.

### பெருமை

9. *பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா*

*செய்தொழில் வேற்றுமை யான்.**

பொருள் : பிறப்பால் மக்கள் அனைவரும் ஒத்த இயல்புடையவர்களே. அவர்கள் செய்யும் நன்மை, தீமையாகியச் செயல்களால் அவர்களது சிறப்பியல்புகள் ஒத்திருப்பதில்லை.

10. *பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்*

*அருமை உடைய செயல்.*

பொருள் : உயர்ந்த பண்புகளை உடையவர் செய்வதற்கு அரிய செயல்களை உரிய நெறிமுறையில் செய்து முடிப்பர்.



## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ___________ ஒரு நாட்டின் அரணன்று.

அ) காடு ஆ) வயல் இ) மலை ஈ) தெளிந்த நீர்

2. மக்கள் அனைவரும் ___________ ஒத்த இயல்புடையவர்கள்.

அ) பிறப்பால் ஆ) நிறத்தால் இ) குணத்தால் ஈ) பணத்தால்

3. 'நாடென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_________.

அ) நான் + என்ப   ஆ) நா + டென்ப   இ) நாடு + என்ப   ஈ) நாடு + டென்ப

4. கண் + இல்லது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _________.

அ) கணிஇல்லது   ஆ) கணில்லது   இ) கண்ணில்லாது   ஈ) கண்ணில்லது

பின்வரும் குறட்பாக்களில் உவமையணி பயின்றுவரும் குறளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. *பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
   *செய்தொழில் வேற்றுமை யான்.*

2. *வினையான் வினையாக்கிக் கோடல் தனைகவுள்*
   *யானையால் யானையாத் தற்று.*

3. *கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற*
   *மிக்காருள் மிக்க கொளல்.*

குறுவினா

1. ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?
2. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?
3. சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?

படங்களுக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.









____________ ____________ ____________ ____________

____________ ____________ ____________







____________ ____________ ____________ ____________

____________ ____________ ____________

இயல்
ஒன்பது

# மானுடம் வெல்லும்



## கற்றல் நோக்கங்கள்

- பாடலின் பொருள் அறிய அகராதியைப் பயன்படுத்தும் திறன் பெறுதல்
- ஆளுமைகள் பற்றிய விவரங்களைத் தொகுத்து வகைப்படுத்திப் பேசும் திறன் பெறுதல்
- இணக்கமான உறவைப் பேணுதல், உணர்வுகளைக் கையாளுதல், தன்னம்பிக்கையுடன் சூழல்களை எதிர்கொள்ளுதல் போன்ற வாழ்க்கைத் திறன்களைப் பெறுதல்
- சொற்களின் தன்மையினை மொழியில் அடையாளம் கண்டு பயன்படுத்துதல்




7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 191 14-03-2019 11:26:30

கவிதைப்பேழை

இயல் ஒன்பது

# மலைப்பொழிவு

VS9TBT




உலக மக்கள் சாதி, மதம், மொழி முதலியவற்றால் பிரிந்துள்ளனர். இப்பிரிவினைகள் காரணமாக மக்களிடையே முரண்பாடுகளும் மோதல்களும் ஏற்படுகின்றன. எல்லாரிடமும் அன்பு காட்டி அமைதியையே வாழ்வியல் நெறியாகக் கொண்டு வாழ்ந்தால் உலகம் உயர்வடையும். இவ்வுண்மைகளை இயேசு காவியம் வழி அறிவோம்.

*சாந்தம் உடையோர் பேறுபெற்றோர் எனத்*
*தத்துவமும் சொன்னார் – இந்தத்*
*தாரணி முழுவதும் அவர்களுக்கு உரியது*
*தலைவர்கள் அவர்என்றார்!*

*மாந்தரின் வாழ்வில் தேவைப் படுவது*
*சாந்தம் தான்என்றார் – அது*
*மண்ணையும் ஆளும் விண்ணையும் ஆளும்*
*மகத்துவம் பார்என்றார்!*

*சாதிகளாலும் பேதங்களாலும்*
*தள்ளாடும் உலகம் – அது*
*தர்மம் ஒன்றை நம்பிய பிறகே*
*அடங்கிவிடும் கலகம்!*

*ஓதும் பொருளாதாரம் தனிலும்*
*உன்னத அறம்வேண்டும் – புவி*
*உயர்வும் தாழ்வும் இல்லா தான*
*வாழ்வினைப் பெறவேண்டும்.*

*இரக்கம் உடையோர் பேறுபெற்றோர் என*
*இயேசுபிரான் சொன்னார் – அவர்*
*இரக்கம் காட்டி இரக்கத்தைப் பெறுவர்*
*இதுதான் பரிசுஎன்றார்*

**வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்*
*வாழ்க்கை பாலைவனம் – அவர்*
*தூய மனத்தில் வாழ நினைத்தால்*
*எல்லாம் சோலைவனம்!*

*தமையும் வாட்டிப் பிறரையும் வாட்டும்*
*சண்டை சச்சரவு – தினம்*
*தன்னாடு என்றும் பிறர்நாடு என்றும்*
*பேசும் பொய்யுறவு!*

*இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி*
*எத்தனை வீண்கனவு – தினம்*
*இவை இல்லாது அமைதிகள் செய்தால்*
*இதயம் மலையளவு !**

*– கண்ணதாசன்*

**சொல்லும் பொருளும்**

| | | | |
|---|---|---|---|
| சாந்தம் | – அமைதி | தாரணி | – உலகம் |
| மகத்துவம் | – சிறப்பு | தத்துவம் | – உண்மை |
| பேதங்கள் | – வேறுபாடுகள் | இரக்கம் | – கருணை |



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 192 14-03-2019 11:26:31

## பாடலின் பொருள்

(தம் சீடர்களுக்கு அறிவுரை கூற எண்ணிய இயேசுநாதர் ஒரு குன்றின் மீது ஏறி நின்று பேசத் தொடங்கினார்.)

சாந்தம் என்னும் அமைதியான பண்பு கொண்டவர்கள் பேறு பெற்றவர்கள். இந்த உலகம் முழுவதும் அவர்களுக்கே உரியது. அவர்களே தலைவர்கள் ஆவர் என்ற உண்மையை இயேசுநாதர் கூறினார். மனித வாழ்க்கையில் தேவைப்படுவது பொறுமை. அது மண்ணையும் விண்ணையும் ஆட்சி செய்யும் பெருமையுடையது என்றார்.

இவ்வுலகம் சாதிகளாலும் கருத்து வேறுபாடுகளாலும் நிலைதடுமாறுகிறது. அறம் என்கிற ஒன்றனை நம்பியபிறகு சண்டைகள் நீங்கி உலகம் அமைதியாகி விடும். பொருள் ஈட்டுவதிலும் அறவழியைப் பின்பற்ற வேண்டும். இவ்வுலகம் ஏற்றத்தாழ்வு இல்லா வாழ்வைப் பெற வேண்டும்.

இரக்கம் உடையோரே பேறுபெற்றவர் ஆவர். அவர்கள் பிற உயிர்களின் மீது இரக்கம் காட்டி இறைவனின் இரக்கத்தைப் பெறுவர். இதுதான் அவர்களுக்கான பரிசு. மனிதன் ஆசையில் விழுந்துவிட்டால் அவனது வாழ்வு பாலைவனம்போல் பயனற்றதாகிவிடும். அவன் நல்ல உள்ளத்தோடு வாழ்ந்தால் அவன் வாழ்க்கை மலர்ச்சோலையாக மாறிவிடும்.

மனிதர்கள் சண்டை சச்சரவுகளால் தாமும் துன்புற்றுப் பிறரையும் துன்புறுத்துகின்றனர். மேலும் அவர்கள் தன்னாடு என்றும், பிறர்நாடு என்றும் பேசி உண்மையில்லா உறவுகளாக வாழ்கின்றனர்.

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் நடக்கும் ஆயிரம் போட்டிகளால் பயனற்ற கனவுகள்தாம் தோன்றுகின்றன. இவை இல்லாமல் அமைதியாக வாழ்ந்தால் இதயம் மலையளவு உயர்ந்ததாக மாறும்.

### நூல் வெளி



கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா. இவர் கவியரசு என்னும் சிறப்புப் பெயராலும் அழைக்கப்படுகிறார். காவியங்கள், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், புதினங்கள் போன்ற இலக்கிய வடிவங்களில் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். ஏராளமான திரைப்படப் பாடல்களையும் எழுதியுள்ளார். இவர் தமிழக அரசவைக் கவிஞராகவும் இருந்துள்ளார்.

இயேசுவின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது அறிவுரைகளையும் கூறும் நூல் இயேசுகாவியம் ஆகும். இந்நூலில் உள்ள மலைப்பொழிவு என்னும் பகுதியிலிருந்து சில பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்

இயேசுவின் வாழ்வில் நடந்த சுவையான நிகழ்வு ஒன்றினை அறிந்துவந்து வகுப்பறையில் பகிர்க.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 193 14-03-2019 11:26:31



# மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மனித வாழ்க்கையில் தேவைப்படுவது _________.

   அ) பணம் ஆ) பொறுமை இ) புகழ் ஈ) வீடு

2. சாந்த குணம் உடையவர்கள் _____________ முழுவதையும் பெறுவர்.

   அ) புத்தகம் ஆ) செல்வம் இ) உலகம் ஈ) துன்பம்

3. 'மலையளவு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

   அ) மலை + யளவு ஆ) மலை + அளவு

   இ) மலையின் + அளவு ஈ) மலையில் + அளவு

4. 'தன்னாடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

   அ) தன் + னாடு ஆ) தன்மை + னாடு

   இ) தன் + நாடு ஈ) தன்மை + நாடு

5. இவை + இல்லாது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.

   அ) இவையில்லாது ஆ) இவைஇல்லாது இ) இவயில்லாது ஈ) இவஇல்லாது

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. சாந்தம் | – | சிறப்பு |
| 2. மகத்துவம் | – | உலகம் |
| 3. தாரணி | – | கருணை |
| 4. இரக்கம் | – | அமைதி |

**குறுவினா**

1. இந்த உலகம் யாருக்கு உரியது?
2. உலகம் நிலைதடுமாறக் காரணம் என்ன?
3. வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற என்ன செய்ய வேண்டும்?

**சிறுவினா**

சாந்தம் பற்றி இயேசுகாவியம் கூறுவன யாவை?

**சிந்தனை வினா**

எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ என்ன செய்ய வேண்டும்?



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 194 14-03-2019 11:26:31

கவிதைப்பேழை

இயல் ஒன்பது

# தன்னை அறிதல்

WDJ4FD

நுழையும்முன்

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் தனித்தன்மையும் தனித்திறமையும் இருக்கும். அதை அறியாத வரையில் எதிர்காலம் அச்சமூட்டும். நாம் யார், நம் ஆற்றல் என்ன என்பதை உணர்ந்துகொண்டால் வாழ்க்கை எளிதாகிவிடும். இக்கருத்தினை விளக்கும் கவிதை ஒன்றினை அறிவோம்.

அன்றைக்குத்தான் அம்மா காக்காவிற்கு
அது குயில் குஞ்சு என்று தெரிந்தது
தெரிந்த பிறகு
இனிமேல் நாம் சேர்ந்து வாழ முடியாது.
போய்விடு என்றது

பாவம் குயில் குஞ்சு!
அது எங்குப் போகும்?
அதுக்கு என்ன தெரியும்?
அது எப்படி வாழும்?

குயில் குஞ்சும்
எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தது
அம்மா காக்கா கேட்கவில்லை
கிளம்பிப் போகச் சொல்லிவிட்டது

குயில் குஞ்சால் அம்மா காக்கையைப்
பிரியமுடியவில்லை
அதுவும் அந்த மரத்திலேயே
வாழ ஆரம்பித்தது

அம்மா காக்கையைப் போல "கா" என்று
அழைக்க முயற்சி செய்தது
ஆனால் அதற்குச் சரியாக வரவில்லை

அதற்குக் கூடு கட்டத் தெரியாது
பாவம் சிறிய பறவைதானே!
கூடு கட்ட அதற்கு யாரும்
சொல்லித் தரவும் இல்லை
அம்மா அப்பா இல்லை
தோழர்களும் இல்லை



குளிரில் நடுங்கியது
மழையில் ஒடுங்கியது
வெயிலில் காய்ந்தது
அதற்குப் பசித்தது
தானே இரை தேடத் தொடங்கியது

வாழ்க்கை எப்படியும்
அதை வாழப் பழக்கிவிட்டது

ஒரு விடியலில் குயில் குஞ்சு
"கூ" என்று கூவியது
அன்று தானொரு
குயில் என்று கண்டு கொண்டது.

– சே. பிருந்தா



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 195 14-03-2019 11:26:31

### கவிதையின் உட்பொருள்

குயில் ஒன்று காக்கையின் கூட்டில் முட்டையிடுகிறது. முட்டையிலிருந்து வெளிவந்த குயில்குஞ்சு தன்னைக் காக்கைக் குஞ்சாக எண்ணிக் காக்கையைப் போலவே கரைய முயல்கிறது. தனியே சென்று வாழ அஞ்சுகிறது. தான் குயில் என்பதையும் தன் குரல் இனிமையானது என்பதனையும் உணர்ந்த பிறகு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்குகிறது. நாமும் நமது ஆற்றலை உணர்ந்து கொண்டால் வாழ்வில் சாதனைகளைப் புரியலாம் என்பது இக்கவிதையின் உட்பொருள் ஆகும்.

**நூல் வெளி**

சே. பிருந்தா புகழ்பெற்ற பெண்கவிஞர்களுள் ஒருவர். மழை பற்றிய பகிர்தல்கள், வீடு முழுக்க வானம், மகளுக்குச் சொன்ன கதை ஆகிய கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

இக்கவிதை மகளுக்குச் சொன்ன கதை என்னும் நூலிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

பறவைகள், விலங்குகள் ஆகியவற்றுக்கு உரிய தனித்தன்மைகளைப் பட்டியலிடுக.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கூடு கட்டத் தெரியாத பறவை _______.

அ) காக்கை ஆ) குயில் இ) சிட்டுக்குருவி ஈ) தூக்கணாங்குருவி

2. 'தானொரு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) தா + ஒரு ஆ) தான் + னொரு இ) தான் + ஒரு ஈ) தானே + ஒரு

### குறுவினா

1. காக்கை ஏன் குயில் குஞ்சைப் போகச் சொன்னது?
2. குயில் குஞ்சு தன்னை எப்போது 'குயில்' என உணர்ந்தது?

### சிறுவினா

குயில் குஞ்சு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கிய நிகழ்வை எழுதுக.

### சிந்தனை வினா

உங்களிடம் உள்ள தனித்தன்மைகளாக நீங்கள் கருதுவன யாவை?



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 196 14-03-2019 11:26:31

உரைநடை உலகம்

இயல் ஒன்பது


# கண்ணியமிகு தலைவர்

WT2YGP

**நுழையும்முன்**

*மக்களுக்கு வழிகாட்டிய தலைவர்கள் பலர். அவர்கள் ஒவ்வொருவரும் தமக்கே உரிய தனித்தன்மையான பண்புகளால் முத்திரை பதித்துள்ளனர். எளிமை, நேர்மை, உழைப்பு, பொறுமை, நாட்டுப்பற்று முதலிய பண்புகளை ஒருங்கே கொண்டு சிறந்து விளங்கிய தலைவர் ஒருவர் 'கண்ணியமிகு' என்னும் அடைமொழியால் அழைக்கப்படுகிறார். அப்பெருமைமிகு தலைவரைப் பற்றி அறிவோம்.*

நாடு முழுவதும் மக்கள் விடுதலைப் போராட்டத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்த காலம் அது. காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்து அதில் இளைஞர்கள் திரளாகக் கலந்து கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அப்போது இளைஞர் ஒருவர் திருச்சி தூயவளனார் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தார். காந்தியடிகளின் வேண்டுகோள் அவருக்குள் தீராத விடுதலை வேட்கையை ஏற்படுத்தியது. தமது கல்வியைவிட நாட்டின் விடுதலையே மேலானது என்று எண்ணி ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார்.



## எளிமையின் சிகரம்

அந்த இளைஞர் பிற்காலத்தில் பெரிய அரசியல் தலைவராக வளர்ந்தார். அவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்குத் தனி மகிழ்வுந்தில் செல்லமாட்டார். தொடர்வண்டி, பேருந்து போன்ற பொதுப்போக்குவரத்து ஊர்திகளையே பயன்படுத்துவார். அன்பர் ஒருவர் அவருக்கு ஒரு மகிழுந்தைப் பரிசளித்தார். ஆனால் அவர் அதை ஏற்க மறுத்து எப்போதும்போல் தொடர்வண்டியிலேயே பயணம் செய்தார். அவர் சார்ந்திருந்த இயக்கத்தின் சார்பாக அவருக்கு ஒரு மகிழுந்தும் பெருந்தொகையும் பரிசளிக்கப்பட்டன. அவற்றையும் தாம் தொடங்கி வைத்த கல்லூரியின் பயன்பாட்டிற்கு அளித்துவிட்டார்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 197 14-03-2019 11:26:31

### ஆடம்பரம் அற்ற திருமணம்

அவரது குடும்ப நிகழ்வுகளிலும் எளிமையைக் காணமுடிந்தது. அவர் தம் ஒரே மகனுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தார். அவர் மிகப்பெரிய தலைவர் என்பதால் அவரது இல்லத் திருமணம் மிகவும் ஆடம்பரமாக நிகழப்போகிறது என்று எல்லாரும் எண்ணியிருந்தனர். ஆனால் எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் மிக எளிமையாகத் தம் மகனின் திருமணத்தை நடத்தி முடித்தார். பெண் வீட்டாரிடம் மணக்கொடை பெறுவது பெருகியிருந்த அக்காலத்தில் மணக்கொடை பெறாமல் அத்திருமணத்தை நடத்தினார். மேலும் "மணக்கொடை வாங்கும் திருமணங்களில் கலந்து கொள்ள மாட்டேன்" என்று வெளிப்படையாக அறிவித்தார்.

### நேர்மை

அந்தத் தலைவர் ஒருமுறை தமது இயக்க அலுவலகத்தில் இருந்த போது அங்கிருந்த பணியாளரை அழைத்தார். அவரிடம் ஓர் உறையையும் பணத்தையும் கொடுத்து, "அஞ்சல்தலை வாங்கி இந்த உறையில் ஒட்டி அஞ்சலில் சேர்த்து விடுங்கள்" என்று கூறினார். அந்தப் பணியாளர் "ஐயா நம் அலுவலகத்திலேயே அஞ்சல்தலைகள் வாங்கி வைத்துள்ளோம், அவற்றிலிருந்து ஒன்றை எடுத்து ஒட்டி விடுகிறேன்" என்றார். அதற்கு அந்தத் தலைவர், "வேண்டாம். இது நான் தனிப்பட்ட முறையில் அனுப்பும் கடிதம். அதற்கு இயக்கப் பணத்தில் இருந்து வாங்கப்பட்ட அஞ்சல்தலைகளைப் பயன்படுத்துவது முறையாகாது" என்று கூறினார்.

### மொழிக்கொள்கை

இந்தியா விடுதலை பெற்ற பிறகு நாட்டின் ஆட்சிமொழியைத் தேர்வு செய்வது தொடர்பான கூட்டம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. மிகுதியான மக்கள் பேசும் மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்றனர் சிலர். பழமை வாய்ந்த மொழியை ஆட்சிமொழியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தனர் வேறு சிலர். ஆனால் அந்தத் தலைவர் "பழமையான மொழிகளிலே ஒன்றைத்தான் ஆட்சிமொழி ஆக்க வேண்டும் என்றால், அது தமிழ்மொழிதான் என்று நான் உறுதியாகச் சொல்வேன். இன்னமும் விரிவாகச் சொல்ல வேண்டும் என்றால் திராவிட மொழிகள்தாம் இந்த மண்ணிலே முதன்முதலாகப் பேசப்பட்ட மொழிகள். அவற்றுள் மிகவும் இலக்கியச் செறிவுகொண்ட தமிழ்மொழி தான் மிகப் பழமையான மொழி. எனவே, தமிழ்மொழியை நாட்டின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

### நாட்டுப்பற்று

அந்தத் தலைவரின் உள்ளத்தில் எப்போதும் நாட்டுப்பற்று மேலோங்கி இருந்தது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே 1962 ஆம் ஆண்டு போர் மூண்டது. அப்போது தனது ஒரே மகனைப் போர்முனைக்கு அனுப்ப ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்து அந்தத் தலைவர் அப்போதைய முதன்மை அமைச்சர் ஜவகர்லால் நேருவுக்குக் கடிதம் எழுதினார்.

இத்தகைய சிறப்புகளுக்கெல்லாம் உரிய தலைவர் யார் தெரியுமா?



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 198 14-03-2019 11:26:31

அவர்தான் கண்ணியமிகு காயிதே மில்லத். அவரது இயற்பெயர் முகம்மது இசுமாயில். ஆனால் மக்கள் அவரை அன்போடு காயிதே மில்லத் என்று அழைத்தனர். 'காயிதே மில்லத்' என்னும் அரபுச் சொல்லுக்குச் சமுதாய வழிகாட்டி என்று பொருள். அப்பெயருக்கேற்ப மக்களின் வழிகாட்டியாகத் திகழ்ந்தார் அவர்.

### தெரிந்து தெளிவோம்

தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார்.

– அறிஞர் அண்ணா

இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர்.

– தந்தை பெரியார்

### அரசியல் பொறுப்புகள்

காயிதே மில்லத் 1946 முதல் 1952 வரை அப்போதைய சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். இந்திய அரசியலமைப்பு உருவாக்கக் குழு உறுப்பினராகவும் பணியாற்றினார். இந்தியா விடுதலை பெற்றபின் மாநிலங்களவை உறுப்பினர், மக்களவை உறுப்பினர் எனப் பல பொறுப்புகளில் இருந்து மக்களுக்காகத் தொண்டு செய்தார்.

### கல்விப்பணி

கல்வி ஒன்றுதான் ஒட்டுமொத்தச் சமூக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று எண்ணினார் காயிதே மில்லத். "கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை" என்ற முதுமொழிக்கு ஏற்பக் கல்வி நிறுவனங்களை உருவாக்க நினைத்தார். திருச்சியில் ஜமால் முகம்மது கல்லூரி, கேரளாவில் ஃபரூக் கல்லூரி ஆகியவற்றைத் தொடங்க அவரே காரணமாக இருந்தார்.

### தொழில்துறை

அவர் மிகச் சிறந்த தொழில்துறை அறிவுபெற்றிருந்தார். இந்திய நாட்டின் கனிம வளங்களைப் பற்றிப் நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார். இதனால் இந்திய அரசு கனிம வளங்களைப் பயன்படுத்தும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அதன் மூலம் தொழில்துறை வளர்ச்சி அடைந்தது. மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினைப் பெற்றனர்.

தலைவர்கள் பலராலும் பாராட்டப்பட்ட பண்பாளர் அவர். எல்லாரிடமும் வேறுபாடு இல்லாமல் எளிமையாகப் பழகும் தன்மை கொண்டவராக விளங்கினார். தம் வாழ்நாள் முழுவதும் சமய நல்லிணக்கத்தைப் பேணிவந்தார். இத்தகைய சிறப்பு மிக்க தலைவர்களின் பெருமைகளை அறிந்து போற்றுவது நமது கடமையாகும்.

## கற்பவை கற்றபின்

எளிமையின் அடையாளமாகத் திகழ்ந்த பிற தலைவர்கள் குறித்து வகுப்பறையில் பேசுக.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 199 14-03-2019 11:26:32

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காயிதேமில்லத் _______பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்.

அ) தண்மை ஆ) எளிமை இ) ஆடம்பரம் ஈ) பெருமை

2. 'காயிதே மில்லத்' என்னும் அரபுச் சொல்லுக்குச் _______ என்பது பொருள்.

அ) சுற்றுலா வழிகாட்டி ஆ) சமுதாய வழிகாட்டி

இ) சிந்தனையாளர் ஈ) சட்ட வல்லுநர்

3. விடுதலைப் போராட்டத்தின்போது காயிதேமில்லத் _______ இயக்கத்தில் கலந்துகொண்டார்.

அ) வெள்ளையனே வெளியேறு ஆ) உப்புக் காய்ச்சும்

இ) சுதேசி ஈ) ஒத்துழையாமை

4. காயிதே மில்லத் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று பேசிய இடம் _______.

அ) சட்டமன்றம் ஆ) நாடாளுமன்றம் இ) ஊராட்சி மன்றம் ஈ) நகர் மன்றம்

5. 'எதிரொலித்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.

அ) எதிர் + ரொலித்தது ஆ) எதில் + ஒலித்தது

இ) எதிர் + ஒலித்தது ஈ) எதி + ரொலித்தது

6. முதுமை+மொழி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______.

அ) முதுமொழி ஆ) முதுமைமொழி இ) முதியமொழி ஈ) முதல்மொழி

### குறுவினா

1. விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.
2. காயிதே மில்லத் அவர்கள் தன் குடும்பத்திலும் எளிமையைக் கடைப்பிடித்தார் என்பதற்குச் சான்றாக உள்ள நிகழ்வை எழுதுக.

### சிறுவினா

ஆட்சி மொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்குக.

### சிந்தனை வினா

நீங்கள் ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணிகளைச் செய்வீர்கள்?



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 200 14-03-2019 11:26:32

விரிவானம்

இயல்
ஒன்பது

# பயணம்

X2KHE5

நுழையும்முன்

தான் மட்டுமே மகிழ்ச்சியாக வாழ நினைப்பது மனிதப்பண்பு அன்று. பிறருக்கு உதவி செய்வதும் பிறரது சிறு சிறு ஆசைகளை நிறைவேற்றி அவர்களது மகிழ்ச்சியைக் கண்டு இன்பம் அடைவதும் சிறந்த மனிதப்பண்பு ஆகும். இதனையே ஈத்துவக்கும் இன்பம் என்று நம் முன்னோர் குறிப்பிட்டனர். பிறருக்கு உதவிசெய்து மகிழ்ந்த ஒருவரின் கதையை அறிவோம்.



இருபது ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி இது. புறநகரில் ஓர் அஞ்சலகத்தில் வேலை செய்துகொண்டிருந்த காலம்.

எனது மூன்றாவது சம்பளத்தில் நான் ஒரு மிதிவண்டி வாங்கினேன். நூற்றி எண்பது ரூபாய். மிதிவண்டியில் ஏறிப் புறப்படுவதுதான் என் பொழுதுபோக்கு. காற்றுத் தழுவ ஓட்டத் தொடங்கியதுமே அப்படியே ஓட்டிக்கொண்டே இருக்க வேண்டும் போலத் தோன்றும். தெரிந்த ஊர்கள், தெரியாத ஊர்கள் எல்லா இடங்களுக்கும் மிதிவண்டியிலேயே செல்வதுதான் என் பெரிய மகிழ்ச்சி. இரண்டு கூட்டாளிகளைச் சேர்த்துக் கொண்டு கிருஷ்ணராஜ சாகர் அணைக்கட்டு வரைக்கும் செல்வது ஐந்து ஆறு மாதத்திற்கு ஒருமுறையாவது நடக்கும். ஒருமுறை மகாபலிபுரம் சென்று வந்தோம்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 201 14-03-2019 11:26:32

ஹாசன் வழியாக மங்களூரு செல்ல வேண்டும் என்பது என் நீண்ட கால ஆசை. வழிநெடுக காடு, மலை ஆகியவற்றின் தோள்களில் என் மிதிவண்டியை உருட்டிச் செல்ல ஆர்வம் கொண்டிருந்தேன்.

அதிகாலையிலேயே கிளம்பினேன். எல்லாவற்றையும் விட்டு விடுதலையாகி வந்திருப்பதில் மனம் உற்சாகமுற்றிருந்தது. இரண்டு நாட்களில் ஹாசன் சேர்ந்துவிட்டேன்.

பகல் வெப்பத்தை ஈடு கட்டுவது போல் இரவில் கடும் மழை. விடியும் போது குளிரத் தொடங்கிவிட்டது. ஒரே இரவில் சொல்லிவைத்த மாதிரி பருவம் மாறிப் போனது. மழை நின்றபிறகு மறுநாள் பயணத்தைத் தொடங்கினேன். சக்லேஷ்பூர் வரைக்கும் சிறு சிறு தூறல். முகத்தில் பன்னீர் தெளித்த மாதிரி இருந்த தூறலில் நனைவது கூட மகிழ்ச்சியாக இருந்தது. நிற்காமல் சென்று கொண்டிருந்தேன். பெரிய இறக்கத்தில் இறங்கும்போது மிதிவண்டிச் சக்கரத்தில் காற்று இறங்கிவிட்டது. இதை நான் எதிர்பார்க்கவில்லை. ஒட்டுகிற கருவிகளும் காற்றடிக்கும் கருவியும் எப்போதும் கைவசம் இருப்பது தான் வழக்கம். இந்த முறை தன் வேலைக்காகக் கடன் வாங்கி எடுத்துச் சென்ற உறவுக்காரப் பையன் திருப்பித்தரவில்லை. தேடிப் போனபோது வீடு பூட்டிக் கிடந்தது. சரி, பார்த்துக் கொள்ளலாம் என்கிற துணிவில் கிளம்பிவிட்டேன்.

மிதிவண்டியைத் தள்ளிக்கொண்டு நடந்தேன். சுற்றிலும் மரங்கள். எட்டுகிற உயரத்தில் பெரிய பெரிய பலாப்பழங்களின் தொங்கலாட்டம். அதற்குப்பின் தேக்கு மரங்கள். தாவும் குரங்குகள். ஆள் சந்தடி எதுவும் கண்களில் படவில்லை. எவ்வளவு தூரம் நடந்திருப்பேனோ, எனக்குத் தெரியாது. மழையின் வேகத்தையும் மீறி எழுந்த குரல் என்னைத் தடுத்து நிறுத்தியபோது பாதையோரம் ஒரு குடிசை தெரிந்தது. அதன் கதவுக்கு அருகில் இருந்துதான் அந்தச் சிறுவன் குரல் கொடுத்தான். நான் குடிசையை நெருங்கினேன்.

' ரொம்ப நேரமா நனைஞ்சிட்டீங்க போல. எங்கனா நின்றிருக்கலாம்."

அவன் என்னைப் பார்த்துச் சிரித்தான். உள்ளே போய் ஒரு துண்டை எடுத்து வந்து தந்தான். மிதிவண்டியில் இருந்த என் தோள் பையை எடுத்தான். அதன் மீது இருந்த நீரை அவனே வழித்து உதறி ஓரமாக வைத்தான். இதற்குள் உள்ளே இருந்து ஒரு நடுவயதுப் பெண்மணி கதவருகே வந்து நின்றார். "அம்மா, பாவம்மா இவரு" என்று என்னைக் காட்டி அவரிடம் சொன்னான் அச்சிறுவன்.

பேசக் காத்திருந்த மாதிரி அச்சிறுவன் உற்சாகமாகக் கேள்விகளைத் தொடுக்க ஆரம்பித்தான்.

"எந்த ஊர்லேர்ந்து வரீங்க"?

" பெங்களூரு".

" மிதிவண்டியிலேவா..?"

"ம்"

அவனால் நம்ப முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. மீண்டும்



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 202 14-03-2019 11:26:32

மீண்டும் கேட்டான். அவன் கண்களில் புதுவித வெளிச்சம். மழையில் நனைந்து கொண்டிருந்த மிதிவண்டியை எட்டித் தொட்டான்.

"எவ்வளோ தூரம் இருக்கும் பெங்களூரு"?

"இருநூறு மையிலு"

"இருநூறு மையிலுமா மெதிச்சிகிட்டு வர்ரீங்க"

அவன் புருவம் உயர்ந்தது. ஏதோ ஓர் அதிசயத்தைக் கண்டது போல அவன் மனமும் குரலும் குழையத் தொடங்கின.

அவனது அம்மா மீண்டும் வந்து உள்ளே வரச்சொல்லிக் கூப்பிட்டார். நானும் அவனும் உள்ளே சென்றோம். அவசரமாய் அவர் பழம்பாய் ஒன்றை விரித்தார்.

"மிதிவண்டியில அவ்ளோ தூரம் போகலாமா?"

"போவலாமே! அதுல என்ன தப்பு? நான் கன்னியாகுமரிக்கே மிதிவண்டியில போயிருக்கேன்" .

அவன் வியப்புத் ததும்ப என்னைப் பார்த்தான்.

"உண்மையாவா"?

"ம்"

"டில்லிக்குப் போக முடியுமா?"

"ம்"

"இமயமலைக்கு"?

"ம்"

"முடியுமா?"

"ஏன் முடியாது? மனுஷனால முடியாதது எது இருக்குது? மனசு வச்சா எங்க வேணும்னாலும் போய் வரலாம்."

வாய் பிளந்து நின்றவன் முகம் திடுமெனச் சுண்டியது. கரகரத்த குரலில் சொல்லத் தொடங்கினான்.

"எனக்கு மிதிவண்டின்னா ரொம்ப ஆசை. ஆனா அம்மா வாங்கித் தரமாட்றாங்க" என்றான் அம்மாவின் பக்கம் கையைக் காட்டியபடி.

"ஏம்பா, வாய வச்சுக்கிட்டு சும்மா இருக்க முடியலையா?" என்றார் அவர். சிறுவன் குனிந்து கொண்டான். எனக்கு நொடியில் நிலைமை புரிந்தது. "இல்லப்பா, நீ ரொம்ப சின்னப் பையன் இல்லையா? ஓட்டறது கடினமாக இருக்கும். நீ பெரியவனாய்ட்டா அம்மா

வாங்கித் தருவாங்க. எங்க அம்மாகூட பெரியவனாய்ட்ட பிறகுதான் வாங்கித் தந்தாங்க" என்றேன். அந்தப் பதில் அவனுக்கு மன நிறைவாக இருந்தது. "அப்படியாம்மா?" என்று தன் அம்மாவைப் பார்த்தான் அச்சிறுவன். அவர் "ம்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றார்.

" உனக்கு ஓட்டத் தெரியுமா?"

"குரங்கு பெடல் போட்டுத்தான் ஓட்டுவேன்"

"மழை நிக்கட்டும் நான் கத்துக் கொடுக்கறேன்."

அவன் மகிழ்ச்சியுடன் தலையை அசைத்துக் கொண்டான். உடனே அவன் தனக்குத் தெரிந்த மிதிவண்டிப் பயிற்சியைப் பற்றிச் சொல்லத் தொடங்கினான்.

"அரிசிக்கெரெல மாமா வீடு இருக்குது. அங்குதான் மிதிவண்டி ஓட்டக் கத்துக்கிட்டேன். ஆனா மாமா ரொம்பக் கண்டிப்பு. அவர் இல்லாத நேரத்தில் தான் மிதிவண்டியைத் தொடமுடியும்."

அச்சிறுவன் என்னோடு சுவர் ஓரம் படுத்துக்கொண்டான். என்னிடம் கதை கேட்கத் தொடங்கினான். நான் சுற்றிய ஊர்களைப் பற்றியும் பார்த்த மனிதர்களைப் பற்றியும் கேட்டான். நான் என் சிறுவயசுக் காலத்தை எண்ணியபடி எல்லாவற்றையும் சொன்னேன். என் சின்ன வயதின் பிம்பமாக அவன் இருப்பது எனக்கு ஆனந்தமாக இருந்தது.

பொழுது விடிந்தபோது மழை விட்டிருந்தது. சிறுவன் எனக்கு முன்னால் எழுந்து மிதிவண்டி அருகில் நின்றிருந்தான். காற்று இறங்கிப் போன சக்கரத்தைக் கையால் சுற்றிக் கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் சிரித்தான். சக்கரக் கம்பியில் சிவப்பு நிறத் துண்டுத் துணி ஒன்றைக் கட்டிவிட்டு அது மேலும் கீழும் மாறி வருவதை ஓட்டிக் காட்டினான். நான் சிரித்தேன்.

"மொதல்ல சக்கரத்தைச் சரி செய்யணும்" என்றேன்.

"பக்கத்தூர்ல சந்திரேகௌடா மிதிவண்டிக் கடை வைச்சிருக்காரு. அவர் கிட்ட போவலாம்."

மிதிவண்டியைத் தள்ளிவர அவனே முன் வந்தான். அவன் கைகள் பழகிய ஒரு நாய்க்குட்டியின் கால்களைப் பற்றுவது போல மிதிவண்டியின் கைப்பிடிகளைப் பற்றின. சைக்கிள் பழுதற்றிருந்தால் ஏறிப் பறந்து விடுவான் போலத் தோன்றியது. மணியை அழுத்தி சத்தமெழுப்பிக் கொண்டே வந்தான்.

என்னைப் பற்றி விசாரித்தபடியே சந்திரேகௌடா சக்கரத்தைச் சரி செய்து, காற்றடைத்துத் தந்தார். நான் கொடுத்த பணத்தை நன்றியுடன் வாங்கிக் கொண்டார்.

வரும் போது அவனை மிதிவண்டியில் ஏறி ஓட்டி வரும்படி சொன்னேன். அவன் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. குரங்கு பெடலில் தெத்தித் தெத்தி ஓட்டினான். அவனைப் பிடித்து நிறுத்தி இருக்கையில் உட்கார வைத்து முதுகை வளைக்காமல் இருக்கும்படி சொன்னேன். கால்கள் ஓரளவு எட்டியும் எட்டாமலும் இருந்தன. தடுமாறினான். கால்

எட்டாமல் போகும் போது இடுப்பை அதிகமாக வளைத்து விழுந்தான்.

ஏறத்தாழ இரண்டு மணி நேரம் ஓட்டிக்கொண்டிருந்து விட்டுத் திரும்பினோம். அவனது அம்மா சூடாக அவல் வறுத்துத் தந்தார். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே மழை பிடித்துவிட்டது.

மழை நின்றதும் நான் கிளம்பிட நினைத்தேன். ஆனால் சிறுவன் "எனக்கு நல்லா ஓட்ட கத்துத்தரன்னுதானே சொன்னீங்க. எல்லாம் பொய் தானா?" என்று மடக்கினான்.

மழை நின்ற பிறகு அவனை அழைத்துக் கொண்டு வெளியே போனேன். மிதிவண்டியை ஓட்டிக் கொண்டே இருக்க வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான். கால் எட்டுகிறதா இல்லையா என்று அடிக்கடி தலை குனிந்து பார்த்தான். அதுதான் ஒரே குறை. மற்றபடி இடுப்பு படிந்துவிட்டது.

" மிதிவண்டி ஓட்ற மாதிரியே இல்ல. ஏதோ றெக்க கட்டி பறக்கிற மாதிரி இருக்குது" என்றான். அவன் கண்களைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

நண்பகலில் மீண்டும் மழை தொடங்கியது. சாயங்காலம்தான் நின்றது. நான் "கிளம்பட்டுமா?" என்றேன். அச்சிறுவன் முகம் போன போக்கு சரியில்லை. "வழியில மறுபடியும் பேஞ்சா என்ன செய்வீங்க?" என்றான். "எல்லாம் சமாளிச்சிடுவேன்" என்றேன். அவனும் அவன் அம்மாவும் தடுத்தார்கள். இரவு முழுக்கச் சிறுவனிடம் மிதிவண்டிப் பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டேன்.

"விடிஞ்சதும் நானும் உங்களோடு வரட்டுமா"?

" ம்" என்று உற்சாகமூட்டினேன்.

"அரிசிக்கெரெல என்ன விட்டுடுங்க. மாமா வீட்ல ரெண்டு நாள் இருந்துட்டு திரும்பிடுவேன்".

விடிந்தபோது மழை விட்டிருந்தது. அவர்களுக்குக் கொஞ்சம் பணம் தரலாம் என்று தோன்றிய எண்ணத்தை உடனடியாய் விலக்கினேன். எதுவும் தராமல் இருப்பதும் வருத்தமாக இருந்தது. விடைபெற்றுக் கொள்ளும் போது மனசில் ஊமைவலி எழுந்தது. சிறுவன் மிகவும் வாதாடி என்னுடன் வருவதற்கு அனுமதி பெற்று விட்டான். அவனது அம்மா மீண்டும் "பத்தரம் பத்தரம்" என்று திரும்பத் திரும்பச் சொன்னார். அவரது அக்கறையையும் கவலையையும் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

நாங்கள் புறப்பட்டோம். அவன் பின்னால் உட்கார்ந்து கொண்டான். அந்தச் சூழல் மிகவும் மகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது. பெரிய பெரிய மரங்கள். குன்றுகள். சிறுவன் பேசியபடி வந்தான். மிகவும் தயங்கி "நான் கொஞ்சம் ஓட்டட்டுமா"? என்றான். நான் இறங்கிச் சிறிது நேரம் அவனிடம் தந்தேன். கொஞ்சதூரம் போய்விட்டு மீண்டும் வருமாறு சொல்லிவிட்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்தேன்.

அவன் திரும்பி வந்ததும் எங்கள் பயணம் தொடர்ந்தது. பத்துப் பதினைந்து மைலுக்கு அப்புறம் மீண்டும் அவன் ஓட்டினான். வழியில் உணவகம் ஒன்றில் சாப்பிட்டோம்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 205 14-03-2019 11:26:32

அரிசிக்கெரே நெருங்கியதும் வீடுகள் தென்பட்டன. வாகனங்களும் மனித நடமாட்டமும் தெரிந்தன. மூன்று நாட்களுக்கப்புறம் மனித நடமாட்டத்தைப் பார்த்தபோது மனம் கிளர்ச்சியுற்றது .

"இன்னும் கொஞ்ச தூரம்தான் எங்க மாமா வீடு. அது வரைக்கும் நானே மிதிவண்டியில போய் வரட்டா? கொஞ்ச நேரம் அவங்க மிதிவண்டியைத் தொட்டுட்டா என்னா கத்து கத்துவாங்க தெரியுமா? இப்ப அவங்க முன்னால நான் போய் எறங்கினதுமே அதிசயப்படுவாங்க. அதுவரைக்கும் போய் வரட்டா?"

அவன் உற்சாகத்தைக் குலைக்க விருப்பமில்லை. "சரி" என்றேன். "பார்த்து பார்த்து" என்று எச்சரிப்பதற்குள் அவன் பாய்ந்துவிட்டான். நான் தேநீர் குடிக்கச் சென்றேன். குடித்து விட்டு வெளியே வந்து அவனுக்காகக் காத்திருந்தேன்.

சாலை மிகவும் பரபரப்பாக இருந்தது. வேகவேகமாகச் செல்லும் வாகனங்கள்.. மஞ்சள் துணி போர்த்திய ஆட்டோக்கள். லாரிகள். நான் சட்டென அச்சிறுவனைப் பற்றி யோசித்தேன். அவன் குடும்பம், அவன் ஆசை, அவன் வேகம் எல்லாமே மனசில் அலைமோதின. சட்டென ஒரு முடிவு எடுத்தேன். அவசரமாய்த் தெருமூலை வரைக்கும் பார்த்தேன். அவன் முகம் தெரிவது போல் இருந்தது. என்னைப் பார்த்துப் பெருமிதமாய் அவன் சிரிப்பது போலவும் இருந்தது. எதிர்பாராதவிதமாக முன்னால் வந்து நின்ற ஹாசன் பேருந்தில் சட்டென்று ஏறி உட்கார்ந்துவிட்டேன். வண்டியும் உடனே கிளம்பி விட்டது.

**நூல் வெளி**

பாவண்ணன் சிறுகதை, கவிதை, கட்டுரை எனப் பல்வேறு வகையான இலக்கிய வடிவங்களிலும் எழுதி வருகிறார். கன்னட மொழியிலிருந்து பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். வேர்கள் தொலைவில் இருக்கின்றன, நேற்று வாழ்ந்தவர்கள், கடலோர வீடு, பாய்மரக்கப்பல், மீசைக்கார பூனை, பிரயாணம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

பிரயாணம் என்னும் நூலில் உள்ள பயணம் என்னும் சிறுகதை இங்குத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

1. நீங்கள் சென்று வந்த பயணம் குறித்து வகுப்றையில் கலந்துரையாடுக.
2. நீங்கள் சுற்றுலா செல்ல மேற்கொண்ட ஆயத்தப் பணிகள் பற்றிப் பேசுக.

## மதிப்பீடு

'பயணம்' கதையைச் சுருக்கி எழுதுக.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 206 14-03-2019 11:26:32

கற்கண்டு

இயல் ஒன்பது

# ஆகுபெயர்

XMUSHP

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு.

இத்தொடரில் வெள்ளை என்னும் சொல் வெண்மை என்னும் நிறப் பொருளைத் தருகிறது. இஃது இயல்பான பெயர்ச்சொல் ஆகும்.

வீட்டுக்கு வெள்ளை அடித்தான்.

இத்தொடரில் வெள்ளை என்பது வெண்மை நிறத்தைக் குறிக்காமல் வெண்மை நிறமுடைய சுண்ணாம்பைக் குறிக்கிறது. இவ்வாறு ஒன்றன் பெயர் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய வேறு ஒன்றிற்கு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் ஆகிய ஆறு வகையான பெயர்ச்சொற்களிலும் ஆகுபெயர்கள் உண்டு.

### பொருளாகுபெயர்

மல்லிகை சூடினாள்.

மல்லிகை என்னும் ஒரு முழுப்பொருளின் பெயர் அதன் ஓர் உறுப்பாகிய மலரைக் குறிக்கிறது. இவ்வாறு பொருளின் பெயர் அதன் சினையாகிய உறுப்புக்கு ஆகிவருவது பொருளாகுபெயர் எனப்படும். இதனை முதலாகு பெயர் எனவும் கூறுவர்.

### இடவாகு பெயர்

சடுகுடு போட்டியில் தமிழ்நாடு வெற்றி பெற்றது.

தமிழ்நாடு என்னும் பெயர் அவ்விடத்தைச் சேர்ந்த விளையாட்டு அணியைக் குறிப்பதால் இஃது இடவாகு பெயர் ஆகும்.

### காலவாகு பெயர்

திசம்பர் சூடினாள்.

இத்தொடரில் திசம்பர் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் மலரும் பூவைக் குறிப்பதால் இது காலவாகு பெயர் ஆயிற்று.

### சினையாகு பெயர்

தலைக்கு ஒரு பழம் கொடு

இத்தொடருக்கு ஆளுக்கு ஒரு பழம் கொடு என்பது பொருளாகும். இவ்வாறு சினையின் (உறுப்பின்) பெயர் முதலாகிய பொருளுக்கு ஆகிவருவது சினையாகு பெயர் எனப்படும்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 207 14-03-2019 11:26:32

### பண்பாகுபெயர்

இனிப்பு தின்றான்.

இத்தொடரில் இனிப்பு என்னும் பண்புப் பெயர் தின்பண்டத்தைக் குறிப்பதால் இது பண்பாகுபெயர் ஆயிற்று.

### தொழிலாகு பெயர்

பொங்கல் உண்டான்.

இத்தொடரில் பொங்கல் (பொங்குதல்) என்னும் தொழிற்பெயர் அத்தொழிலால் உருவான உணவினைக் குறிப்பதால் இது தொழிலாகு பெயர் ஆகும்.

## இரட்டைக்கிளவி

தங்கை விறுவிறுவென நடந்து சென்று தோட்டத்தில் மலர்ந்த மலர்களைக் கலகலவெனச் சிரித்தபடியே மளமளவெனக் கொய்யத் தொடங்கினாள்.

இத்தொடரிலுள்ள விறுவிறு, கலகல, மளமள ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இவை ஒவ்வொன்றிலும் அசைச்சொற்கள் இரண்டிரண்டாக இணைந்து வந்துள்ளன. அவற்றைப் பிரித்துப் பார்த்தால் பொருள் தரவில்லை. இவ்வாறு இரட்டையாக இணைந்து வந்து, பிரித்தால் தனிப்பொருள் தராத சொற்களை இரட்டைக்கிளவி என்பர்.

## அடுக்குத்தொடர்

சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தனர். அமுதன் திடீரென, பாம்பு பாம்பு பாம்பு என்று கத்தினான். எங்கே எங்கே? என்று கேட்டபடியே மற்ற சிறுவர்கள் அவனருகே ஓடிவந்தனர். "இல்லை இல்லை. சும்மாதான் சொன்னேன்" என்று சொல்லிச் சிரித்தபடியே ஓடினான் அமுதன். "அவனைப் பிடி பிடி பிடி பிடி" என்று கத்திக்கொண்டே மற்றவர்கள் துரத்தினார்கள்.

இப்பகுதியில் சில சொற்கள் இரண்டு, மூன்று, நான்கு முறை இடம்பெற்றுள்ளன. இவ்வாறு அச்சம், விரைவு, சினம் போன்ற காரணங்களால் ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட முறை தொடர்ந்து வருவதை அடுக்குத்தொடர் என்பர். அடுக்குத் தொடரில் பலமுறை இடம்பெறும் ஒவ்வொரு சொல்லும் பொருளுடையது.

### அடுக்குத்தொடர் இரட்டைக்கிளவி – ஒப்பீடு

அடுக்குத்தொடரில் உள்ள சொற்களைத் தனித்தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்குப் பொருள் உண்டு. இரட்டைக் கிளவியைப் பிரித்தால் அது பொருள் தருவதில்லை.

அடுக்குத் தொடரில் ஒரே சொல் இரண்டு முதல் நான்கு முறை வரை வரும். இரட்டைக்கிளவியில் ஒரு சொல் இரண்டு முறை மட்டுமே வரும்.

அடுக்குத் தொடரில் சொற்கள் தனித்தனியே நிற்கும். இரட்டைக் கிளவியின் சொற்கள் இணைந்தே நிற்கும்.

அடுக்குத் தொடர் விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள்கள் காரணமாக வரும். இரட்டைக்கிளவி வினைக்கு அடைமொழியாகக் குறிப்புப் பொருளில் வரும்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 208 14-03-2019 11:26:32

## கற்பவை கற்றபின்

1. பள்ளி நூலகத்திலிருந்து நூல் ஒன்றை எடுத்துவந்து அந்நூலில் ஆகுபெயர்களாக இடம் பெற்றுள்ள பெயர்ச்சொற்களைத் தொகுக்க.
2. அன்றாடப் பேச்சு வழக்கில் இடம்பெறும் அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி ஆகியவற்றைத் தொகுக்க.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகி வருவது ______.

   அ) பொருளாகு பெயர்   ஆ) சினையாகு பெயர்

   இ) பண்பாகுபெயர்   ஈ) இடவாகு பெயர்

2. இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது என்பது ______.

   அ) முதலாகு பெயர்   ஆ) சினையாகு பெயர்

   இ) தொழிலாகு பெயர்   ஈ) பண்பாகுபெயர்

3. மழை சடசடவெனப் பெய்தது. – இத்தொடரில் அமைந்துள்ளது ______.

   அ) அடுக்குத்தொடர்   ஆ) இரட்டைக்கிளவி

   இ) தொழிலாகு பெயர்   ஈ) பண்பாகுபெயர்

4. அடுக்குத் தொடரில் ஒரே சொல் ______ முறை வரை அடுக்கி வரும்.

   அ) இரண்டு   ஆ) மூன்று   இ) நான்கு   ஈ) ஐந்து

குறுவினா

1. ஒரு பெயர்ச்சொல் எப்போது ஆகுபெயர் ஆகும்?
2. இரட்டைக் கிளவி என்பது யாது? சான்று தருக.

சிறுவினா

1. பொருளாகு பெயரையும் சினையாகு பெயரையும் வேறுபடுத்துக.
2. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் – ஒப்பிடுக.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 209 14-03-2019 11:26:33

## மொழியை ஆள்வோம்!

Y3DMJ1

### கேட்க.

மனித நேயம் பற்றித் தலைவர்கள் ஆற்றிய உரைகளைக் கேட்டு மகிழ்க.

### கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றைப் பற்றி இரண்டு நிமிடம் பேசுக.

அ) உண்மை ஆ) மனிதநேயம் இ) உதவிசெய்து வாழ்தல்

### சொல்லக் கேட்டு எழுதுக.

1. மனித வாழ்க்கையில் தேவைப்படுவது பொறுமை.
2. குயில் குளிரில் நடுங்கியது; மழையில் ஒடுங்கியது; வெயிலில் காய்ந்தது.
3. இரக்கம் உடையோர் அருள்பெற்றவர் ஆவர்.
4. காயிதே மில்லத் என்னும் சொல்லுக்குச் "சமுதாய வழிகாட்டி" என்று பொருள்.
5. விடியும் போது குளிரத் தொடங்கிவிட்டது.

### கீழ்க்காணும் தலைப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கவிதை எழுதுக.

அ) அன்பு ஆ) தன்னம்பிக்கை

### சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.

(எனவே, ஏனெனில், அதனால், ஆகையால், அதுபோல, இல்லையென்றால், மேலும்)

(எ.கா.) காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர். ஏனெனில் அவர் எளிமையை விரும்பியவர்.

1. நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும். ___________ துன்பப்பட நேரிடும்.
2. குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது. ______________ காக்கையின் கூட்டில் முட்டையிடும்.
3. அதிக அளவில் மரங்களை வளர்ப்போம். _____________ மரங்கள்தான் மழைக்கு அடிப்படை.
4. பிறருக்குக் கொடுத்தலே செல்வத்தின் பயன். _________ பிறருக்குக் கொடுத்து மகிழ்வோம்.
5. தமிழகத்தில் மழை பெய்துவருகிறது. _____________ இரண்டு நாட்கள் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வுமையம் அறிவிப்பு.




7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 210 14-03-2019 11:26:33

**கடிதம் எழுதுக.**

உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

## மொழியோடு விளையாடு

**குறிப்புகளைப் பயன்படுத்தி இடமிருந்து வலமாகக் கட்டங்களை நிரப்புக.**




1. நூலகத்தில் இருப்பவை _ _ _ _ _ _ _ _ . நூல்கள் நிறைந்துள்ள இடம் _ _ _ _ _ _ _ _ _ _ _ .
2. உலகப்பொதுமறை _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ . புரட்சிக்கவிஞர் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ .
3. முனைப்பாடியார் இயற்றியது _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ . நீதிநெறி விளக்கம் பாடியவர் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
4. குற்றால மலைவளத்தைக் கூறும் நூல் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ . சுரதா என்பதன் விரிவாக்கம் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ .
5. குற்றாலக் குறவஞ்சி பாடியவர் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ .

**கீழ்க்காணும் படங்களைப் பார்த்து இரட்டைக்கிளவி அமையுமாறு தொடர் உருவாக்குக.**






(எ.கா.) மழை சடசட வெனப் பெய்தது.

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 211 14-03-2019 11:26:33

கீழ்க்காணும் அறிவிப்பைப் படித்து அதன்பின் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்க.

## தீ விபத்தும் பாதுகாப்பு முறைகளும்

### முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

- வீடுகளிலும் பொது இடங்களிலும் தீ பாதுகாப்புக் கருவிகள் பொருத்தப் பட்டிருக்கவேண்டும்.
- பொது இடங்களில் தீத்தடுப்பு எச்சரிக்கை ஒலிப்பான்கள் பொருத்தப் பட்டிருக்கவேண்டும்.
- எச்சரிக்கை ஒலி எவ்வாறு இருக்கும் என்பதைப் பணியாளர்கள் அறிந்திருக்கவேண்டும்.
- தரமான மின் சாதனங்களையே பயன்படுத்தவேண்டும்.
- சமையல் செய்யும் போது இறுக்கமான ஆடைகளை உடுத்திக் கொள்ள வேண்டும்.
- பட்டாசுகளைப் பாதுகாப்பான இடங்களில், பெரியவர்களின் மேற்பார்வையில்தான் வெடிக்க வேண்டும்.
- நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குத் தீத்தடுப்புப் பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும்.
- பொதுமக்கள் கூடும் இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக வெளியேறும் வகையில் அவசரகால வழிகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்




### தீ விபத்து ஏற்பட்டால் செய்ய வேண்டியவை

- உடனடியாகத் தீயணைப்பு மீட்புப் பணித் துறைக்குத் தொலைபேசி வழியாகத் தகவல் தெரிவிக்க வேண்டும்.
- அவ்வாறு தகவல் தெரிவிக்கும் பொழுது தீவிபத்து ஏற்பட்டுள்ள இடத்தினைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.
- தீ விபத்து ஏற்பட்டு இருக்கும் பகுதியில் உடனடியாக மின் இணைப்பைத் துண்டிக்கவேண்டும்.
- தீ விபத்து ஏற்பட்ட உடனே அங்குள்ள தீயணைப்பான்களைக் கொண்டு ஆரம்பக் கட்டத்திலேயே தீயை அணைக்க முயற்சி செய்யவேண்டும்.
- உடுத்தியிருக்கும் ஆடையில் தீப்பிடித்தால் உடனே தரையில் படுத்து உருளவேண்டும்.
- தீக்காயம் பட்ட இடத்தை உடனடியாகத் தண்ணீரைக் கொண்டு குளிர வைக்க வேண்டும்.
- பொது இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் பதற்றமடைந்து ஓடாமல், அவசரகால வழியில் வெளியேற வேண்டும்.
- அருகில் இருக்கும் கட்டடங்களுக்குத் தீ பரவாமல் இருக்கும் வகையில் முன்னெச்சரிக்கை செய்யவேண்டும்.









7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 212 14-03-2019 11:26:33

## தீ விபத்து ஏற்படும் போது செய்யக் கூடாதவை

- ➢ தீ விபத்து ஏற்பட்டுள்ள கட்டடத்தின் மின் தூக்கியைப் பயன்படுத்தக்கூடாது.
- ➢ எண்ணெய் உள்ள இடத்தில் ஏற்பட்ட தீயை அணைக்கத் தண்ணீரைப் பயன்படுத்தக் கூடாது.
- ➢ தீக்காயம் பட்ட இடத்தில் எண்ணெய், பேனா மை போன்றவற்றைத் தடவக்கூடாது.

### வினாக்கள்

1. தீ விபத்தினால் பெரிய பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு, செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?
2. தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாகச் செய்ய வேண்டிய செயல்கள் யாவை?
3. பொது இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் வெளியேறும் முறையைக் கூறுக.
4. தீ விபத்து ஏற்பட்டால் செய்யக்கூடாதவை யாவை?
5. உடலில் தீப்பற்றினால் செய்யவேண்டிய முதலுதவி யாது?

## நிற்க அதற்குத் தக...

### என் பொறுப்புகள்...

1. நான் எப்போதும் எளிமையைக் கடைப்பிடிப்பேன்.
2. அனைவரிடமும் அன்புடன் நடந்து கொள்வேன்.
3. என் பணிகளை நேர்மையாகச் செய்வேன்.
4. நான் என்றும் பொறுமையுடன் இருப்பேன்.

### கலைச்சொல் அறிவோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **சமயம்** | – | *Religion* | **தத்துவம்** | – | *Philosophy* |
| **எளிமை** | – | *Simplicity* | **நேர்மை** | – | *Integrity* |
| **ஈகை** | – | *Charity* | **வாய்மை** | – | *Sincerity* |
| **கண்ணியம்** | – | *Dignity* | **உபதேசம்** | – | *Preaching* |
| **கொள்கை** | – | *Doctrine* | **வானியல்** | – | *Astronomy* |

## இணையத்தில் காண்க

மனிதநேயத்தை வலியுறுத்தும் நிகழ்வுகளை இணையத்தில் தேடிக் காண்க.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 213 14-03-2019 11:26:34

# திருக்குறள்

YBW6GG

## 17. அழுக்காறாமை

1. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

2. விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லை யார்மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

3. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணாது அழுக்கறுப் பான்.

4. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

5. அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது.

6. கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

7. அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

8. அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

9. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

10. அழுக்கற்று அகன்றாரும் இல்லைஅஃது இல்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.

## 19. புறங்கூறாமை

1. அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது.

2. அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

3. புறம்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும்.

4. கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல்.

5. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையால் காணப் படும்.

6. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

7. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

8. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு.

9. அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

10. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 214 14-03-2019 11:26:34

## 25. அருளுடைமை

1. அருள்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருள்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

2. நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான்
தேரினும் அஃதே துணை.

3. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

4. மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

5. அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி.

6. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.

7. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

8. பொருள்அற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார்
அற்றார்மற்று ஆதல் அரிது.

9. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

10. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.

## 30. வாய்மை

1. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

2. பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

3. தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

4. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

5. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை.

6. பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

8. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

10. யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் அல்ல பிற.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 215 14-03-2019 11:26:34

## 39. இறைமாட்சி

1. படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

2. அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.

3. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.

4. அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு.

5. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

6. காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

7. இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் உலகு.

8. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.

9. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

10. கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி.

## 40. கல்வி

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

2. எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.

3. கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண்உடையர் கல்லா தவர்.

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

6. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

7. யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

9. தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

10. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 216 14-03-2019 11:26:34

## 47. தெரிந்து செயல் வகை

1. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

2. தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.

3. ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

4. தெளிவு இலதனைத் தொடங்கார் இளிவுஎன்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்.

5. வகையறச் சூழாது எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு.

6. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

7. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

8. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

9. நன்றுஆற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை.

10. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

## 53. சுற்றந்தழால்

1. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

2. விருப்புஅறாச் சுற்றம் இயையின் அருப்புஅறா
ஆக்கம் பலவும் தரும்.

3. அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடுஇன்றி நீர்நிறைந் தற்று.

4. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வம்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

5. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்.

6. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்.

7. காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

8. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.

9. தமராகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

10. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 217 14-03-2019 11:26:34

## 61. மடியின்மை

1. குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசுஊர மாய்ந்து கெடும்.
2. மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.
3. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து.
4. குடி மடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு.
5. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.
6. படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது.
7. இடிபுரிந்து எள்ளும்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர்.
8. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்.
9. குடிஆண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடிஆண்மை மாற்றக் கெடும்.
10. மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு.

## 63. இடுக்கண் அழியாமை

1. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்துஊர்வது அஃதொப்பது இல்.
2. வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.
3. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.
4. மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.
5. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும்.
6. அற்றேம்என்று அல்லல் படுபவோ பெற்றேம்என்று
ஓம்புதல் தேற்றா தவர்.
7. இலக்கம் உடம்புஇடும்பைக்கு என்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல்.
8. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.
9. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்.
10. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 218 14-03-2019 11:26:35

## 68. வினை செயல்வகை

1. சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு
   தாழ்ச்சியுள் தங்குதல் தீது.
2. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
   தூங்காது செய்யும் வினை.
3. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
   செல்லும்வாய் நோக்கிச் செயல்.
4. வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
   தீயெச்சம் போலத் தெறும்.
5. பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
   இருள்தீர எண்ணிச் செயல்.
6. முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
   படுபயனும் பார்த்துச் செயல்.
7. செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
   உள்ளறிவான் உள்ளம் கொளல்.
8. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
   யானையால் யானையாத் தற்று.
9. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
   ஒட்டாரை ஒட்டிக் கொளல்.
10. உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
   கொள்வர் பெரியார்ப் பணிந்து.

## 73. அவை அஞ்சாமை

1. வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
   தொகையறிந்த தூய்மை யவர்.
2. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
   கற்ற செலச்சொல்லு வார்.
3. பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
   அவையகத்து அஞ்சா தவர்.
4. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
   மிக்காருள் மிக்க கொளல்.
5. ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
   மாற்றங் கொடுத்தற் பொருட்டு.
6. வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்
   நுண்ணவை அஞ்சு பவர்க்கு.
7. பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
   அஞ்சு மவன்கற்ற நூல்.
8. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
   நன்கு செலச்சொல்லா தார்.
9. கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
   நல்லார் அவைஅஞ்சு வார்.
10. உளர்எனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்
   கற்ற செலச்சொல்லா தார்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 219 14-03-2019 11:26:35

## 74. நாடு

1. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

2. பெரும்பொருளால் பெட்டக்கது ஆகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.

3. பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறைஒருங்கு நேர்வது நாடு.

4. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

5. பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

6. கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை.

7. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.

8. பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்குஇவ் வைந்து.

9. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

10. ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்துஅமை வில்லாத நாடு.

## 75. அரண்

1. ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தன்
போற்று பவர்க்கும் பொருள்.

2. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்.

3. உயர்வுஅகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவுஅரண் என்றுரைக்கும் நூல்.

4. சிறுகாப்பின் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண்.

5. கொளற்குஅரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்குஎளிதாம் நீரது அரண்.

6. எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துஉதவும்
நல்லாள் உடையது அரண்.

7. முற்றியும் முற்றாது எறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரியது அரண்.

8. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வது அரண்.

9. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்டது அரண்.

10. எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 220 14-03-2019 11:26:35

## 98. பெருமை

1. ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு
அஃதுஇறந்து வாழ்தும் எனல்.

2. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

3. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்.

4. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டுஒழுகின் உண்டு.

5. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

6. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.

7. இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்பும்தான்
சீரல் லவர்கண் படின்.

8. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

9. பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

10. அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

---

வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும். அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் எளிதில் படித்துப் பொருள் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சீர்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன; அலகிடுவதற்காக அல்ல.

## திருக்குறள் கருத்துகளை மாணவர்களிடையே பரப்புவதற்கான வழிகாட்டுதல்கள்

- நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் திருக்குறளைப் பொருளுடன் கூறலாம்.
- வகுப்பு வாரியாகத் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி நடத்தலாம்.
- இலக்கிய மன்றக் கூட்டங்களில் குறட்பாக்கள் தொடர்பான கதைகளைக் கூறலாம்.
- திருக்குறள் கருத்துகளை விளக்கும் நாடகங்களை நடத்தச் செய்யலாம்.
- திருக்குறள் கருத்துகளை விளக்கும் ஓவியப் போட்டியை நடத்தலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து வினாடி வினா நடத்தலாம்.
- சான்றோர் வாழ்வில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகள் மூலம் திருக்குறள் கருத்துகளை விளக்கலாம்.



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 221 14-03-2019 11:26:35

# ஏழாம் வகுப்பு – தமிழ்
## ஆக்கம்

### பாட வல்லுநர் குழு
**முனைவர் நா. அருள்முருகன்**
இணை இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை.

**முனைவர் இராம. பாண்டுரங்கன்**
இணை இயக்குநர், (பணிநிறைவு),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

### மேலாய்வாளர் குழு
**முனைவர் பொன். குமார்**
இணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

**திருமதி ஏ.எஸ். பத்மாவதி**
எழுத்தாளர், சென்னை.

**முனைவர் து. கணேசமூர்த்தி**
முதன்மைக்கல்வி அலுவலர், சேலம் மாவட்டம்.

**முனைவர் பூந்துறயான் இரத்தினமூர்த்தி**
முதுநிலை ஆசிரியர் (பணி நிறைவு),
கள்ளிப்பட்டி, ஈரோடு மாவட்டம்.

**முனைவர் ப. கல்பனா**
இணைப்பேராசிரியர்,
பாரதி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பாரிமுனை, சென்னை.

**முனைவர் சு. தாமரைப்பாண்டியன்**
உதவிப் பேராசிரியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

### பாடநூல் ஒருங்கிணைப்பு
**முனைவர் மு. தீபாஞ்சி**
துணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

**திருமதி மு. செல்வி**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர் நிலைப் பள்ளி, சேரி,
காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

### கலை மற்றும் வடிவமைப்புக்குழு

#### ஓவியம் மற்றும் ஒளிப்படம்
**திரு க.த. காந்திராஜன்**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக் கழகம், சென்னை.

**திரு. கே. புகழேந்தி**
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, கரம்பக்குடி,
புதுக்கோட்டை மாவட்டம்.

**திரு. அ. ஜேம்ஸ்பாண்ட்**
ஓவிய ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அறந்தாங்கி,
புதுக்கோட்டை மாவட்டம்.

**திரு. சி. தெய்வேந்திரன்**
ஓவிய ஆசிரியர், அரசு உயர் நிலைப் பள்ளி, மாங்குளம்,
மதுரை மாவட்டம்.

**திரு. கா. தனஸ் தீபக் ராஜன்,** ஓவியர்
**திரு. கா. நளன் நான்சி ராஜன்,** ஓவியர்

#### பக்க வடிவமைப்பாளர்
**பழையவலம் பா. இராமநாதன்**
சென்னை.

#### தரக் கட்டுப்பாடு
**திரு. இரா. மனோகர்**
**திரு. வே.சா. ஜாண்ஸ்மித்**

#### அட்டைப்படம்
**திரு. கதிர் ஆறுமுகம்**

#### ஒருங்கிணைப்பு
**திரு. ரமேஷ் முனிசாமி**

### பாடநூலாசிரியர் குழு
**திரு. மு. சேகரன்**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

**திரு. நி. சிவக்குமார்**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
குமுளூர், திருச்சி மாவட்டம்.

**திரு. கு. சம்பந்தம்**
முதுநிலை ஆசிரியர் (பணிநிறைவு)
டி.ஆர்.பி.சி.சி.சி. இந்து மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர்.

**திரு. சிவ. முரளி**
பட்டதாரி ஆசிரியர், ஜே.எப்.மேல்நிலைப் பள்ளி, புலிவலம்,
திருச்சி மாவட்டம்.

**திரு. த. ஜீவானந்தம்**
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
அட்டப்பட்டி, கொட்டாம்பட்டி ஒன்றியம், மதுரை மாவட்டம்.

**முனைவர் ப. மெய்யப்பன்**
ஆசிரியப் பயிற்றுநர், வட்டார வளமையம், பவானிசாகர்,
ஈரோடு மாவட்டம்.

**திருமதி நா. ஜானகி**
பட்டதாரி ஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
சின்னத்தடாகம், கோவை மாவட்டம்.

**திரு. வெ. பாலமுருகன்**
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, ஆரம்பாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்.

**திருமதி ப. செந்தில் குமாரி**
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
முதல்மைல், கூடலூர், நீலகிரி மாவட்டம்.

**திரு. க. சிவகுமார்**
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, ஏலாக்குறிச்சி,
அரியலூர் மாவட்டம்.

**திரு. ம. மீனாட்சி சுந்தரம்**
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, சருகுவலையபட்டி,
மதுரை மாவட்டம்.

**திரு. மா. பழனி**
தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
சின்னப்பள்ளத்தூர், பென்னாகரம், தருமபுரி மாவட்டம்.

**திரு. வே. செந்தில்சிவகுமார்**
பட்டதாரிஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பொட்டல்புதூர்,
திருநெல்வேலி மாவட்டம்.

**திரு. ஜே. ஆரோக்ய டொமினிக்ராஜ்**
பட்டதாரி ஆசிரியர், கார்மல் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

### விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு
**திரு. இரா. ஜெகநாதன்**
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
கணேசபுரம்- போளூர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

**திரு. ந. ஜெகன்**
பட்டதாரி ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
உத்திரமேரூர், காஞ்சிபுரம்.

**திருமதி ஆ. தேவி ஜெஸிந்தா**
அரசு உயர்நிலைப் பள்ளி, என்.எம். கோவில், வேலூர்.

இந்நூல் 80 GSM மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர் ;




7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 222 14-03-2019 11:26:35